கோகுலம்

GOKULAM

செப்டம்பர் '91 ரூ. 3/-



பாரீஸ் பிஸ்கட்டுகள்

"வாழ்க்கை சுவையாக இருக்கவேண்டும்"
இதைச் சொல்லப் பல வழிகள் உண்டு...



வாழும் வாழ்வில் சுவை இருக்கவேண்டும். மனத்துக்கினிய மணம் இருக்கவேண்டும். அதற்கு பாரீஸ் காட்டும் வழி: சாறுள்ள பைனாப்பிள் கிரீம் சாறு செறிந்த ஆரஞ்சு கிரீம் கெட்டியான சாக்லேட் கிரீம் புத்துணர்ச்சி தரும் கார்டமம் கிளாஸிக் சத்து நிறைந்த குளுக்கோஸ் உடல்நலத்திற்கு மில்க் பிஸ்கட்டுகள் எந்நேரத்திற்கும் ஏற்ற மாரி வாழ்வில் சுவை கூட்ட இவை எல்லாம் சேர்ந்து சிறந்த சுவையை அள்ளித் தருகின்றன.

பாரீஸ் – அனைவரும் விரும்பும் தரமான பிஸ்கட்டுகள். மிட்டாய்கள்.

PARRYS

Parry's
FRESH & CRISP BISCUITS



கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.

1991 செப்டம்பர் மாத இதழ்
மலர் : 9 இதழ் : 8

அருமைச் சிறுவர் சிறுமியரே!

புதிய வகுப்பில் அமர்ந்து, புதிய பாடங்களில் கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பீர்களே!

இந்த செப்டெம்பர் 5 ஆம் நாள் 'ஆசிரியர் தினம்'. டாக்டர் எஸ். ராதா கிருஷ்ணன் பிறந்த நாள்தான் அது. ''ஆசிரியர்களுக்குப் பெருமை தராத நாடு, புதை குழியில் சிக்கிய மனிதனுக்குச் சமம்'' என்றார் அரிஸ் டாட்டில். கல்விக் கண்களைத் திறக்க வைத்து, அறிவுச் சுடரை ஏற்றி வைக்கும் ஆசிரியப் பெருமக்களுடைய சமுதாயத் தொண்டு மகத்தானது. குழந்தைகளிடையே ஆசிரியப் பெருமக்கள் குறித்த மரியாதை உணர்வை மேம்படவைக்க கோகுலம் உதவி வருவதை அனைவரும் அறிவர். இந்த ஆசிரியர் தினத்தன்று நீங்கள் அனைவரும் உங்கள் ஆசிரியர்களைச் சந்தித்து வணங்கி, அவர்களது நல்லாசிகளைப் பெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

பேராசிரியர் 'கல்கி' அவர்களின் பிறந்த நாளும் இந்த மாதம் 9 ஆம் தேதி வருகிறது. அந்தக் காலத்தில் வெளிவந்த கல்கி இதழ்களில், அவர் குழந்தைகளுக்கென ஒதுக்கிய வண்ணப் பக்கங்களைப் பார்க்கும் போது, குழந்தை இலக்கியத்தில் அவருக்கிருந்த ஈடுபாட்டை உணர முடிகிறது. வசதிகளே இல்லாத அந்தக் காலத்தில், நாட்டின் விடுதலைப் போராட்டத் திற்காகப் பயன்படுத்திய அந்தத் துணிவும் வனப்பும் மிக்க எழுத்தை எண்ணும் போது பிரமிப்பாக உள்ளது. பத்திரிகை உலகில் கல்கி புரிந்த சாதனைகள் இன்னமும் கூட வியப்பளிப்பதாகவே உள்ளன.

கல்கியின் பெருமைகளைக் கூறும் பாடலொன்று இவ்விதழில் இடம் பெறுகிறது.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



வேடம் போட்ட பெருமையை விளக்க வந்தோம் கேளுங்க!

6 பேர் - அனுபவம்



◆ ஜி. கற்பகம்

ஜி. கற்பகம் : பள்ளிக்கூடத்தில், மாறுவேடப் போட்டியில் பங்கு பெறலாம் என்று அறிவித்த உடனேயே நான் நாரதர் வேஷம் போடணும்னு தீர்மானிச்சிட்டேன். அம்மா அப்பாகிட்ட சொன்ன போது, 'எதுக்கு நாரதர் வேஷம் போடறே? கிருஷ்ணர், ராமர்னு போடக் கூடாதா? இல்லாட்டி ஆண்டாள், மீரான்னு பொண்ணா லட்சணமா வேஷம் போடேன்'ன்னு சொன்னாங்க.' நாரதர்தான் எங்களைப் போல கோள் மூட்டுவார்; சண்டை மூட்டி விடுவார். அப்புறம் தானே அதைப் பாத்து ரசிப்பார். ஆனா அதெல்லாம் நன்மைக்காகத் தான் பண்ணுவார். சின்னப் பசங்களும் அனாவசிய சந்தோஷத்துக்காகக் கோள் மூட்டாம, நல்ல காரியம் நடக்கறதுக்காகக் கோள் மூட்டினா தப்பில்லேன்னு சொல்வீங்களே, அதுக்காகத்தான் நாரதர் வேஷம் போடப் போறேன்னு சொன்னேன். உடனே அம்மாவும் அப்பாவும் 'ஒகே'ன்னுட்டாங்க.

ஆர். கோகுலகிருஷ்ணன் : எனக்கு சங்கீதம்னா ரொம்ப பிடிக்கும். ரொம்பன்னா எவ்ளோ தெரியுமா? கச்சேரி பண்ற அளவுக்கு! ஆமாம், டீ.வில கண்மணிபூங்கால கர்நாடக சங்கீத பாட்டுப் பாடியிருக்கேன்! எங்க அப்பா வேலை செய்யற ரயில்வே ஆபீஸ்ல கச்சேரி பண்ணியிருக்கேன்! இப்ப ரெண்டு மணி நேரம் பக்க வாத்யத்தோட கச்சேரி பண்ணிகிட்டு வர்றேன். எங்க ஸ்கூல்ல மாறுவேடப் போட்டி வெச்சப்ப, எனக்கு பாட்டு சொல்லிக்குடுத்த என் அத்தை, அம்மா, தாத்தாவெல்லாம் 'நீதான் அழகா பாடறியே; உன் குரல் கூட பெண் குரல் மாதிரி இருக்கு. பொம்பளை வேஷம் போடேன்' அப்படீன்னாங்க. நான் போட்டுக்கமாட்டேன், வெக்கப்படுவேன்னு நினச்சாங்க போலிருக்கு! 'போட்டுடுங்க, நான் மேடையிலே பெண் மாதிரி போய் நிக்கறது

◆ என். ரேவதி



மட்டுமில்லே; பாடிக்காட்டி பரிசும் வாங்கிண்டு வரேன்!' அப்டீன்னேன். அதே மாதிரி அழகா, பாவாடை, சட்டை போட்டுண்டு போய் நின்னு பரிசும் வாங்கிண்டு வந்தேன்!

என். கீதா : எங்க வீட்டு விசேஷங்களுக்கு சாஸ்திரிகள் மாமா வருவாங்க. அவங்க மந்திரம் சொல்லும் போதெல்லாம் உன்னிப்பா கவனிப்பேன். அவங்க போனப்பறம் அவங்களை மாதிரியே சொல்லிக் காமிப்பேன். 'கேலி பண்ணாதே கீதா' அப்டீன்னு அம்மா சொல்வாங்க. 'நான் கேலி பண்லேம்மா; மாமா மாதிரியே சொல்லிப் பார்த்தேன். வேணுன்னா ஒன்னை மாதிரியே சொல்லிக் காட்டட்டா' அப்டீன்னு கேட்டு, அம்மா மாதிரியே பேசிக் காமிச்சேன். அசந்துட்டாங்க. அந்த சமயம் பார்த்து, எங்க ஸ்கூல்ல மாறுவேடப் போட்டி வெச்சாங்களா, 'சாஸ்திரிகள் மாதிரி விட்டில சொல்லி நடித்துக் காட்டறியே, அதே மாதிரி வேஷம் போட்டுக்கோயேன்' அப்டீன்னு அம்மா யோசனை சொன்னாங்க. அதே மாதிரியே வேஷம் போட்டேன்! எல்லாரும் வேஷம் கனஜோர்னு பாராட்டினாங்க.

டி. தினேஷ் : சட்டைக்குள்ள முதுகு பக்கத்துல நாலஞ்சு தொடப்பக்குச்சியை சொருகி வெச்சுகிட்டேன். அதே மாதிரி தொடப்பக்குச்சில பண்ணின வில் ஒண்ணு என் கைல. சினிமால, டீ.வில வர்ரா மாதிரி, ஸ்டைலா முதுகு பக்கத்தேருந்து 'அம்பை' எடுத்து வில்ல வெச்சு 'விஷ்க்'னு விடுவேன். ''டேய், பார்த்து. வெளில போய் விளையாடு. வீட்ல யார் கண்லயாவது பட்டுடும். வெளிலயும் யார் கிட்டயும் போகாம ரொம்ப தள்ளி நின்னுண்டு அம்பு விடு'' அப்டீன்னு அப்பா சொன்னார். 'நான்தான் ராமர்!' அப்டீன்னு சொல்லிண்டே வெளில ஓடிப்போனேன். அந்த வருஷம் எங்க ஸ்கூல்ல மாறு வேடப் போட்டி நடந்தப்ப நான் ராமர் வேஷம் போடப்



✤ டி. தினேஷ்

✤ என். கீதா



பள்ளிக்கூட ஆண்டு விழா கொண்டாட்டங்கள் என்றாலே சிறுவர் சிறுமியர்க்குக் கொண்டாட்டம்தான். கலையார்வம் மிக்க குழந்தைகள் பாடல், நடனம், நடிப்பு என்று பல நிகழ்ச்சி களில் தங்கள் தனித் திறமைகளைக் காட்டி பார்ப்பவர்களை அசத்துவார்கள்! மாறுவேடப் போட்டி யும் அதில் இருக்கும். இத்தகைய மாறுவேடப் போட்டியில் பங்கு கொண்ட சில தம்பி, தங்கைகள் தங்கள் அனுபவங்களை இங்கே சொல்கிறார்கள் :

போறேன்னு என் நண்பன் கிட்டச் சொன்னேன். 'நானும் அதே வேஷம் போடப்போறேன்'னு அவனும் சொன்னான். எங்க அம்மா கிட்ட வந்து நான் சொன்ன போது, 'ஒரே வேஷம் ரெண்டு பேரும் போட்டா சரியா இருக்காது; நீ வந்து, அந்த ராமர் கதையை எழுதின கம்பர் வேஷம் போடு' அப்படீன்னு யோசனை சொன்னாங்க. என்னைக் கம்பராக்கினாங்க. 'பாற்கடலையே குடிக்க ஆசைப்படற சின்னப் பூனை போல ராமாயணத்தை எழுத ஆசைப்பட்ட கம்பன் நான்'னு சொல்லிண்டு எழுத்தாணி யால எழுதற மாதிரி பாவனை காட்டினேன் பாருங்க, ஏக அப்ளாஸ். பரிசு! எனக்கேதான்!

என். ரேவதி : ஒரு தரம் பஸ் ஸ்டாப் கிட்ட கழுத்து நிறைய மணிமணியா மாலை போட்டுக்கிட்டு நாலஞ்சு பொம் பளைங்க இருந்தாங்க. பஸ்ல போய்க்கிட்டிருந்த நான், பக்கத்ல இருந்த அம்மா கிட்ட 'அவங்கள்ளாம் யாரும்மா?'ன்னு கேட்டேன். ''அவங்கள்ளாம் ஊர் ஊராப் போய், ஊசி, பாசிமணி வித்துக் கிடைக்கற பணத்ல வாழ்க் கை நடத்தறவங்க. அவங்களை 'குறவர்'னு சொல்வாங்க'' அப்டீன்னாங்க. அவங்க போட்டுகிட்டிருந்த மணிமாலை ரொம்ப அழகா இருந் திச்சு. அதோட, கைல இருந்த தகர டப் பாவைத் தட்டித் தட்டி அவங்க ஆடிப்பாடினதைப் பார்க்க வேடிக்கையாக வும் இருந்தது. மாறு வேடப் போட்டி நடந்த போது, எப்பவோ பார்த்த அந்தக் 'குறவர் பெண்' ஞாபகம் எனக்கு வந்தது. அம்மாகிட்ட சொன்னேன். அவங்க உடனே எனக்கு அதே மாதிரியே டிரஸ் பண்ணி விட்டாங்க. நான் போட் டில கலந்துண்டதை விட, அந்த வேஷம் போடறதுக்காக அம்மா வகைவகையான மணி மாலை வாங்கிக் குடுத் தாங்களே, அதுதான் எனக்கு ரொம்பப் பிடிச் சிருந்தது.




ஆர். கோகுல கிருஷ்ணன்



டி.எஸ். ஆனந்த்

டி.எஸ். ஆனந்த் : எங்க வீட்ல ஒரு கிருஷ்ணர் பொம்மை இருந்தது. ரொம்ப அழகா இருக்கும். கொலுவிலே வைப் பாங்க. கொலு பார்க்க வர்ரவங்க எல்லாரும் அந்தப் பொம்மை ரொம்ப அழகா இருக்குன்னு பாராட்டு வாங்க. கூடவே, 'நீ கூடதான் பொம்மை கிருஷ்ணர் மாதிரி அழகா இருக்கே!' அப்டீம்பாங்க. எனக்கு வெட்கமா இருக்கும். எங்க அம்மாவும் அப்பாவும், 'அப் படீன்னா, இவனை கிருஷ்ணனா மாத்திடவேண்டியது தான்'னு கேலியா சொல்வாங்க. அது உடனேயே பலிச்சுப்போச்சு! ஆமாம்; எங்க ஸ்கூல் மாறுவேஷப் போட்டில எனக்குக் கிருஷ்ணர் வேஷம் போட்டு அனுப்பி வைச்சாங்க. வேஷப் பொருத்தம் ரொம்ப நல்லாயிருந்துச்சுன்னு எல்லாரும் பாராட்டினாங்க. பெரு மையாக இருந்தது.

படங்கள், பேட்டி : பிரபுசங்கர்.
அட்டையில் : விஷ்ணு மோகன், ஸ்மிருதி பாலாஜி.
வண்ணப்படம் : உதரா.



எப்படிப் பெயர் வந்தது? - ஆசிரியர் குழு - பக். 118 ரூ. 12/-, மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

கிரேக்க மொழியில் ''போலீஷ்யா'' என்றால் பாதுகாத்தல் என்பது பொருள். இதுவே மாற்றம் பெற்று ஆங்கிலத்தில் போலீஸ் என்றானது. பக். 47

மீட் என்றால் பிரெஞ்சு மொழியில் அளந்து எல்லையிடுதல் என்பது பொருள். இதிலிருந்தே 'மீட்டர்' என்ற பெயர் பிறந்தது. பக். 75

இப்படி நாள்தோறும் நாம் பயன்படுத்தும் எவ்வளவோ சொற்கள்/பெயர்களுக்கு ஆதி காரணம் என்ன என்பது மிக அழகாகவும், சுருக்கமாகவும் தரப்பட்டுள்ளது. பயனுள்ள நூல். துருதுருக்கும் குழந்தைகளுக்கு நல்ல விருந்து. முடிக்கும் வரை நம்மை விட்டு விடுவார்கள்!

மூடன், மட்டி, மடையன் கதைகள் - ஆசிரியர் குழு, பக். 160, ரூ. 16/- மணி மேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

திண்ணை தூங்கித் தடிராமன் கதைகள் என்று கிராமப்புறங்களில் வழக்கில் இருந்து வரும் கதைகளின் கண்ணியமான தொகுப்பு. கதைகளில் வரும் கதாநாயகன் அல்லது நாயகி, வடிகட்டின முட்டாளாக இருப்பான். சொன்னதை ம ட் டு மே செய்வான். அதற்கு மேல் தன் அறிவைப் பயன்படுத்த மாட்டான். இதன் விளைவு, விலா குலுங்கும் நகைச்சுவைக் கதைகள்! வயிற்றுவலிக்கு ம ரு ந் து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பியுங்கள். குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் ரசிப்பார்கள்.

நன்னெறிக் கதைகள் - பேராசிரியர் ஏ. சோதி, பக். 160, ரூ. 12.50 நன்மொழிப் பதிப்பகம், 53, அரவிந்தர் வீதி, புதுச்சேரி -1, 605 001

'சோதி' என்றாலே புதிர்க் கதைகளின் நினைப்பு வரும்படி குழந்தைகள் மனதில் இடம் பிடித்துள்ள ஆசிரியர், கோகுலம் வாசகர்களுக்குப் புதியவரல்ல. ஒரு முட்டாள் அரசன் திருடனுக்குத் தண்டனை தர பயப்படுகிறான், அடுத்த பிறவியில் அவன் தனக்குத் தண்டனை கொடுப்பான் என்று. 'போன பிறவியில் இவன் அரசனாக இருந்து திருடன் என உங்களைத் தண்டித்ததாலேயே இப் பிறவியில் அவன் திருடனாகி உங்களிடம் தண்டனையை எதிர்நோக்கியிருக்கிறான்' என்று மதியூகி அமைச்சர் அரசனை மாற்றி குற்றவாளிக்கு தண்டனை தந்து நீதியை நிலைநாட்டுகிறார். இத் தொகுப்பில் இப்படிச் சுவையான 80 கதைகள் உள்ளன. சிரிக்க வைப்பதோடு, சிந்திக்கவும் வைக்க வல்லவை.

பரிசு - க. தமிழமல்லன் - பக். 87 ரூ.10/- தனித்தமிழ்ப் பதிப்பகம், 168, காமராசர் சாலை, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009.

தனித்தமிழ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட ஆசிரியரின் துணிச்சலான முயற்சி. 17 சிறுகதைகள் உள்ளன. குறளின் பொருளே வினாக்குரிய விடைகளை விளக்கித் தருகிறது. ஒரு கதை. தமிழில் கையெழுத்திட வேண்டியதின் அவசியத்தைப் புகல்கிறது ஒரு கதை. மற்றவர்களைத் துன்பப்பட வைத்து மகிழும் மகிழுரசனைப் பல்லி ஏளனம் செய்யும் ஒரு கதை. சந்தித்ததும் வணக்கம் கூற வைக்கும் வழக்கத்தை வலியுறுத்தும் ஒரு கதை. இப்படி ஆசிரியரின் தமிழார்வத்தைக் காட்டும் கதைகளாக இதில் உள்ளன. அவசியமான நெறிகள் நேரடியாகக் கூறாமல் கதைவாயிலாகவே உணர்த்தப்படுகின்றன. கட்டாயமாகக் குழந்தைகளை மகிழவைக்கும்.

இப் பகுதிக்குப் புத்தகம் அனுப்ப விரும்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். முகவரி ஆசிரியர் கோகுலம், ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 32, கட்டணம் ஏதுமில்லை.

பொன் மொழிகள் இங்கே— சொன்னவர்கள் எங்கே?

இந்தப் போட்டியில் 2686 பேர் கலந்து கொண்டு ஒரு சாதனையையே ஏற்படுத்தி விட்டார்கள்! இருந்தும் பெரும்பாலானவர்கள் சரியான விடை எழுதவில்லை. எனவே, ஒரு தவறு செய்தவர்களைத் தேர்ந்தெடுத்து அதி லிருந்து குலுக்கல் முறையில் பரிசுக் குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- போட்டி முடிவு

ரூ. 25/- பரிசு பெறுவோர் :

1. க. தமிழ்ச் செல்வன்,
த/பெ. திரு. கா. கணேசன்,
3.133 B. உயர் பள்ளி சாலை,
தேரிழந்தூர் போஸ்ட், மயிலாடுதுறை வட்டம்,
609 808.

2. வி. மீனாக்ஷி,
த/பெ. திரு. வி. நாராயணன்,
31, தர்ம நாராயணன் செட்டியார் தெரு,
காரைக்குடி - 623 001.

3. பி. முருகானந்தம்,
த/பெ. திரு. ஆர். பழனியப்பன்,
சிவன் தெற்கு வீதி,
தோப்புத்துறை - 614 809.

4. எம். சுந்தர பாண்டியன்,
த/பெ. திரு. வி. ஏ. முருகேசன்,
22/ A- மேட்டுத் தெரு,
உதயேந்திரம், வாணியம்பாடி
635 752.


இதோ சரியான விடை :


1. உழைப்பின்றி உண்பவர்கள் திருடர்கள் - காந்தியடிகள்
2. தனிமரம் தோப்பாகாது - சிங்செள என்ற சினப் பெரியார்
3. நல்ல புத்தகம்; நல்ல நண்பன் - நேருஜி.
4. நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் - பாரதிதாசனார்
5. தட்டுங்கள் திறக்கப்படும் - ஏசுபிரான்
6. சாதி இரண்டொழிய வேறில்லை - ஔவையார்
7. ஒன்றே குலம்; ஒருவனே தேவன்! - திருமூலர்
8. எழுமின்! விழிமின்! - விவேகானந்தர்
9. இன்குலாப் ஜிந்தாபாத் - பகத்சிங்
10. ஜெய்ஹிந்த் முதலில் உருக்கொடுத்தவர் செண்பக ராமன். பிரபலமாக்கிப் பயன்படுத்தியவர் சுபாஷ் சந்திரபோஸ்.
11. செய்! அல்லது செத்து மடி! - காந்தியடிகள்
12. யாதும் ஊரே; யாவரும் கேளிர்! - புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனார்.
13. வாய்மையே வெல்லும் - இதை, கடோபநிஷத்
14. நம்பிக்கை உண்டெனில் வெற்றி உண்டு! - பாரதியார்
15. மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்! - அறிஞர் அண்ணா.
16. தமிழுக்கு அமுதென்று பேர் பாரதிதாசனார்
17. பொய்மை இகழ்! - பாரதியார்
18. தங்கத்தை விட உயர்ந்தது உண்மையே! - காந்தியடிகள்
19. நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்! பாரதியார்.

"அப்பா! காதுல ஏரோப்ளேன் ஓடுற மாதிரி சத்தம் கேட்குதுன்னு வீட்டுல சொல்லிட்டு, இப்ப டாக்டர்கிட்டே, டிரெயின் ஓடுற மாதிரி இருக்குன்னு சொல்றீங்களே, ஏன்?"

"கம்முனு இருடா... ஏரோ பிளேன்னு சொன்னா, ஃபீஸ் அதிகமா கறந்துடுவார்!"

- சீர்காழி. வி ரேவதி.





கண்ணனைப் பாடினால் தண்டனை!

ஹரிசிங்

கங்கை நதிக்கரையில் அமைந்திருந்த அந்த மாஞ்சோலையிலிருந்து எழுந்த இசை வெள்ளத்தில், சுற்றுப்புறமே மூழ்கி மயங்கிக் கொண்டிருந்தது.

சோலையை அடுத்திருந்த சாலையில் விரைந்து கொண்டிருந்தவர்களையும், குதிரைகளில் பறந்து கொண்டிருந்தவர்களையும் கூட அந்தப் பொல்லாத இசை விட்டு வைக்கவில்லை. சிறிது நேரமாவது நின்று, அனுபவித்துவிட்டு, வியப்போடு சென்றனர்.

உயர்ரக அரேபியக் குதிரையில் மிடுக்காக வந்து கொண்டிருந்த ஒரு முஸ்லீம் பிரபு, இசையைக் கேட்டதும் குதிரையை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினார்.

தோப்புக்காரர் ஓடோடி வந்து சலாம் போட்டார்.

''தோப்பில் யார் இருக்கிறார்கள்? இவ்வளவு இனிமையாகப் பாடுவது யார்?''

''தோப்பு என்னுடையது. யாரோ ஒரு பக்கிரி..... அடிக்கடி இங்கே வந்து பாடுவார். இப்பொழுதும் அவர்தான் பாடிக் கொண்டிருக்கிறார்'' என்று பணிவுடன் அழைத்துப் போனார் தோப்புக்காரர்.

அடர்ந்த மாமரச் சோலையின் நடுவே இருந்த பெரிய கிணற்றின் கரையில், ஒரு பெரிய கல்லின் மேல் அமர்ந்து தன்னை பறந்து; சுற்றுப்புறத்தையே பறந்து பாடிக் கொண்டிருந்தார் ஒரு பக்கிரி. அந்தப் பாட்டிலே அருவியின் கம்பீரம், நதியின் நெளிப்பு, ஆடும் மயிலின் நளினம், குயிலின் தேன் இசை எல்லாம் கலந்து வந்தன.

தன்னையே மறந்து நின்றார் பிரபு.

''பக்கீர், உன் பாட்டில் மயங்கி ஆக்ரா நகரத்துக் கொத்தவாலே நேரில் வந்திருக்கிறார். கொஞ்சம் கண் திறந்து பார்'' என்று பக்கிரியை உசுப்பினார் தோட்டக்காரர்.

''தெய்வப் பிறவியான தங்களை மானிடப் பிறவியான இந்த ஹசம்கான் தண்டனிடுகிறேன்'' என்று இடுப்பை வளைத்து சலாமிட்டார் பிரபு.

பரபரப்போடு பதிலுக்கு வணங்கினார் பக்கிரி.

''உங்கள் பெயர் என்னவோ?''

''சையத் இப்ராஹிம்.''

''எத்தனை அற்புதமாகப் பாடுகிறீர்கள்! வசந்த காலத்தில் மாம்பூக்கள் இலட்சக் கணக்கில் பூப்பதும், வடுவாகித் துவர்ப்பதும், காயாகிப் புளிப்பதும், கனியாகி இனிப்பதும் எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால், கவிதைக் கண் கொண்டு இந்த இயற்கை நடைமுறைக்குப் புது மெருகு தந்துள்ள பாடலும், பாடலில் தேனைச் சொரிந்து தரும் இசையும் கேட்கக் கேட்கத் தெவிட்டாதவை. இந்தப் பாடல் எந்தக் கவிஞனுடையது?''

''நான் பாடும் எல்லாமே அடியேன் இறுக்கிய பாடல்தான் பிரபு!''

பிரபு, தன் கழுத்தில் இருந்த ஒளி சிந்திய முத்து மாலையை எடுத்து பக்கிரியின் கழுத்தில் போட்டார்.

இதற்குள் ஒரு விரிப்பைக் கொண்டு வந்து போட்டு ஹுக்காவைக் கொண்டு வந்து வைத்தார் தோப்புக்காரர். பிரபு அமர்ந்து கொண்டு ஹுக்கா புகைத்

தார்.

''எங்கே, உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஒரு பாடலைப் பாடிக்காட்டுங்கள் கேட்கலாம்?''

"எனக்குப் பிடித்தமான பாட்டையா?"

'ஆமாம். நீங்கள் எழுதிய பாடல்களில், தலை சிறந்த பாடலாக நீங்கள் எதை நினைக்கிறீர்களோ, அதைப் பாடுங்கள்!''

''மாதவா மதுசூதனா நீ வாவா!''- கண்ணனை அழைத்து அந்த ''வாவா'' வில் எண்ணற்ற வித்தியாசங்களை, குழைவுகளை நெளிவுகளை நிரவல்களை விளக்கிக் காட்டிப் பாடினார் பக்கிரி. கண்கள் மூடிவிட்டன. அருவியாகக் கண்ணீர் பெருகி வழிந்தது. ஒரு வேளை அந்த இசைக் குழைவைத் தாங்காது கண்ணன், அவர் கண்ணுக்குள் வந்து நின்று காட்சி கொடுத்து விட்டானோ!

பிரபு ஹுக்காவை நிறுத்தினார். புருவங்கள் கோபத்தால் உயர்ந்தன. கண்களில் கனல் பறந்தது.

''நிறுத்து உன் பாட்டை...!''

பிரபுவின் கத்தலால் அதிர்ச்சிற்றுத் தன் நிலை அடைந்த பக்கிரி கண்களைத் திறந்தார். துந்துனா நின்றது பாட்டும் நின்றது.

"நான் பாடியுள்ள பாடல்களில் எனக்கு மிகவும் பிடித்தமான பாடல் இந்தப் பாடல்தான் பிரபு!"

"முஸ்லீம் பக்கிரியான நீர், காபீர்களின் தெய்வத்தைப் பாடுகிறீர்களே.... உமக்கு இது அவமானமாக இல்லை?"

"முரட்டுப் பத்தான் (பட்டாணியர்) ஆன நான் பக்திமான் ஆனதும், கவிஞன் ஆனதும், பாடகன் ஆனதும் அந்தக் கோகுலத்துக் கண்ணன் என் உள்ளத்தில் வந்து புகுந்து கொண்ட பிறகுதான் பிரபு. நான் பாடும் பாடல்களில் பெரும்பாலானவை, அந்த மாயக் கண்ணனின் பெருமை களைப் புகழ்பவையே!''

பணிவாகப் பதிலளித்த பக்கிரி, பேசிக் கொண்டே பிரபு தனது கழுத்தில் இட்ட முத்து மாலையைக் கழற்றினார்.

''பிரபு. காபீர்களின் கண்ணனைப் பாடும் இந்தப் பாவிக்கு, தெரியாமல் முத்து மாலை பரிசளித்தோமே என்று நீங்கள் வருந்தலாம். கோபப்பட்டு இந்த மாலையைக் கழற்ற ஆணையிடலாம். அதற்குமுன் நானே முந்திக் கொள்வது புத்திசாலித்தனமானது அல்லவா? இந்த நிலை எனக்குப் புதிதே அல்ல. என்றைக்கு அந்த மாயக் கண்ணன் என் மனத்திலும், என் நாக்கிலும் குடியேறினானோ... அன்றிலிருந்தே எனக்குச் சனியன் பிடித்து விட்டது. எனக்கு ஆதரவு காட்டி வளர்த்த மாமா மாமி, ''கண்ணனைப் பாடினால் தண்டனை!'' என்று அடித்து வெளியே துரத்திவிட்டார்கள். எந்த இஸ்லாமியர் வீட்டிலும் எனக்கு உணவு கிடைக்காது.''

பிரபு திகைப்போடு கேட்டுக் கொண்டிருக்க பக்கிரி தொடர்ந்தார்.

''அட முஸ்லீம்கள்தான் என்னை வெறுத்தனர் என்றால், முஸ்லீமான




நான் கண்ணனைப் பாடி ஆடு கிறேனே... இதற்காகவாவது இந்துக் கள் எனக்குக் கருணை காட்டி ஆதரவு தரலாகாதா? இந்த முஸ்லீம் பக்கிரி கண்ணனைப் பாடுவதாவது? கண்ண னைப் பாடினால் தண்டனை கொடுங்கள் என்று விரட்டியடிக்கிறார் கள்! அந்த மாயக் கண்ணன் என் மனத்தில் புகுந்து இடம் பிடித்து என்னை என்னவெல்லாம் பாடாய்ப் படுத்துகிறான் பாருங்களேன்.''

''பக்கீர் சையத் இப்ராஹிம் அவர்களே! பிறப்பால் நீங்கள் ஒரு முஸ்லீம். உங்களுக்கு அற்புதமான கவிதை வளமும், கேட்பவர்களை ஈர்க்கும் குரலும், இனிமையான பாடும் திறமையும் உள்ளன. இதை நீங்கள் காபீர்களின் தெய்வம் கண்ணனைப் பாடவே பயன்படுத்தினால் இந்து - முஸ்லீம் ஆகிய இரு சாராரின் வெறுப் புக்கும் இலக்காகி படாத பாடு படுவீர். உங்கள் பிடிவாதத்தை விட்டொழி யுங்கள். கண்ணனைப் பாடாமல் இருந் தால் போதும், உங்களை நான் ஆதரிக்கிறேன்,'' என்று பரிவோடு அறி வுரை கூறினார் பிரபு.

''குயிலால் பாடாமல் இருக்க முடியுமென்றால், மயிலால் ஆடாமல் இருக்க முடியுமென்றால், இந்த ஏழை பக்கிரியாலும் கண்ணனைப் பாடாமல் இருக்க முடியும் பிரபு.''

பிரபுவின் கண்களில் கனல் பறந்





விருந்துக்கு வந்த புலியார் ஏன் இப்படி ஓடறார்?

விருந்துக்கு என்ன குழம்புன்னு கேட்டார். நான் வாய் குழறி, புளிக் குழம்புங்கறத்துக்குப் பதில் புலிக் குழம்புன்னு சொன்னேன்!

- ச. காளிக்கைராஜ்.

தது.

''இந்தப் பிடிவாதக்காரப் பக்கிரியை; மத துரோகியை இனி இந்தத் தோப்புக்குள் வர அனுமதிக்காதீர்கள். இவனுக்குப் பச்சைத் தண்ணீர் கூடக் கொடுக்காதீர்கள். நாய்களை விட்டு தோப்பின் பின்பக்க வழியாக இவனை இப்படியே கங்கைக்குள் விரட்டுங்கள். நீச்சல் தெரிந்தால் நீந்தித் தப்பித்துக் கொள்ளட்டும். தெரியா விட்டால் மூழ்கி ஒழிந்து போகட்டும்.''

''வேண்டாம் பிரபு, நாய்களை ஏன் பாபம் செய்யத் தூண்டுகிறீர்கள்? நானே போய் விடுகிறேன்'' என்று துந்துனாவோடு தோப்பின் பின் பக்கமாக கங்கையில் இறங்கிவிட்டார்! பக்கிரி.

நடக்க நடக்க வெள்ளத்தின் அளவு ஏறிக் கொண்டே இருந்தது! கழுத்து வரை வெள்ளம் வந்து விட்டது. கழுத்துக்குமேல் தூக்கிய இருகைகள் தெரிந்தன! ஒரு கை துந்துனாவை இறுக்கிப் பிடித்து விரலால் மீட்டிக் கொண்டிருந்தது. இன்னொரு கை சிப்ளாக்கட்டையால் தாளம் போட்டுக் கொண்டிருந்தது! வாய், கண்ணனின் புகழைப் பாடிக் கொண்டே இருந்தது. இன்னும் ஒரு அடி முன்னே வைத்தால் நீருக்குள் தரையில் பதிந்துள்ள கால்கள் தூக்கி மிதந்து விடும்! பிறகு... ஆற்றோரம் மிதக்க வேண்டியதுதான்!

தோட்டகாரனும் பிரபுவும் தோப்பில் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. நதியின் வெள்ளத்தோடு அடர்ந்த மாமரக்கிளை ஒன்று மிதந்து வந்தது. மூழ்கி மிதக்க இருந்த பக்கிரியின் முதுகில் வேகமாக இடித்தது. அவரைச் சரித்துத் தன் மீது தாங்கிக் கொண்டது! மிதந்து சென்றது! மரக்கிளையில் பயணம் செய்த பக்கிரி, கண்ணனுக்கு நன்றி செலுத்திவிட்டுப் பார்த்தபோதுதான், தன்னைத் தாங்கிச் செல்லும் மரக்கிளையில் கொத்துக் கொத்தாகப் பழுத்த மாம்பழங்கள் இருப்பதைக் கவனித்தார்.

''அவருடைய கண்ணபிரான் அவரைக் காத்து உணவளித்து விட்டார்!'' என்று வியப்போடு கூறினார் கரையில் இருந்த பிரபு.

பிருந்தாவனத்தில் வசித்த பக்தர்களுக்கெல்லாம் தலைவரான ஹரிதாசர், யமுனையில் குளித்துவிட்டு சீடர்கள் புடை சூழத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் ஆயர்கள் வசிக்கும் ஒரு சிற்றூர். பெண் குழந்தைகள் எல்லாம் கோலாட்டம் போட்டு ஆடிப் பாடிக் கும்மியடித்துக் கொண்டிருந்தார்கள். எல்லாம் கண்ணனின் புகழ் பாடும் தீஞ்சுவை ததும்பியவை! அவர் அதுவரை கேட்டிராதவை!

''இந்தப் பாடல்கள் இவ்வளவு எளிமையாக, கருத்துச் செறிவோடு, மனதை அள்ளும் சந்தத்தோடு உள்ளனவே! இதைப் பாடிய புண்ணியப் பிறவி யாரென்பது உங்களில் யாருக்காவது தெரியுமா?'' என்று திகைப்போடு கேட்டார் ஹரிதாசர்.

பலரும் உதட்டைப் பிதுக்கினர். கடைசியில் கோலாட்டக் குழந்தைகளில் ஒருத்தி ஓடிவந்தாள்.

''எனக்குத் தெரியும் சுவாமி. ஒரு முஸ்லீம் பக்கிரி இந்தப் பாடலைப் பாடினார். இதைப் போல் எத்தனையோ பாடல்களை அவர் பாடினார். ஒன்றிரண்டைத்தான் நான் மனப்பாடம் செய்து கொண்டு, மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்தேன்.''

''ஓ.... அந்த பத்தான் பக்கிரியா....?'' என்று புரிந்து கொண்ட சிஷ்யர்களில் ஒருவன், ''சுவாமி, பத்து நாட்களாக அந்தப் பத்தான் முஸ்லீம்

பக்கிரி, இங்கே பிருந்தாவனத்தில்தான் அலைந்து கொண்டிருக்கிறான். உங்களைத் தரிசிக்க வேண்டும் என்று ஒரே பிடிவாதம்! பலமுறை ஆசிரமத்திற்கு வந்தான். ஒரு முஸ்லீம் பக்கிரியை சுவாமிஜி பார்ப்பது கூடப் பாவம். சுவாமிஜி உன்னைப் பார்த்தால் அவருக்குத் தீட்டுப் பட்டுவிடும் என்று நான்தான் விரட்டி விட்டேன்'' என்றான் அலட்சியமாக.

''எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டாய்!'' என்று மனம் பதறித் துடித்த ஹரிதாசர், சிறுமியை அழைத்துக் கொண்டு கிளம்பினார்.

யமுனையின் கீழ்க்கரையில் தனித்திருந்த ஒரு புதர் அருகே, பாடியபடி கண்ணனோடு லயித்திருந்தார் முஸ்லீம் பக்கிரி சையத் இப்ரஹீம்.

''மனதுக்குள்ளேயே கண்ணனுக்கென்று ஆலயம் கட்டி, அவனுடனேயே எப்பொழுதும் வாழ்ந்து வரும் உன்னத அடியார்களால் மட்டுமே, இது போன்ற பக்திச்சுவை சொட்டும் இனிய பாடல்களைப் பாட இயலும். உங்கள் வருகையால் இந்தப் புனிதமான பிருந்தாவனம், மேலும் புனிதமடைந்து பொலிகிறது. நீங்கள் திளைக்கும் கண்ணன் என்ற பக்திச் சுவையை நாங்களும் அனுபவிக்க வேண்டாமா? எங்களுக்கும் வழிகாட்டுங்கள்'' என்று கண் கலங்க அந்தப் பக்கிரியை வேண்டினார் ஹரிதாசர்.

வேற்று மதத்தினனான இந்த முஸ்லிம் பக்கிரியை நமது புனிதமான ஆசிரமத்திற்கு அழைத்துச் செல்வதா? என்று வெகுண்டார் ஒரு சிஷ்யர்.

''இனி இவர் பக்கிரி அல்ல. ரஸாகான் என்ற இனிய பெயர் பெற்றுவிட்ட என் பெருமைக்குரிய சீடர்'' என்றார் ஹரிதாஸர்.

சென்ற இடமெல்லாம் தேன் சுவை மிக்க பாடல்களைப் பாடி பக்தி இலக்கியத்திற்குப் புத்துயிர் அளித்தார் ரஸாகான். இவை ''ரஸாகான் சுதா'' என்று தனித் தொகுப்பாகவே உள்ளன. அதுமட்டுமா? பன்னிரு ஆழ்வார்களைப் போல் இருநூற்று எண்பத்து நான்கு வைணவ பக்தர்களில் இவரும் ஒருவராகி இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு ஒரு வலுவான இணைப்புப் பாலமாக விளங்குகிறார் ரஸாகான்.



தங்கள் பெயர் கோகுலத்தில் வெளிவர வேண்டும் என்பதற்காகப் பல தம்பி தங்கைகள் தாங்களாகவே எழுதி அனுப்பும் கடிதங்கள் ஏராளமாக வருகின்றன. முன்பே அறிவித்துள்ள படி பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பமில்லாது வருபவை வெளியிடப்படவில்லை.

'ஏஜி' பென் பால் கிளப்
8/5, துமட்டி ரங்கசாமி ஐயர் தெரு,
காமராஜர் சாலை,
மதுரை - 625 009

1.5.90 முதல் நடந்து வருகிறது

தலைவர் - ஜி. அரவிந்த், துணைத் தலைவர் - பி. ஆர். கோபி, செயலாளர் - ஆர். ஸ்ரீதர், செயற்குழு - ஜி. பரணி, ஜே.என். விஜய், வி. பத்மா, ஜே.என். சித்ரா.

சங்கத்தின் குறிக்கோள் ''பிறர்க்கென வாழ்'', ஓவியம் வரைவது, வெளி நாட்டு வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பது, பேனா நண்பர்களுடன் தொடர்பு கொள்வது, தபால் தலை சேகரிப்பது, சிறுவர் இதழ்களைப் படிப்பது சங்கத்தின் பொழுது போக்கு.

காமராஜர் சிறுவர் சங்கம்,
62, தேவாங்கர் கீழ்த் தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125.
காமராஜர் மாவட்டம்.

1990 ஆம் ஆண்டு முதல் இச்சங்கம் நடை பெற்று வருகிறது. தொடங்கி வைத்தவர் திரு. ஜெயராஜ். இதன் தலைவர் - எஸ்.வி.கே. குமரேசன், துணைத்தலைவர் - டி. நெல்லை குமார், செயலாளர் - வண்ணை வரதன். பொருளாளர் - ஜி.ஆர். சங்கர், செயற்குழு - எம். முருகன், ஜி. பசுபதி, வி.கே. வேல் முருகன், அ. தங்கம்.

குறிக்கோள் : சிறுவர் சிறுமியரைக் கதை கட்டுரை எழுத வைத்தல், நல்ல நூல்களைப் படிக்க வைத்தல், தேசத் தலைவர்களின் பிறந்த நாட்களைக் கொண்டாடுதல், நாடகம் போட்டு கலையை வளர்த்தல். 6.2.91 அன்று விளையாட்டுப் போட்டி நடத்திப் பரிசு வழங்கியுள்ளது.

10.7.91 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் பொது நூலகத்திற்கு பாரதிதாசனாரின் படத்தை வழங்கியுள்ளது.

ரோஜாப்பூ (வானொலி) சிறுவர் சங்கம்.
சி 16 - இராமானுஜர் வீதி,
எஸ்.ஆர்.கே.வி. காலனி - அஞ்சல்,
பெரியநாயக்கன் பாளையம்,
கோவை - 641 020.

இச்சங்கம் 1985 முதல் நடந்து வருகிறது. தலைவர் - கே. கருணாநிதி, துணைத்தலைவர் - ஓ.எஸ். சுப்ரமணியம், செயலாளர் - அ. ராஜேஷ், செயற்குழு - எஸ். பிரகாஷ், ரா. ராஜாராம், கி. ஜெய்ஹரன், வா. பன்சாவ், வீ. முத்துபிரகாஷ், சி. ராம் மோகன், சு. சுபா, சு. தீபா, கி. ஜானகி, ல. கவிதா.

குறிக்கோள்கள் : வானொலி சிறுவர் நிகழ்ச்சிகளை விமர்சித்தல், சிறுவர் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பது, ஏழைக் குழந்தைகளுக்கு உதவுதல், சிறுவர்களின் பேச்சுத்திறனை வளர்த்தல்.

இவர்கள் வழங்கிய சிறுவர் நிகழ்ச்சி 2.6.91 அன்று வானொலியில் ஒலிபரப்பானது.

இப்பகுதியில் பங்கு கொள்ள விரும்பும் சிறுவர் சங்கங்கள் மே 91 கோகுலம் இதழைக் காணவும். இதற்கென யாரும் கோகுலம் பத்திரிகையின் சார்பில் சந்தா வசூல் செய்யக் கூடாது. இதற்கும் கோகுலம் பத்திரிகைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.



யாருக்கும் தரமாட்டேன்!

கங்கா தன் வீட்டு வாயிற்புறத்தில் உட்கார்ந்திருந்தாள். அவள் எதிரே, புது மெருகு குறையாத தஞ்சாவூர் பொம்மை அழகுடன் காட்சியளித்தது. கங்கா பொம்மையைத் தட்டி விட்டாள். அது முன்னும் பின்னும் சாய்ந்து, சாய்ந்து ஆடியது. ஆனால், தலைகுப்புறக் கவிழ மட்டும் இல்லை!

தொப்பை வயிற்றுடன் கூடிய செட்டியார் பொம்மை அது. தலையில் தலைப்பாகை. நெற்றியில் ஒற்றை நாமம். இடப்புறம் பாக்கெட்டுடன் கூடிய நீலநிற மேல் சட்டை. கைகட்டிக் கொண்டிருக்கிற மாதிரி தோற்றம். கண், காது, மூக்கு, வாய் எல்லாம் கச்சிதமாக அமைந்திருந்தன. இடுப்புக்குக் கீழே, கால்களுக்குப் பதிலாக, அரைக் கோள வடிவில் சட்டி போன்ற அமைப்பு. உருட்டி விட்டால் விழாமல் ஆட, பொம்மைக்கு இந்த அமைப்புதான் உதவியது.

நேரம் விரைந்தது.

தன்னை மறந்து, சுற்றுப்புறத்தை மறந்து, இந்த உலகத்தையே மறந்து, பொம்மையை ஆட வைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் கங்கா.

அப்போது -

''கங்கா!'' என்ற திடீர்க் குரல் அவளது கவனத்தைக் கலைத்தது.

திரும்பி எதிரே பார்த்தாள் கங்கா. அவளது வகுப்புத் தோழியான பக்கத்துத் தெரு பார்வதி, தோளில் புத்தகப் பை தொங்க, சிரித்த முகத்துடன் நின்றிருந்தாள்.

''அடடா! பள்ளிக்கு நேரமாகி விட்டதா? அந்த நினைப்பே இல்லாமல் இந்தத் தலையாட்டி பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டே இருந்து விட்டேன்!''

பரபரப்புடன் எழுந்த கங்கா, ''கொஞ்சம் பொறு, பார்வதி! இதோ கொஞ்ச நேரத்தில் தயாராகி விடுகிறேன்'' என்றபடி எழுந்தாள்.

பொம்மையை ஆவலுடன் நோக்கினாள் பார்வதி. பார்க்கப் பளிச்சென்று இருந்த அந்தப் பொம்மை, அவளது உள்ளத்தை வலை போட்டுப் பிடித்தது!

''பொம்மை ரொம்ப ஜோராய் இருக்குடி, கங்கா! எப்போது வாங்கினாய் இதை?''

''நான் வாங்கவில்லை, பார்வதி! முந்தா நாள் சனிக்கிழமை தஞ்சாவூரிலிருந்து என் சின்ன மாமா வந்திருந்தார்'' – பெருமை பொங்கியது கங்காவின் குரலில்.

முகம் கழுவித் தலைவாரி உடை மாற்றிக் கொண்ட கங்கா, பாட நூல்களை எடுத்துப் பைக்குள் போட்டுக் கொண்டாள். பையைத் தோளில் மாட்டிக் கொண்டு, ''வா, போகலாம்'' என்றாள் தோழியிடம். இரண்டு பேரும் பள்ளியை நோக்கி நடக்கலானார்கள்.

''கங்கா, நீ வெச்சிருக்கிற தஞ்சாவூர் பொம்மையை எனக்கும் கொஞ்சம் விளையாடத் தருவியா?'' – ஆவலோடு கேட்டாள் பார்வதி.

''பொம்மையை வெளியிலே எல்லாம் கொடுக்கிறதுக்கு இல்லை, பார்வதி! என் வீட்டுக்குள்ளேயே வைத்

புவனை கலைச் செழியன்



''நம் மன்னர் ரொம்ப புத்திசாலி''
''எப்படி?''
''எதிரி ஆயுத பூஜை கொண்டாடும்போது நைசா போய் நாட்டைப் பிடிச்சிட்டாரே!''

- க. வெங்கடேசன்.

துத்தான் விளையாட வேணும். ஒய்வு நேரத்தில் வா. ரெண்டு பேருமாய்ச் சேர்ந்து, இங்கியே அதை வெச்சு விளையாடுவோம்'': கங்கா உறுதியாகக் கூறி விட்டாள்.

''நம்ம சிநேகத்தையும் மறந்து இப்பிடி வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டா மறுத்துப் பேசறியேடி, கங்கா!''— தாபத்துடன் கூறினாள் பார்வதி.

''பொம்மை அழுக்கடைஞ்சாலோ, உடைஞ்சு போனாலோ என்னால் தாங்க முடியாது, பார்வதி! நம்மோட சிநேகம் வேறே; இந்த பொம்மை விவகாரம் வேறே. அதையும் இதையும் சம்பந்தப்படுத்திப் பேசாதே!''— கண்டிப்பு அதிகமாயிற்று, கங்காவின் குரலில்.

அதன் பிறகு, இருவரும் பேசிக் கொள்ளவில்லை. பள்ளி மணி ஒலித்தது. தோழிகள், ஓட்டமும் நடையுமாக விரைந்தார்கள்.

வகுப்பில் ஒவ்வொரு பாட வேளையும், நத்தை மாதிரி மிக மெதுவாக ஊர்வது போல் தோன்றியது பார்வதிக்கு. தாங்க முடியாத துயரம், பாரமாக அவளது உள்ளத்தை அலைக் கழிக்கத் தொடங்கியது. 'இத்தனை நாள் பழகியும், எவ்வளவு அலட்சியமாகப் பேசி விட்டாள் கங்கா...! உயிருக்கு உயிரான சிநேகிதியாக இருந்தும், இந்தப் பொம்மை விஷயத்தில் மாத்திரம் ஏன் இப்படிக் கறாராக நடந்து கொண்டாள்? அவளுக்கு பொம்மை வாங்கித் தர மாமா இருக்கிறார். ஆனால், எனக்கு அந்த மாதிரி ஓர் உறவு இல்லையே! நட்பு சுயநலமில்லாதது என்று சொல்வதெல்லாம் அப்பட்டமான பொய்தானா?' எண்ணச் சுழல்கள், நெஞ்சக் குளத்தில் மாறி மாறி உருவாகி மறைந்தன.

பள்ளி முடிய இன்னும் ஒரு பீரியடு பாக்கி இருந்தது. ''தலைவலி தாங்க முடியவில்லை, டீச்சர்! எனக்குப் பர்மிஷன் கொடுங்கள்!'' ஆசிரியையிடம் அனுமதி பெற்றுக் கொண்ட பார்வதி, வெறித்த பார்வை ஒன்றை கங்கா மீது வீசி விட்டு, விறைப்போடு வகுப்பை விட்டு வெளியேறினாள்.

சிநேகிதியின் போக்குக் கண்டு வியப்பும், திகைப்பும் கொண்டாள் கங்கா.

மாலையில் பள்ளி முடிந்ததற்கு அறிகுறியாக மணி ஒலித்தது. பொம்மையைப் பற்றிய நினைவு, உள்ளத்தில் பொங்கி எழ, உவகையோடு வீட்டிற்கு விரைந்தாள் கங்கா.

வீட்டை அடைந்த அவள், புத்தகப் பையை ஆணியில் மாட்டி விட்டு, முகம் கழுவிக் கொள்ளவும் தோன்றாமல், அவசர அவசரமாகத் தன் அறைக்குள் நுழைந்து, மேசையை நோக்கினாள். மின்சாரக் கம்பியைத் தொட்ட மாதிரி, 'ஷாக்' அடித்தது அவளுக்கு...! அவள் சின்ன மாமா வாங்கித் தந்த அந்த அருமையான தஞ்சாவூர் பொம்மையை அங்கே காண வில்லை!

கங்காவின் பார்வை மேசைக்கு அடியில் பாய்ந்தது. தலையாட்டிப் பொம்மை தரையில் விழுந்து, சுக்கல் சுக்கலாக நொறுங்கிக் கிடந்தது! காலையில் கனகம்பீரமாக ஆடிய உருட்டுச் சட்டிச் செட்டியார், இப்போது அழகிழந்து, உருச் சிதைந்து, அலங்கோலமாகி விட்டார்!

அந்த அவலக் காட்சியைக் கண்ட கங்காவுக்கு, 'குபுகுபு'வென்று விழிநீர் பெருகிக் கண்களை மறைத்தது.

'எவ்வளவு ஆசையாகத் தனக்கும் சற்று விளையாடக் கொடுக்கும்படி இந்தப் பொம்மையைக் கேட்டாள் பார்வதி! ஆனால், நான் நட்பின் நெருக்கத்தையும் மறந்து, சர்வ அலட்சியத்துடன் 'முடியாது' என்று கூறி மறுத்து விட்டேன்! அத்தனை சுயநலமா எனக்கு? பார்வதிக்குக் கொடுக்காத பொம்மை, எனக்கும் பயன்படாமல், உடைந்து தூளாகி விட்டதே! என் கெட்ட புத்திக்கு ஆண்டவன் கொடுத்த தண்டனைதான் இது!'

மனச்சாட்சி பிடரியைப் பிடித்துத் தள்ள, பரபரப்புடன் பார்வதியின் வீட்டிற்குப் பறந்தாள் கங்கா!

கண்கலங்க சிநேகிதியின் கைகளைப் பற்றிக் கொண்ட கங்கா, ''பார்வதி! ஆசையும், பாசமுமாகப் பழகிய உன்னை, நான் மனம் நோகச் செய்து விட்டேன்! தலையாட்டிப் பொம்மையை நீயும் கொஞ்சம் விளையாடக் கேட்ட போது, திமிரோடு கொடுக்க மறுத்தேன். அந்தத் திமிருக்காகக் கடவுள் என்னைக் கடுமையாகத் தண்டித்து விட்டார், பார்வதி...! மேசை மேல் வைத்திருந்த பொம்மை தரையில் விழுந்து, சில்லு சில்லாகச் சிதறிக் கிடக்கிறது. எங்கள் வீட்டுப் பூனைதான் அதைத் தள்ளி உடைத்திருக்க வேண்டும். பார்வதி, என்னை நீ மன்னித்து விடடி. அப்போதுதான் என் மனசு நிம்மதியடையும்'' என்றாள் துயரத்




துடன்.

''ஆனால், இது என்ன... பார்வதியின் கண்களும் கலங்குகின்றனவே! அவளது கன்னப் பரப்பு முழுவதும் விழிநீர் வெள்ளத்தால் நனைகிறதே!' கங்கா ஒன்றும் புரியாமல் குழம்பினாள். பார்வதியின் நிலை அவளுக்கு விசித்திரமாக இருந்தது!

''கங்கா! மன்னிப்புப் பெற வேண்டிய தேவை உனக்கல்ல; எனக்குத்தான்!.. உன் பொம்மையைப் பூனை தள்ளி உடைக்கவில்லை. நீ எனக்கு அதைக் கொடுக்க மறுத்ததால், நான்தான் உன் மேல் பொறாமைப் பட்டு உன்னைப் பழிவாங்கத் திட்டமிட்டேன். கடைசிப் பீரியடில் பர்மிஷன் வாங்கிக் கொண்டு, உனக்கு முன்னால் உன் வீட்டுக்குப் போனேன். சந்தர்ப்பமும் எனக்கு அனுசரணையாக அமைந்தது... உன் அம்மா கொல்லைப்புறத்தில் வேலையாய் இருந்தார்கள். நான், அவர்கள் அறியாதபடி உன் அறைக்குள் நுழைந்தேன். ஆத்திரத்துடன் பொம்மையை உடைத்து நொறுக்கி விட்டு, உனக்குப் பாடம் கற்பித்து விட்ட திருப்தியுடன், என் வீட்டிற்கு வந்து விட்டேன்! உன் உயர்ந்த உள்ளம் இப்போதுதான் எனக்குப் புரிகிறது. கண நேரத்தில் புத்தி பிசகி நான் செய்து விட்ட இந்தப் பிழைக்காக, தயவு செய்து நீதான் என்னை மன்னிக்க வேண்டும்!'' பெருங்குரலில் அழுதாள் பார்வதி.

''அழாதே, பார்வதி! நம் அன்புக்கும், நட்புக்கும் நிகழ்ந்த சோதனை இத்துடன் போகட்டும். நடந்ததை இருவருமே மறந்து விடுவோம். அடுத்த தடவை வரும் போது, என் மாமாவிடம் ஆளுக்கு ஒன்றாக இரண்டு பொம்மைகள் வாங்கி வரச் சொல்கிறேன்'' என்று கூறிப் பார்வதியை இறுக அணைத்துக் கொண்டாள் கங்கா.

அருந்தமிழ்க் கவிஞர்...



அரிசில்கிழார் என்பவர் ஓர் அருந்தமிழ்க் கவிஞர்.
அவர் படைத்த கவிதைகளோ நறுங்கனிக் குவியல்
பெருஞ் சேரல் இரும்பொறை ஓர் பெரிய மன்னவன்
பெருமையுடன் சேரமண்ணை ஆண்டு வந்தவன்

பாடிவரும் புலவருக்குப் பரிசில் வழங்கிடும்
பண்புமிக்க மன்னவன்தான் சேரல் இரும்பொறை
நாடிவந்தார் அரிசில்கிழார் அந்த மன்னனை
நல்ல தமிழ்ப் பாட்டிசைத்தார் அவனைப் புகழ்ந்திட

தேடி வைத்த செல்வமென சேரமன்னனைப்
பாடிவைத்த பாடல்களோ எண்ணிப் பத்துதான்
பாடல்களைக் கேட்டவனோ பரவச முற்றான்
பாவலர்க்குத் தனது மண்ணைப் பரிசெனத் தந்தான்

அரிசில்கிழார் அரசனது குணமும் வியந்தார்
அருமைத் தமிழ் சிறப்படைந்த நிலையும் உணர்ந்தார்
பரந்த மனம் கொண்டவராய் அந்த மண்ணினை
நிறைந்த மனச் சேரனுக்கே திரும்பவும் தந்தார்

புலவர் பிரான் புகழ் இதனால் நிலைத்து வாழ்ந்தது
போற்றிடவே தமிழ் மொழியும் செழித்து வாழ்ந்தது
நலம் நிறைந்த நெஞ்சினராய் மனிதர் வாழ்ந்ததால்,
நாடு நலம் நிறைந்து வளம் சிறந்து வாழ்ந்தது.

- பூவிழிவண்ணன்.



குருவிகளை விட்டுடு!

‘ஹனி பேர்ட்ஸ்..... ஹனி பேர்ட்ஸ் வாங்கலியா.... ஹனி பேர்ட்ஸ்! ஜோடி இருபத்தஞ்சு ரூபா!’ என்ற குரல் கேட்டு பாபு திரும்பினான். அவனைப் போலவே, டவுன் பஸ் ஸுக்காகக் காத்திருந்த மற்ற சிறுவர்களும் ஆர்வமுடன் திரும்பிப் பார்த்தார்கள்.

ஒரு கச்சலான ஆசாமி - அழுக்கு டிராயர், மிக்கி மௌஸ் படம் போட்ட சிவப்பு கட் பனியன், பரட்டைத்தலை, முட்டைக் கண்களுடன் பார்க்கவே திருப்தியாயில்லை - தலையில் ஒரு பெரிய வலைக் கூடை, இரண்டு கைகளிலும் இரண்டு சின்ன வலைக் கூடைகள் சகிதம் கூவிக் கொண்டிருந்தான். அவனது கூவலை அமுக்குகிற மாதிரி, கூடைகளுக்குள்ளிருந்து ‘கீச்கீச்’ என்று ஏகமாய்க் குருவிகள் சத்தம். பல வண்ணங்களில் சின்னஞ்சிறு குருவிகள், மணிக் கண்களால் வெளியே பார்க்க முயற்சித்துக் கொண்டிருந்தன.

பஸ் ஸ்டாண்டின் சிமிண்ட் தளத்தின் ஒரு பக்கமாக அவன் வலைக் கூடைகளை இறக்கி வைத்தான். சிறுவர்கள் அனைவரும் ஆர்வமாக ஓடி வந்து அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

‘விலகுங்கப்பா! காத்தை அடைக்காதீங்க!’’ என்று அவன் அவர்களை விரட்டினான். பெரியவர் ஒருவர் அருகில் வந்து குனிந்து பார்த்து, ‘என்னப்பா நெஜமாகவே ஹனி பேர்ட்ஸ் தானா? இங்கெல்லாம் அது ஏதப்பா? சும்மா டூப் விடாதே!’’ என்றார்.

‘‘என்னாங்க அப்பிடிச் சொல்லிப்புட்டீங்க? அசல் ஜாதிங்க. இதப்

வே. சபாநாயகம்



டாக்டர் சார், வர வர பகல்லே தூக்கமே வர மாட்டேங்குது. கொஞ்சம் பாருங்களேன்!

- ச. காளிக்கைராஜ்.

பாருங்க....'' என்று அவன் சின்னக் கூடை ஒன்றினுள் சுட்டிக்காட்டினான்.

அந்தக் கூடையினுள் சின்னஞ் சிறிய வண்ணப்பறவைகள் ஜோடி ஜோடியாக, கருமணிக் கண்களால் விழித்தபடி தலையை இப்படியும் அப்படியும் சாய்த்துப் பார்த்தபடி குறுக்குக் கம்பிகளில் உட்கார்ந்திருந்தன.

''ஐயோ! இக்கிணியூண்டு குருவி பாரேன்!'' என்று வாயைப்பிளந்தது ஒரு வாண்டு.

''இவை எல்லாமே 'ஹனி பேர்ட்ஸ்' தானா? அது என்ன பெரிய கூடையில்?''

''இந்த ரெண்டு சின்னக் கூடையும் 'ஹனி பேர்ட்ஸ்' தான்? பெரிய கூடை நிறைய நாட்டுக் குருவிகள் தான். எல்லாம் சிட்டுக்குருவிகள்!''

''ஏம்'பா! 'ஹனி பேர்ட்ஸ்'தான் வளர்க்க வாங்கு வாங்க! இது எதுக்கு சிட்டுக்குருவி! இங்கே கிடைக்க துண்ணா....?''

''அது வளர்க்க இல்லீங்க! 'சூப்' வச்சு சாப்பிட! முட்டுவலி, முழங்கால் பிடிப்பு - இதெல்லாம் நீங்கும்''

'சூப் வைக்கிதா?' - கேட்டுக் கொண்டிருந்த பாபுவுக்குப் பகீரென்றது பெரிய கூடையை நெருங்கிப் பார்த்தான். 'வசவச' வென்று புளி அடைத்த மாதிரி ஏகப்பட்ட குருவிகள். தவிட்டு நிறத்திலும், வெள்ளையும் கறுப்பும் கலந்த வர்ணத்திலும் ஒன்றன் மீது ஒன்றாகக் கிடந்து 'கீச்கீச்' சென்று ஓலமிட்டபடி இருந்தன. பாபுக்குப் பாவமாக இருந்தது.

''அது என்ன விலைக்குப் போகும்?'' என்று கேட்டார் பெரியவர்.

''அது ஜோடி ஒரு ரூபாய்ங்க! அஞ்சு ரெண்டு ரூபாய். வேணுங்களா?''

''சரி! அஞ்சு குடு!'' என்று பெரியவர் அவனிடம் இரண்டு ரூபாய்த் தாள் ஒன்றை நீட்டினார்.

அவன் பெரிய கூடைக்குள் கை விட்டு, ஒருகை நிறைய, புளிப் பானைக்குள் கைவிட்டுப் புளியை அழுத்தி எடுக்கிற மாதிரி, - குருவிகளை எடுத்து ஒரு பிளாஸ்டிக் பைக்குள் போட்டுக் கொடுத்தான்!

''ஐயோ!'' என்று கண்களை மூடிக் 'இரீச்'சிட்டான் பாபு! எல்லோரும் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். நெஞ்சில் வேதனையும் வலியும் முட்டக் கண் திறந்தான்.

பாபுவுக்கு மனம் சுருங்கியது. 'அடப்பாவிகளா! என்ன கொடுமை இது? இப்படி உயிர்வதை செய்கிறார்களே! இதைக் கேட்பாரில்லையா?' என்று மனம் குமுறியது. குருவிக்காரனை அணுகி, ''ஐயோ பாவம்! இதை ஏன் இப்படிக் கொல்றீங்க?'' என்று இரக்கத்தோடு கேட்டான்.

''பாவமா? அதப்பாத்தா எம் பாவத்தை ஆரு பாக்கிறதுப்பா?'' என்றான் குருவிக்காரன் எகத்தாளமாக.

''ஹனி பேர்ட்ஸ்'ஐ வித்துச் சாப்பிடுங்களேன். இந்தக் குருவிகளை விட்டுடுங்களேன்'' என்றான் பாபு.

''அடப் போப்பா! ஒரு ஜோடி ஹனி பேர்ட்ஸ் விக்கறதுக்குள்ளே நூறு குருவிகளை வித்துடுவேன். இல்லேண்ணா வூட்டுலே அடுப்பு எரியாது!''

''அப்போ ஒண்ணு செய்யறீங்களா? இந்தக் குருவிக எல்லாத்தையும் எனக்கு வித்துடுங்களேன்.

நான் வாங்கிக்கிறேன்'' என்றான் பாபு.

''எல்லாத்தையும் உங்கிட்டேயா? அவ்வளவுக்கு உங்கிட்டே பணம் இருக்கா?'' என்று கண் விரியக் கேட்டான் அவன்.

''இருக்கு. அவ்வளவும் என்ன விலை?''

''என்னா கண்ணு வெளையாடறியா? இது எல்லாமும் வித்தா நூறு ரூபா கெடைக்கும். அவ்வளவு பணம் உங்கிட்டே இருக்கா?''

''இதோ!'' என்று புத்தகப் பையினுள் கைவிட்டு பென்சில் டப்பாவில் இருந்த நூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான் பாபு.

குருவிக்காரன் அரண்டு போய் விட்டான். சுற்று முற்றும் பார்த்து, 'என்னாக்கண்ணு! ஊட்டுலே அப்பா அம்மாவுக்குத் தெரியாத தூக்கியாந்துட்டியா?'' என்று கேட்டான்.

''ஊகூம்! இது புத்தகம் வாங்க அம்மா கொடுத்த பணம்!'' என்றான் பாபு. அம்மா கொடுத்த பணம் என்று சொல்லும் போது பாபுவின் மனம் வலித்தது. இந்த நூறு ரூபாயைச் சேர்க்க அம்மாபட்ட கஷ்டங்கள் நினைவுக்கு வந்தன. 'என்னடா அப்படி அதிசயமான கான்வென்ட் பள்ளிக் கூடம்? அஞ்சாம் கிளாசுக்கே நூறு ரூபா ஆச்சுன்னா, கொறை படிப்பும் எப்படிப் படிக்கறது! பேசாம சாதா பள்ளிக் கூடத்துக்கே போ!' என்று புலம்பிவிட்டு ஏதோ பாத்திரத்தை அடகு வைத்துப் பணம் கொடுத்து அனுப்பினாள். அதைக்



குருவிகளுக்குச் செலவு செய்து விட்டால்? பள்ளிக் கூடத்திலேயும் 'மிஸ்' இன்னிக்கு ஃபீஸ் கொண்டு வரலைன்னா உள்ளே விடமாட்டேனிருக்காங்களே!' என்று குழம்பினான்.

'கீச்கீச்' என்ற குருவிகளின் பரிதாப ஓலம் அவனை மேலும் சிந்திக்க விடாமல் அவசரப்படுத்தின. அதற்குள் குருவிக்காரனும் அடுத்த கிராக்கிக்காகக் கூவ ஆரம்பித்து விட்டான்.

'ஐயோ! சீக்கிரமா வாங்கேன்! அடுத்த ஆள் வந்துடுவான்!' என்று பாபுவை நோக்கிக் குருவிகள் கெஞ்சுவதாக அவற்றின் ஓலங்கள் பாபுவை





நினைக்கவைத்தன. 'சரி ஆ கி ற து ஆகட்டும்' என்று துணிந்து நூறு ரூபாய் நோட்டைக் குருவிக்காரன் கையில் திணித்து, '' எல்லாக் குருவியையும் கொடுங்கள்!'' என்று அவசரப்படுத்தி னான்.

குருவிக்காரனுக்கு சந்தோஷமும் சந்தேகமும் மனதுள் போட்டியிட்டன. ஒரே மூச்சில் அத்தனை குருவியும் விற்றுப் போவதில் சந்தோஷமும், இத்தனை சின்னப் பையனிடம் நூறு ரூபாயை வாங்கிக் கொண்டால் பிறகு ஏதேனும் வம்பு வருமோ என்ற சந்தேகமுமாய் அவன் குழம்பினான்.

''ஏன் தம்பி! உங்கவீட்டிலே தெரிஞ்சாத் திட்ட மாட்டாங்களா? அறியாப்புள்ள நீதான் கொடுத்தா நா எப்படி வாங்கலாம்னு என்னை வேறே புடிச்சுக்கு வாங்களே?'' என்றான் பாபு விடம்.

''அதெல்லாம் யாரும் கேக்க மாட்டாங்க. நான் சொல்லிக்கிறேன். நீங்க குடுங்க!'' என்று பாபு அவ சரப்பட்டான்.


குருவிக்காரனுக்கு மேற் கொண்டு தாமதிக்க விரும்பவில்லை. பேசாமல் ரூபாயை வாங்கிக் கொண்டு வெகு விரைவில் வெகுதூரத்துக்குப் போய் விட வேண்டியது என்று தீர்மா னித்தபடி, அவசர அவசரமாய் பணத் தை வாங்கிக் கொண்டு, ''இந்தாபிடி!'' என்று குருவிகள் இருந்த கூடையை அவனிடம் நீட்டினான். கூடைக்குக் காசு கூடக் கேட்கவில்லை. பரபர வென்று இளம்பி தூரத்தில் நடந்து மறைந்து போனான்.

பாபு மகிழ்ச்சியோடு, தூக்க முடி யாமல் கூடையைத் தூக்கிக் கொண்டு நடந்தான். மற்றப் பிள்ளைகள் எல்லாம் எப்போதோ பள்ளிக்குப் போய்விட்டார்கள். அதையெல்லாம் பாபு கவனிக்கவில்லை. மெதுவாக அலுங்காமல் கூடையைத் தூக்கிப் போய் பஸ் ஸ்டாண்டின் மூலைக்கு வந்தான். அங்கே இருந்த காலியான மேடைமீது அதை வைத்தான். ஆகா யத்தை அண்ணாந்து பார்த்தான். ஒரு கடுக்கன்காரர் 'தம்பி தம்பி' என்று பரபரப்பாக அழைத்துக் கொண்டே ஓடி வந்தார்.

கூடையின் மூடியைத் திறக்க இருந்த பாபு தயங்கினான்.

''தம்பி, கூடையோட எல்லாக் குருவிகளையும் நீயே நூறு ரூபாய்க்கு வாங்கிக் கிட்டாயாமே. குருவிக்காரர் சொன்னார். இந்தக் குருவிகள் அத்த





உங்க மகன் சூரியன் மேற்கே உதிக்கும்னு சொல்றான் ஸார்!

அவன் சாயந்திரமாத்தான் படுக்கையை விட்டே எழுந்திருப்பான் ஸார்!

- காழி சாமா.

னையையும் நானே எடுத்துக்கறேன். பேரனுக்கு ஆண்டு நிறைவு. சூப் செய்யக் குருவிகள் தேவை. என்ன விலை கேட்டாலும் கொடுத்து விடுகிறேன்.''

பாபு கடுக்கன்காரரை அமைதியாகப் பார்த்தான்.

''ஐயா, நான் குருவிகளை இலாபத்திற்கு விற்பதற்காக வாங்கவில்லை.''

கடுக்கன்காரர் வியப்போடு நோக்கினார்.

''இவைகளை விடுதலை செய்யவே வாங்கினேன்.''

பாபு மெதுவாகக் கூடையின் மூடியைத் திறந்தான். 'கீச்கீச்' என்ற குரல்கள் கதம்பமாய் ஒலித்தன.

''ஓடுங்க ஓடுங்க! சீக்கிரமாப் பறந்து போங்க!'' என்று பாபு உற்சாகமாய்க் கூவினான். குருவிகளுக்குக் கேட்டதோ என்னவோ! ஆனால் அவை அவசரம் காட்டவில்லை. ஒன்று மெதுவாக எம்பிப் பறந்தது. அடுத்து ஒன்று, அப்புறம் ஒன்று..... என்று ஒவ்வொன்றாய் அவசரப்படாமல் எம்பிப் பறந்தன. பாபு அவசரப்பட்டான். யாரும் பார்க்கு முன்னே கூடை காலியாக வேண்டுமே என்று பதற்றப்பட்டான். ஆனால், வெருநேரமாய் அமுந்திக் கிடந்ததால் செயலற்றுப் போயிருந்த குருவிகள், விடுதலையை உணராமல், அவசரப்பட்டுப் பறக்க இயலாமல் தயங்கின. கொஞ்சம் கொஞ்சமாகக் காற்றும் இடவிரிவும் கிடைக்கக் கிடைக்க வேகம் அதிகரித்துக் கடைசியில் எல்லாம் வெளியேறிக் 'குப்'பென்று பறந்தன.

''டாட்டா!'' என்று உற்சாகமாக அவற்றைக் கையசைத்து வழி அனுப்பி வைத்தான் பாபு.

கடுக்கன்காரர் அதிர்ந்து போய் நின்றிருந்தார்.

''ஐயா, உங்கள் பேரனின் பிறந்த நாளில் இத்தனை குருவிகளுக்கு விடுதலை கிடைத்துள்ளதைப் பற்றி நீங்கள் மகிழ்ச்சியடையலாம்.''

இனி பள்ளிக்குச் சென்று பயனில்லை. அந்தக் கண்டிப்பான நீலா மிஸ், சம்பளம் கட்டவில்லை என்று திருப்பி அனுப்பி விடுவாள். அதைவிட இப்படியே கோவில் மண்டபத்தில் பொழுதைக் கழித்துவிட்டு மாலையில் வீட்டுக்குப் போய் அம்மாவிடம் திட்டோ, அடியோ பட்டுக் கொள்ளலாம்.

பாபு அளவில்லாத மனநிறைவுடன் பெருமாள் கோவிலை நோக்கி நடந்தான். முன் மண்டபத்தில் சில சில்லறைக் கடைக்காரர்கள், சில பிச்சைக்காரர்கள் மட்டுமே இருந்தனர். பொழுதை தூங்கித் தள்ளினான். மாலை வந்தது. வீட்டுக்குப் போகப் பயமாக இருந்தது. குருவிகளின் அபயக் குரல் கேட்டுக் கலங்கி, உணர்ச்சி வேகத்தில் செய்து விட்ட காரியம் மனதுக்கு நிறைவாக இருந்தாலும், அம்மாவின் கஷ்டத்தை எண்ணிய போது அவன் பிஞ்சுமனம் கனத்தது. அப்படியே நடந்து தெப்பக் குளத்துப் படிக்கட்டில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

யார் யாரோ வந்தார்கள். குளத்தில் இறங்கிக் கால் கை கழுவிக் கொண்டு போனார்கள். ஏதோ தெரிந்த பேச்சுக் குரல் கேட்டது. பாபு திரும்பிப் பார்த்தான். காலையில் அவனிடமிருந்து குருவிகளை வாங்கிக் கொள்ள வந்து ஏமாந்து சென்ற அதே கடுக்கன்காரர்தான்! இப்பொழுது பட்டு வேட்டி கட்டியிருந்தார்! கூடவே மனைவி, மகள், மருமகள், பேரக் குழந்தை. அதற்குத்தான் பிறந்த நாள் போலிருக்கு, பட்டுச் சட்டை போட்டிருந்தார்கள்.

இதற்குள் கடுக்கனும் பாபுவைப் பார்த்து விட்டார்.

''அடடட! நீதானா தம்பி? பள்ளிக்

கூடத்திலிருந்து இன்னும் வீட்டுக்கே போகலையா? யூனிபார்ம்மோடயே இருக்கியே?'' என்று சாதாரணமாகக் கேட்டார்.

பாபு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் உயிரில்லாததைப் பொல்லாதவரான கடுக்கன் கண்டுபிடித்து விட்டார்.

இதற்குள் அங்கே வந்துவிட்ட பாபுவின் வகுப்புத் தோழன் முரளி, ''டேய் பாபு, இங்கேயா இருக்கே! உங்கம்மா நீ இன்னமும் பள்ளியிலிருந்து வரலையேன்னு ஒரே கவலையா இருக்காங்க. ஆமாம், ஏன் இன்னிக்கி பள்ளிக்கூடம் வரலே? மிஸ் கூட, பாபு இன்னிக்கி சம்பளம் கட்டறேன்னு சொன்னானே? பணம் கொண்டு வந்தானான்னு கேட்டாங்க'' என்று முழுக்கதையையும் அவிழ்த்து விட்டான்.

கடுக்கன் முழுக் கதையையும் உணர்ந்து கொண்டார்! பாபுவின் அருகே வந்தார். அவன் தோளில் அன்பாகத் தட்டினார்.

''தம்பி. குருவிகளை நீ விலைக்குக் கொடுக்க மறுத்ததும் எனக்கு முதலில் கொஞ்சம் கோபமாகத்தான் இருந்தது. ஆனால், நீ கூடையைத் திறந்ததும் அவை ஆனந்தமாகப் பறந்து சென்ற காட்சி என் மனத்தைத் தொட்டு விட்டது. பள்ளிச் சம்பளம் கட்டக் கொடுத்த பணத்தைக் கொண்டு, குருவிகளுக்கு விடுதலை தந்திருக்கிறாய். உன் மனத் துணிவு யாருக்கு வரும்? அந்த மகிழ்ச்சியில் எனக்கும் பங்கு வேண்டாமா? இந்தா, நீ குருவி வாங்கக் கொடுத்த நூறு ரூபாய். நாளைக்கு சம்பளம் கட்டிவிடு. எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. இரண்டு நல்ல காரியம் செய்திருக்கிறேனே என் பேரனின் பிறந்த நாளன்று?''

நோட்டை மடித்து பாபுவின் சட்டைப் பையில் போட்டு விட்டு நடந்தார் கடுக்கன். மேலே ஏதோ சத்தம். 'கீச்கீச்' என்று சத்தமிட்டு ஒரு குருவிக் கூட்டம் மகிழ்ச்சியோடு பறந்து சென்றது. ஒரு வேளை காலையில் விடுதலை கிடைத்த குருவிகள், பாபுவுக்கு வாழ்த்துச் சொல்ல வந்திருக்குமோ?




★ சிறுவர் சிறுமியருக்காகவே இப்பொழுது ஒரு காரும் வந்து விட்டது. இது 500 சி. சி. கொண்ட எஞ்சினுடன் கூடியது. இதன் வேகம் மணிக்கு 30 கிலோ மீட்டர் தான். கடைகளுக்கும் பள்ளிக்கும் எளிதில் ஓட்டிச் செல்லுமாறு இது வடிவமைக்கப் பட்டுள்ளது.

- சி. அருள்மணி, மொரப்பூர்.



★ உலகில் மிகவும் பழமையான மரம் கலிபோர்னியாவில் மலைப் பிரதேசத்தில் Bristlecone Pine என்ற மரமே என உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் வயது 4500 ஆண்டுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

- ஏ. கே. ஆனந்தப்ரியா, சுவாமிமலை.



★ பிலிப்பைன்ஸ் தீவு மக்கள் இருவர் சந்திக்கும் போது, காதுகளைப் பொத்திக் கொண்டு ஒரு காலை மேலே தூக்கி வணக்கம் செய்கின்றனர். என்ன, விந்தையான வணக்கமோ!


- நாகை. கே. ரவி, கோவை - 18.

கேட்டாயா என் புகழை!

அந்தத் தோட்டத்தின் மூலையில் ஒரு பெரிய வேப்பமரம், தளதள வென்று இலைகளும் பூக்களுமாய் நிறைந்து பரந்து விரிந்து மணம் பரப்பியது. கொஞ்ச தூரம் தள்ளி ஒரு ரோஜாச் செடியும் வளர்ந்திருந்தது. ரோஜாச் செடிக்கு ஏகப்பட்ட பெருமை. ஏனென்றால் அது பூக்களின் ராஜா அல்லவா!

ஒருநாள் அத் தோட்டத்திற்கு ஒரு தாயும், குழந்தையும் வந்தார்கள். குழந்தை கொள்ளை அழகாகச் சிரித்தது. துள்ளித் துள்ளி ஓடியது. ரோஜாச் செடியில் மலர்ந்திருந்த மலரைப் பார்த்தது. ஆசையுடன் பறித்துக் கொடுக்கச் சொல்லி அம்மாவைக் கேட்டது. அம்மாவும் மலரைப் பறித்து, முகர்ந்து குழந்தையிடம் கொடுத்தாள். குழந்தை பூவைக் கையில் வாங்கி, முத்தமிட்டு, தலையில் சூடிக் களித்தது. 'கலகல' வென்று சிரித்து மகிழ்ந்து ஓடியது.

அவ்வளவுதான். ரோஜாச் செடிக்குப் பெருமை பிடிபடவில்லை. பெருமையோடு வேப்பமரத்தைப் பார்த்து, ''பார்த்தாயா என் புகழை! இத்தனை பெரிய மரமாயிருக்கிறாயே! இவ்வளவு பூக்கள் பூத்திருக்கிறாயே! உன்னிடம் குழந்தை மயங்கியதா! என்னிடம்தான் மயங்கியது. என் பூவைத்தான் தலையில் சூடிக்களித்தது. எவ்வளவு பெருமை பார்த்தாயா எனக்கு!'' என்று



கூச்சலிட்டது. கர்வம் தலைக்கேற தற்புகழ்ச்சி பாடி வேப்பமரத்தைக் கேலி செய்தது. வேப்பமரம் ஒன்றும் பேசவில்லை. எப்போதும் போல் அமைதியாகத் தலையை ஆட்டிக் கொண்டிருந்தது.

நாட்கள் ஓடின. தினம் தினம் குழந்தையும், அம்மாவும் வந்தார்கள். பூவைப் பறித்து தலையில் சூடிக் கொண்டார்கள். ரோஜாச் செடி பூரிப்பில் பூத்துத் தள்ளியது.

ஒருநாள் தாயும், குழந்தையும் வந்தார்கள். குழந்தையின் முகத்தில் வாட்டம். தாயின் முகத்தில் கவலை. குழந்தைக்கு உடம்பு சரியில்லை.

தோட்டக்காரர் அ ம் ம ா வி ட ம் ''குழந்தைக்கு என்னம்மா? ஏன் முகம் வாட்டமாயிருக்கு?'' என்று கேட்டார்.

''இரண்டு நாட்களா வயிற்றுவலி'' என்றாள் தாய் கவலையுடன்.

''இதுக்குப் போயா கவலைப் படுவீங்க? நம்ப வேப்பமரத்துக் கொட்டைகளில் ஒரு பிடி எடுத்து, காய வைச்சு, எண்ணெய் காய்ச்சி இரண்டு வேளை கொடுத்தால் எப்படிப்பட்ட வயிற்று வலியும் பறந்து போகும்மா'' என்றார் தோட்டக்காரர்.


கீழே விழுந்து கிடந்த வேப்பங் கொட்டைகளைச் சேகரித்துக் கொண்டு போனாள் தாய்.

அடுத்த நாள், தன் பழைய துருப்போடும் மகிழ்ச்சியோடும் ஓடி வந்தது குழந்தை.

பாவம் ரோஜாச் செடி. அதற்கு வேப்பமரத்தைப் பார்க்கவே வெட்கமாயிருந்தது. ''வேப்பு அண்ணா என்னை மன்னித்து விடு. உன் பெருமை தெரியாமல் உன்னைக் கேலி செய்து விட்டேன். என் பூக்கள் குழந்தை மகிழ்ச்சியாக இருந்த போது மட்டுமே கொண்டாடப்பட்டது. ஆனால், உன் இலைகளோ குழந்தையின் நோய் தீர்க்கப் பயன்பட்டது. அதன் துன்பத்தைப் போக்கியது. நீதான் என்னிலும் உயர்ந்தவள்.''

''பெரியவன் சின்னவனுக்கு இதில் இடமே இல்லை. ரோஜாச் செடியே, நீ குழந்தைக்கு மகிழ்ச்சியைத் தந்தாய். நான் நோயைப் போக்கினேன். இறைவன் படைப்பில் எல்லோரும் பயனுள்ளவர்களே'' என்று அடக்கத்துடன் கூறிய வேப்பமரம் இறைவனுக்கு நன்றி சொல்லும் விதத்தில் வானத்தை நோக்கிக் குனிந்து தலையாட்டியது.


எஸ். சேதுமங்கை





ஸ்கூல்லை ரெண்டு பசங்க என் சடையைப் பிடிச்சி இழுத்து கேலி பண்றாங்கப்பா ம்..ம்...ம்!
சரி சரி அழாதே! நாளைக்கே அதுக்கு ஒரு வழி செய்யறேன்!
அடுத்தநாள்
!?
!?
விநா--

பறந்து வந்த குதிரை



பவளபுரத்தை ஆண்டு வந்த மன்னர் விஜயபாலனுக்கு ரோஜா மலர் என்றால் மிகவும் பிரியம். அதனால் தன் நந்தவனத்தில் ரோஜா மலர்கள் பூத்துக் குலுங்க அதிக ரோஜா மலர்ச் செடிகளை நட்டு, வளர்த்து வைத்திருந்தார். ஓய்வு நேரங்களில் நந்தவனத்திற்குச் சென்று ரோஜா மலர் களைப் பார்த்துப் பார்த்து மகிழ்வார்.

கடந்த சில நாட்களாக அரண்மனை நந்தவனத்தில் ரோஜா மலர்கள் காணாமல் போய் விடுவதைக் கண்டு மன்னர் மிகவும் வருந்தினார். தனது மூத்த மகனான ரத்னபாலனை அழைத்து, 'மகனே, நீ நம் நந்தவனத்திலுள்ள ரோஜா மலர்களைத் திருடுபவனைப் பிடித்துக் கொண்டு வர வேண்டும்'' என்று கூறினார். ரத்னபாலனும் சென்றான். ஆனால், மூன்று நாட்கள் முயற்சி செய்து தோல்வியோடு அரண்மனைக்குத் திரும்பி வந்தான்.

விஜயபாலர் மிகவும் கோபம் அடைந்தார். தன் இரண்டாவது மகன் நந்தபாலனை அழைத்தார். அவனிடம், ''நீயாவது ஒழுங்காக நந்தவனத்திற்குச் சென்று காவல் காத்து, திருடனைப் பிடிக்க வேண்டும்'' என்று கூறினர்.


நந்தபாலனும் கிளம்பினான். ஆனால் மூத்த சகோதரனைப் போலவே அவனும் தோல்வியோடு அரண்மனைக்குத் திரும்பி வந்தான்.

ராஜாவுக்கு மிகவும் கோபம் வந்தது. அவர் சாப்பிடாமல் இருந்தார். இதைக் கவனித்த மூன்றாவது மகன் வீரபாலன், தானே நந்தவனத்திற்குச் சென்று காவல் காத்து திருடனைப் பிடிப்பதாகக் கூறினான்.

அரசர், அவன் சிறியவன் என்று தயங்கி மறுத்தார். ஆனாலும் வீரபாலன் பிடிவாதம் செய்து நந்தவனத்திற்குச் செல்ல அனுமதி வாங்கினான். மறுநாள் நந்தவனத்திற்குச் சென்றான்.

இருட்டியது. வீரபாலன் தான் பசியாறக் கொண்டு வந்த, அதிரசங்களைத் தின்று கொண்டிருந்த போது வானத்தில் மின்னல் போல ஓர் ஒளி தோன்றியது. ஒரு குதிரை நந்தவனத்தை

எஸ். சந்திரமணி



நோக்கிப் பறந்து வந்தது. அங்குள்ள ரோஜா மலர்களைத் தின்னத் தொடங்கியது.

வீரபாலன் பின்புறமாக மெதுவாகச் சென்று குதிரையின் முதுகில் ஏறிக் கொண்டான். உடனே குதிரை அவனைத் தள்ளி விட, தன் உடம்பைச் சுழற்றியது. உதறிப் பார்த்தது. அப்படியும் வீரபாலன் இறங்காததைக் கண்ட குதிரை துணுக்குற்றது.

குதிரை அவனிடம், எந்த நேரத்தில் ''நீ நினைத்தாலும் பறந்து வந்து உதவுகிறேன். இப்போது கீழே இறங்கி விடு. அதற்குப் பிறகுதான் நான் என் இருப்பிடமான கந்தர்வ லோகத்திற்குச் செல்ல முடியும்'' என்று கெஞ்சிக் கேட்டது.

வீரபாலனும் மனமிரங்கி, ''நீ இங்கே வந்து ரோஜா மலர்களை உண்ணாமல் இருந்தால் நான் கீழே இறங்கி விடுகிறேன்'' என்று நிபந்தனை போட்டான். குதிரை இணங்கியது. வீரபாலனும் கீழே இறங்கினான். குதிரையும் அவனுக்கு நன்றி கூறி விட்டு மேலே பறந்து சென்றது.

வீரபாலன் அரண்மனைக்குச் சென்று தந்தையிடம் நடந்தவற்றைக் கூற, அரசர் அவனைப் பாராட்டினார்.

சில நாட்களுக்குப் பிறகு ஒருநாள் வீரபாலன் தன் தந்தையின் அனுமதியுடன் பக்கத்து ஊர்களுக்குச் சென்றான். ரத்னகிரி என்னும் ஊருக்குச் சென்ற போது, அந் நாட்டு அரண்மனைக்கு அருகில் உள்ள அறிவிப்புப் பலகையில் கீழ்க்கண்டவாறு எழுதி



யிருந்தது.

அரண்மனை விளையாட்டு மைதானத்தில் உள்ள புலியை, மைதானத்தின் சுவரைத் தொடாமலும் தரையைத் தொடாமலும் கொல்பவருக்கு அரசர் வீரசேனன் தனது மகளான பவள வல்லியை மணம் செய்து வைப்பார்'' என்று எழுதியிருந்தது.

வீரபாலனுக்குக் குதிரை சொன்னது நினைவுக்கு வந்தது. பறக்கும் குதிரையை நினைத்தான். குதிரை பறந்து வந்தது. அதன் மேல் ஏறிக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான். மைதானத்துச் சுவரைத் தொடாது மைதானத்தில் இறங்கினான்.

போட்டி ராஜாவின் முன்னிலையில் நடைபெற்றது. பறக்கும் குதிரையின் மேலிருந்தபடி புலியுடன் மோதினான் வீரபாலன். குதிரை பறந்து பறந்து சென்றதால் தரையைத் தொடாமல் புலியைக் கொல்வது அவனுக்கு எளிதாக இருந்தது. பின்னர் குதிரையைக் கீழே இறக்கிய போது அந்த நாட்டு மன்னனும் மக்களும் அவனைப் பாராட்டினர். அந்த நாட்டு மன்னன் வீரசேனன் தன் மகளை வீரபாலனுக்கு மணம் செய்து கொடுத்தான். வீரபாலனும், பவளவல்லியும் அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு பவள புரத்திற்குக் கிளம்பினார்.

பறக்கும் குதிரையில் அவர்கள் இருவரும் வந்து சேர்ந்த போது அவனது தந்தையும், தாயும், சகோதரர்களும், மற்ற அரச குடும்பத்தினரும் வந்து களிப்புடன் வரவேற்றனர். மணமக்களை மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வாழ்த்தினர்.

கேட்கட்டுமா டாக்டர்?



டாக்டர். கு. கணேசன்



ஆர். வேங்கடேஷ், குத்தாலம் - 1.

? மருத்துவர்கள் நோயாளிகளைப் பரிசோதிக்கும் போது ஸ்டெத்தாஸ்கோப் வைத்துப் பார்ப்பதேன்?



! இதயத் துடிப்பு ஒரே சீராக இருக்கிறதா என்பதைக் கணிக்கவும், இதயத்தினுள்ள வால்வுகள் எழுப்பும் ஒலிகள், சுவாசிக்கும் போது சுவாசப் பையில் உண்டாகும் சுவாச சத்தங்கள், வயிற்றில் குடல்களின் இயக்கம் ஆகியவை ஒழுங்காக நடக்கிறதா என்பதை அறியவே மருத்துவர்கள் ஸ்டெத்தாஸ்கோப்பினால் நோயாளிகளைப் பரிசோதிக்கிறார்கள். அப்போது அவர்களுக்குத் தெரியும் மாறுதலான இயக்கங்களின் அடிப்படையில் நோயினைக் கணிக்கிறார்கள்.

எஸ். மகேஷ் பாபு, சீர்காழி.

? கண்தானம் சிறு வயதிலேயே செய்யலாமா? கண் வங்கிகள் எங்கெங்கு உள்ளன? தயவு செய்து கூறுங்கள், டாக்டர்!

! தானத்தில் சிறந்தது கண்தானம். விழி இழந்த நபருக்குப் பார்வை பெற உதவுவது எத்தனை பெரிய உதவி! ஆனால் ஒருவர் உயிருடன் இருக்கும் போது தனது விழியை தானமாகத் தர முன்வந்தாலும், அவரது கண்களை எடுப்பது நடைமுறையில் சாத்தியமில்லை! எனவே, இறந்தவர்கள் கண்களே தானமாகப் பெறப்படுவதுண்டு. சிறுவர்களும் கண்தானம் செய்யலாம்! அதற்குக் கண் வங்கிகளில் முன்பதிவு செய்ய வேண்டும். எனக்குத் தெரிந்த கண் வங்கிகள் சிலவற்றை இங்கே தருகிறேன். அரசாங்கக் கண் வங்கி நிலையம், கண் மருத்துவமனை, சென்னை - 8, அரிமா கண் வங்கி நிலையம், கண் மருத்துவமனை, சென்னை - 8, ஸ்டான்லி மருத்துவமனை, கண் சிகிச்சைப் பிரிவு, சென்னை, அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை - 20.

டி. ஷேக் அப்துல்லா, செஞ்சி.

? யானைக் கால் நோய் எதனால் வருகிறது?

! 'விச்செரேரியா பேங்கிராப்டை' (WUCHERERIA BANCROFTI) எனும் புழு வகையைச் சேர்ந்த கிருமிகள் நம் கால் பகுதியில் உள்ள நிணநீர்ப் பாதையைப் பாதிக்கும் போது யானைக்கால் நோய்



வருகிறது. இக் கிருமிகள் நமக்கு எப்படி வந்து சேர்கின்றன தெரியுமா? 'கியூலெக்ஸ் ஃபெட்டிகன்ஸ்' (CULEX FATIGANS) என்றழைக்கப்படும் ஒரு வகைக் கொசுக்கள் நம்மைக் கடிக்கும் போது யானைக் கால் வியாதிக் கிருமிகள் நம் உடம்புக்குள் நுழைந்து விடுகின்றன. ஆகவே, தம்பி! நம்மைக் கொசுக் கடிக்காமல் பாதுகாத்துக் கொண்டாலே யானைக்கால் வியாதியை வர விடாமல் தவிர்த்து விடலாம்!

ஏ. எஸ். புனிதா, மதுரை - 19.

? டூத் பேஸ்ட் கண்ணில் படுவது கெடுதலா? தப்பித் தவறி பட்டு விட்டால் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன டாக்டர்?




! பற்பசை கண்ணில் பட்டால் கெடுதலொன்றும் வராது! இருப்பினும், அதிலுள்ள சில இரசாயனப் பொருட்களின் ஒவ்வாமை காரணமாக சிலருக்கு வேண்டுமானால் கண்ணில் எரிச்சல் உண்டாகலாம். சிறிது நேரத்திற்கு கண் சிவந்து காணப்படலாம். இதனைத் தவிர்க்க பற்பசை கண்ணில் பட்டதுமே,கண்ணை தண்ணீரில் நன்கு கழுவுங்கள்! கண் எரிச்சல் நீடித்தால் மருத்துவர் யோசனைப்படி கண் சொட்டு மருந்துகளை உபயோகப்படுத்துங்கள். பலன் கிடைக்கும்!


இராஜ. சரவண பிரசாந்த், காங்கேயம்.

? டாக்டர், எனக்கு சிறு கடின வேலைகளைச்செய்தால் கூட மூச்சு வாங்குகிறது. அப்போது சில நிமிடங்களுக்கு மயக்கமும் வருகிறது. இதற்குக் காரணம் என்ன டாக்டர்?

! என்ன தம்பி, இத்தனை சாவகாசமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறாய்! மூச்சு வாங்குவதும் மயக்கம் வருவதும் சாதாரண விஷயங்களா? உடனே இதை நீ கவனிக்க வேண்டுமே! பொதுவாக சுவாசப் பைக் கோளாறுகள் உள்ளவர்களுக்கும், இதய



வால்வுகளில் பழுதுள்ளவர்களுக்கும், இரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இம்மாதிரியான மயக்கமும் மூச்சு வாங்குதலும் வருவது வாடிக்கை. எனவே, மேற்சொன்ன கோளாறுகளால் நீ பாதிக்கப்பட்டிருக்கிறாயா என்பதை முறையான மருத்துவப் பரிசோதனைகளால் அறிந்து மருத்துவம் பெற வேண்டியது அவசியம்! அவசரம்!



★ சின்னஞ்சிறிய வானம்பாடியின் இனிமையான குரலையே எல்லோரும் புகழ்கின்றனர். என்னுடைய குரலை யாரும் அந்தளவிற்குப் புகழ்வதில்லை என இறைவனிடம் முறையிட்டது மயில்!

''வானவில்லில் ஏழு நிறங்களும் உன் கழுத்தில் உள்ளன. நவரத்தினத்தை விட உன் தோகை ஒளி வீசுகிறது. நீ ஆடுகிற ஆட்டத்தைக் காண மேகத்திலிருக்கும் மழைத் துளிகள் கூட மண்ணுலகுக்கு வருகின்றன. உனது நடையே தனி அழகு. ஒவ்வொரு பறவைக்கும் ஒவ்வொரு திறமையைக் கொடுத்துள்ளேன். கிளி கொஞ்சும் மொழியில் பேசும். கழுகுக்குப் பாம்பையும் கொல்லும் வலிமை. மயிலே, உன்னிடமுள்ள அழகு. நிறங்களைப் பற்றி மகிழ்ச்சி கொள்ளாமல் மற்ற பறவைகள் மீது வீண் பொறாமை கொள்ளாதே. உலகில் உள்ள மைகளில் மோசமான 'மை' பொறா'மை'யே. அதற்கு நீ பலியாகி விடாதே! என்றார் இறைவன். மயில் வெட்கி நாணியது. குறை சொல்வதை விட்டது.

- மதுரை, சுகராஜ்.

பாரதியார்



பாப்பாப் பாட்டுப் பாரதியாம்! - அவர்,
பாலர் களுக்கோர் சாரதியாம்!
தாழ்ப்பாள் இல்லா மண்டபமாம்! -
- தமிழில்
தன்னே ரில்லாக் கோபுரமாம்!

'ஆத்திச் சூடி' மொழிகளிலே - புதிய
அற வுரைகள் பொழிந்தவராம்!
ஏற்றி வைத்த ஒளிவிளக்காய் - நின்றே
எழுச்சி கொள்ள வைத்தவராம்!


'பாப்பாப் பாட்டு' வரிகளிலே -
- நம்மைப்
பாங்காய் வாழ உரைத்தவராம்!
பூப்.... பூவாய்ப் புதுமொழிகள் - பலவும்
புதுமை யாகச் சொன்னவராம்!

'முரசுப் பாட்டு கவிதையிலே - நம்மை
முழுதாய் நிமிர வைத்தவராம்!
அறத்தின் நுட்ப அறிவுரைகள் -
- நெஞ்சில்
ஆழப் பதிய விதைத்தவராம்!

பாரதி காட்டிய பாதையிலே - நல்ல
பண்புகள் பேணி உயர்ந்திடுவோம்
பாரத நாட்டின் காவியத்தில் - பல
சாதனை புரிந்தே மேவிடுவோம்!

- அழகு. பழனிச்சாமி.

எலியார்...



அழையா விருந்தாய்க் குடிபுகுந்து
அனைவர் வீட்டிலும் வசித்திடுவார்!
நுழையாப் பொந்து வளைகளிலும்
நுழைந்து புகுந்து வெளிப்படுவார்!




துளையாய்த் துளைத்து மனைமுழுதும்
தோண்டித் தோண்டிக் குவித்திடுவார்!
வளைமேல் எரப்பில் முழுமளவு
வாலுடன் தாண்டிக் குதித்திடுவார்!

ஒளிவாய் இருக்கும் பொருட்களையும்
உருட்டிக் கண்டு பிடித்திடுவார்!
உளிவாய்ப் பல்லால் கொறித்தெதையும்
உண்டு கொழுத்துத் தடித்திடுவார்!

பழியாய்க் கடித்துக் கழனிகளின்
பயிரை நாசப் படுத்திடுவார்
உழவோர் குடிக்குப் பெருமளவில்
ஓயாச் சேதம் கொடுத்திடுவார்!


புலியாய்ப் பாய்ந்து கிழித்தெறியும்
பூனை யார்க்கே பயப்படுவார்!
எலியார் என்னும் திருப்பெயரால்
இவரைத் தமிழில் குறிப்பிடுவார்!

-தளவை. இளங்குமரன்.


சிரிப்...
சினிமாவுக்குப் போகலாமா?
நான் வரலேடா, என் தாத்தா ஹோம் ஒர்க் பண்றாரான்னு கவனிக்கணும்!
ஏண்டா நேற்று இடது கையிலே கட்டு. இன்னிக்கு வலது கையிலே கட்டா? என்ன ஆச்சு?
கிளம்புற அவசரத்திலே... நேற்று எந்தக் கையிலே கட்டுப் போட்டிருந்தோம்கிறது மறந்து போச்சு சார்.
தம்பி ரொம்ப சுறுசுறுப்பா பரிமாறுறியே... உன் பேர் என்ன?
இந்தாங்க இன்னொரு கரண்டி பாயசம்!
தக்கோலம் அ.முஸ்தபா
எங்கப்பா ரொம்பவும் முன் யோசனைக்காரர். தீப்பெட்டி வாங்கினால் கூட ஐம்பது குச்சி இருக்கான்னு எண்ணிப் பார்த்து தான் வாங்குவார்டா
போடா, அதைவிட எங்கப்பா ஐம்பது குச்சியும் எரியுதான்னு டெஸ்ட் பண்ணித்தான் வாங்குவார்.
தலையை வெளியே காட்ட முடியலே...
ஏண்டா வெயிலா?
ஊறளம் முறுக்கு, சீடை, பொரி உருண்டைகளை இவங்க கிட்டே வாங்கின கடன் தொல்லை தான்!

மேலக்கோட்டை மர்மம்

வீர.வசந்தன்



4. மீண்டும் அதே உருவம்!

வானத்தில் நிலவு நகர்ந்து கொண்டிருந்தது. ஆனந்தும், அஸ்வினியும் தங்கள் பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தனர். தேர்வு நெருங்கிக் கொண்டிருந்ததால் அவர்கள் இரவில் சற்று அதிக நேரம் கண்விழித்துப் படிக்க வேண்டியதாக இருந்தது.

அப்போது ஜன்னலில் யாரோ ''ஆனந்த்'' என்று கிசுகிசுத்து அழைக்கும் குரல் கேட்டது. ஆனந்தும், அஸ்வினியும் எழுந்து ஜன்னலருகே வந்து பார்த்தனர். வெளியே ரங்கனும், வேம்புவும் பீதி நிறைந்த முகத்தோடு நின்று கொண்டிருந்தனர்.

ரங்கன் இரகசியக் குரலில், ''மணிமாறனோட குடிசைக்கு பாஞ்சா தீ வச்சுட்டான். இப்ப அவன், வழியில இருக்கே ஓர் இடிஞ்ச மண்டபம், அதில தான் தங்கியிருக்கான். பாஞ்சாவால் மேலும் அவனுக்கு ஆபத்து வரக் கூடும். நீ போய்க் காப்பாற்று'' என்றான்.

ஆனந்த் மேலும் அவனிடம் ஏதும் விளக்கமாகக் கேட்குமுன், மின்னல் வேகத்தில் ரங்கனும் வேம்புவும் இருட்டுக்குள் வெகுதூரம் ஓடிவிட்டனர்.

''பாஞ்சாவோட அக்கிரமத்துக்கு ஓர் எல்லையே இல்லாமல் போயிடும் போல இருக்கு'' என்று முணுமுணுத்த அஸ்வினி, தன் அண்ணனிடம் ''இப்ப என்ன செய்யறது?'' என்று கேட்டாள்.

அதற்குப் பதில் சொல்ல அவன் வாயெடுக்கு முன், அவர்கள் அம்மா கமலா அங்கு வரவே, ஆனந்த் அவளிடம் ''அம்மா, மணிமாறனோட குடிசை தீப்பற்றி எரிஞ்சு போச்சாம். அவன் ஒரு பாழடைஞ்ச மண்டபத்துல போய்ப் படுத்துக்கிட்டிருக்கானாம்... இப்ப என்ன செய்யறதும்மா....? ரங்கனும் வேம்புவும் வந்து இரகசியமா சொல்லிட்டுப் போறாங்க?'' என்று கையைப் பிசைந்தான்.

அம்மாவின் முகத்தில் இரக்கம் தோன்றியது. ''யாருமில்லாத அந்தப் பிள்ளைக்கு இப்படியொரு கஷ்டமா....! ஆனந்த், நீ போய் அவனை இங்க அழைத்து வந்துடேன். குளிர் வேற அதிகமா இருக்கு.... பாவம், மண்டபத்துல என்ன சிரமப்படுதோ?'' என்றாள்.

''இதோ ஒரு நொடியில் போய் அழைத்து வறேம்மா'' என்று உடனே புறப்பட்டான் ஆனந்த். ''ஜாக்கிரதையா போயிட்டு, சீக்கிரம் வந்துடு'' என்ற அம்மாவின் எச்சரிக்கைக்குத் தலையசைத்து விட்டு, கை விளக்கை எடுத்துக் கொண்டு ஊருக்கு ஒதுக்குப் புறமாக இருந்த இடிந்த மண்டபத்தை நோக்கி நடந்தான் அவன்.

மண்டபத்தை அடைந்த ஆனந்த் மெல்லிய நிலவொளியில் மணிமாறனின் வண்டி நிற்பதையும், தூண் ஒன்றில் அவன் மாடு கட்டப் பட்டிருப்பதையும் கண்டான். மெதுவாகப் படிகளில் ஏறி மேலே சென்றான். மணிமாறன் அங்கே, கையை

மடித்துத் தலைக்கு வைத்து க் கொண்டு கல் தரையில் படுத்திருப் பது தெரிந்தது. மெதுவாக அவனரு கில் சென்று தோளைப் பற்றி உலுக் கினான்.

விருட்டென்று எழுந்து உட்கார்ந்த மணிமாறன் ஆனந்தைப் பார்த்ததும் குழப்பமடைந்தவனாய், ''நீ.... இங்க...! இந்த நேரத்துல....! எப் படி?'' என்று தடுமாறினான்.

ஆனந்த் பரிவுடன் அவன் கையைப் பற்றிக் கொண்டு, ''வா, வீட்டுக்குப் போகலாம்'' என்றான்.

மணிமாறனின் குழப்பம் மேலும் அதிகரித்தது. ''இந்த நேரத்துல வீட் டுக்கு எதுக்குக் கூப்பிடறே? என்ன விஷயம்னு சொல்லு?'' என்று தயங் கினான்.

''எனக்கு எல்லாம் தெரியும் மணிமாறா.... இனி நீ எங்க வீட்டி லேயே எந்தப் பயமும் இல்லாம இருக் கலாம்.... உன்னை உடனே அழைச் சுட்டு வரும்படி அம்மா சொல்லி யிருக்காங்க.... சீக்கிரம் புறப்படு'' என்றான் ஆனந்த்.

அவன் தன்னிடம் காட்டுகிற அன்பை நினைத்து மணிமாறனின் மனம் ஒரு கணம் நன்றியால் விம்மித் தணிந்தது.

''நீ இப்ப எதுவும் பேச வேண் டாம். எங்கூட வரப் போறியா, இல்லியா?'' என்று அவன் மேலும் அதட்ட, மணிமாறன் வேறு வழி யில்லாமல் கீழறங்கிச் சென்று மாட்டை அவிழ்த்து வண்டியில் கட்டினான். மண்டபத்திலிருந்த ஆனந்தைப் பார்த்து, ''வா, போகலாம்'' என்றான்.

ஆனால், ஆனந்திடமிருந்து பதில் எதுவும் வரவில்லை. அவன் மேலே நின்றவாறு வைத்த கண் வாங்காமல் மலைச் சரிவை உற்று நோக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தவன், தானும் அந்தத் திசையில் பார்த்தான்.

அடுத்த கணம் அவன் உடம் பெல்லாம் நடுங்கியது.

ஒரே பாய்ச்சலாகப் படிகளில் பாய்ந்தேறி ஆனந்தின் கையைப் பிடித்து இழுத்தான். ''அங்க என்ன பார்க்கிறே? வா, வீட்டுக்குப் போக லாம்'' என்று பரபரத்தான்.

ஆனந்த் அவன் கையை உதறி விட்டு, மீண்டும் அங்கேயே உற்றுப் பார்த்தான். அவன் முகத்தில் வியப்பும், திகைப்பும் மாறி மாறித் தோன்றின.

அவன் பார்வை பதிந்த இடத்தில் மலைக் கோட்டை முனிஸ்வரன் கோயிலை நோக்கி மேலே செல்லும் ஒற்றையடிப் பாதையில், அந்தக் கிரா மத்து ஆண்கள் வரிசையாகப் போய்க் கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் வெளிச்சத்துக்காகச் சிறிய தீவட்டி களைப் பிடித்தவாறு மௌனமாக மலை மீது அவர்கள் ஏறிச் செல்வது தெரிந்தது! அவர்கள் எங்கே போகி றார்கள்? பகலெல்லாம் எந்த வேலைக் கும் செல்லாமல் வீட்டுத் திண்ணை களில் சுருண்டு படுத்திருக்கும் அவர்கள் இந்த இரவு நேரத்தில் என்ன வேலைக் காகச் செல்கிறார்கள்!

ஆனந்த் திரும்பி மணிமாறனைப் பார்த்தான். ''அதோ போய்க்கிட்டிருக் கிற ஜனங்கள் எல்லாம் இந்தக் கிரா மத்தைச் சேர்ந்தவங்க தானே...! இந்த நேரத்துல எங்க போறாங்க?'' என்று கேட்டான்.

மணிமாறனின் முகம் வெளுத்தது. ''அது.... வந்து.... அவங்க எங்க போனா நமக்கென்ன? நீ வா போக லாம்'' என்று அவன் கையைப் பிடித்து மறுபடியும் இழுத்தான்.

''என்னப்பா! புது மாதிரி மேசை?''
''ஓசியில் சாப்பிட வர்றவங்க
ளுக்கு ஞாபகப்படுத்தத்தான்!''
- ச. காணிக்கைராஜ்,
திடாரங்கொண்டான்.





''எலியாரே, உங்க பல் மட்டும் பளபளன்னு மின்னுதே! எப்படி?''

''வீட்டுக்காரரோட டூத் பேஸ்ட் குப்பியைத் தினமும் கடிச்சு வைப்பேன்!''

- ச. காணிக்கைராஜ், திடாரங்கொண்டான்.

''அந்த மலைக்கோட்டை முனிஸ்வரன் கோயில் பக்கம் யாரும் போகக் கூடாது, போக மாட்டாங்க, இதுவரை போனவங்களும் திரும்பி வந்ததில்லேன்னு சொன்னியே....? இப்ப என்ன நடக்குது? எதுக்கு எங்கிட்ட பொய் சொன்னே?''

ஆனந்தின் கேள்விக்குப் பதில் கூறத் தெரியாமல் நின்ற மணிமாறன், ''ஆனந்த் அம்மா உன்னைத் தேடுவாங்க... வா போகலாம்'' என்று கெஞ்சுகிற குரலில் அழைத்தான்.

ஆனந்தின் முகம் பிடிவாதத்தால் இறுகியது. அவன் மணிமாறனைப் பார்த்து, ''நான் வரலே, அவங்க எங்க போறாங்கன்னு உண்மையைச் சொல்லு... இந்த ஊர் ஜனங்க வாழ்க்கையில் என்னவோ ஒரு மர்மம் புதைந்திருக்கு. இல்லேன்னா, அந்த பாஞ்சாவைப் பார்த்து ஒட்டு மொத்தமா எல்லோரும் இப்படி பயப்பட மாட்டாங்க.... அதோட, அரசாங்கம் தரும் மறுவாழ்வுத் திட்டத்தையும் இவங்க யாரும் பயன் படுத்திக்க முன்வரலே. வேலை கொடுத்தால் கூட வர மறுக்கிறார்கள்! இப்ப நீ உண்மையைச் சொல்லணும்.... இல்லேன்னா....'' என்று நிறுத்தியவன், அவன் அருகில் வந்து, ''நான் அவங்க பின்னாடி இப்பவே போகப் போறேன்... அவங்க எங்க போறாங்க, என்ன செய்யறாங்கன்னு பார்த்துட்டுத்தான் திரும்பி வருவேன்'' என்று உறுதியான குரலில் குரலில் சொன்னான்.

மணிமாறன் சிலை போலத் திகைத்து நின்றான். பின் தன்னைத் தேற்றிக் கொண்டவனாக, ''இனி உன்கிட்ட எதையும் மறைக்க முடியாது போலத்தான் தோணுது.... எல்லா விஷயத்தையும் நானே சொல்லிடறேன். இப்ப வா, வண்டியில ஏறு போகலாம்.'' என்றான்.

மண்டபத்தை விட்டு வண்டி நகர்ந்து சென்றதும், இவ்வளவு நேரமும் இருட்டுக்குள் மறைந்து அங்கு நடந்ததையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த நாகராஜன், மலை அடிவாரத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்தான்.

மாட்டு வண்டி ஆனந்தின் வீட்டை அடைந்த போது அம்மா கமலாவும், அஸ்வினியும் அவர்களுக்காகக் காத்திருந்தனர்.

மணிமாறனைப் பார்த்ததும் அம்மா ''என்ன மணிமாறா இது, உன் குடிசை தீப் புடிச்சு எரிஞ்சுட்டுதுன்னா, நேரே இங்க வர வேண்டியது தானே.... மண்டபத்துல போய் ஏன் படுக்கற....? நல்ல பிள்ளை நீ, சரி, போய் மாட்டை அவிழ்த்துக் கொல்லையில கட்டிட்டு, முன்பக்க அறையில் படுத்துக்க, மீதியைக் காலையில பேசிக்கலாம்'' . என்று ஆதரவாகக் கூறினாள்.

மணிமாறன் மாட்டை அவிழ்த்துக் கொல்லையில் கொண்டு போய்க் கட்டி விட்டுத் திரும்பிய போது, ஆனந்தின் அம்மாவும், அஸ்வினியும் படுக்கைக்குச் சென்று விட்டிருந்தனர். ஆனால், ஆனந்த் மட்டும் படுக்கச் செல்லாமல் அவன் வருகைக்காகக் காத்திருந்தான்.

மணிமாறன் அவனைப் பார்த்துத் தயங்கியவாறு, ''இந்த ராத்திரியில அதைப் பற்றி பேசணுமா ஆனந்த்? போய்ப் படு... காலையில பேசலாம்'' என்றான்.

ஆனால், பிடிவாதமாக அவனைப் பார்த்த ஆனந்த் ''நீ இப்பவே எல்லாத்தையும் சொல்லணும், இவங்க செய்யறது நேர்மையான காரியமா எனக்குத் தோணலே... அந்தப் பாஞ்சாவும் நல்லவனாத் தெரியல'' என்று அவன் கையைப் பிடித்து இழுத்தவாறு பக்கத்து அறைக்குச் சென்றான்.

சற்று நேரம் பேசாமல் தரையைப் பார்த்துக் கொண்டு நின்ற மணிமாறனை உட்காரச் சொன்ன ஆனந்த், ''சொல்லு மணிமாறா. ம லை க் கோட்டை முனீஸ்வரன் கோவில் பகுதியில் ஏதோ மர்மமான ஒரு செயல் நடக்கிறது. அதில் இந்தக் கிராமத்து மக்கள் எல்லோருமே பங்கெடுக்கிறார்கள். அது சட்டத்திற்குப் புறம்பானது என்று நான் ஊகிக்கிறேன். சரிதானே?'' என்று கேட்டான்.

''நீ ஊகிப்பது சரிதான் ஆனந்த்'' என்ற மணிமாறன், ''வேறு என்னென்ன ஊகிக்கிறாய்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.


''அந்த சட்டத்திற்குப் புறம்பான மர்மச் செயல்தான் அவர்களுக்கு வருவாய் கொடுக்கிறது. அதனால்தான் கிராம மக்கள் யாரும் அணைக்கட்டு வேலைக்கு வருவதும் இல்லை. பகலெல்லாம் தூங்கிக் கழிக்கிறார்கள். இரவில் மலைக்குப் போய் வேலை செய்கிறார்கள். சரிதானா?''

''முற்றிலும் சரிதான் ஆனந்த்'' என்று பாராட்டிய மணிமாறன், ''நீயேதான் சரியாகக் கூறி விட்டாயே.... அப்புறம் மேற் கொண்டு என்ன விவரம் உனக்குத் தேவை?'' என்று கேட்டான்.

''நீ பெரிய ஆள்தான்'' என்று கூறிச் சிரித்த ஆனந்த், ''அவர்கள் மலைக் கோட்டைப் பகுதியில் செய்யும் மர்மமான; சட்ட விரோதமான தொழில் என்ன என்பது தானே மிக முக்கியமானது. அதைக் கூறும்படி தானே உன்னிடம் கேட்கிறேன்?'' என்றான்.

மணிமாறன் பதில் கூற முயன்றான்.

அதற்குள் உள்ளேயிருந்து அம்மா





ஏண்டா, தமிழ் ஆசிரியர் கேட்ட கேள்விக்கு நீ கண்களாலேயே பதில் சொன்னயாமே!

இரட்டைக் கிளவிக்கு உதாரணம் கொடுன்னார். ''திருதிரு''ன்னு முழிச்சேன். பதில் சரிதான் உக்காருன்னுட்டாரு...!

சர்....! சார்....! என் குட்டியை யாரோ என்னிடமிருந்து 'பிட்பாக்கெட்' அடிச்சுட்டாங்க சார்...! நீங்கதான் கண்டுபிடிச்சுத் தரணும். ப்ளீஸ்...!

ச. காணிக்கைராஜ். கிடாரங் கொண்டான் (அஞ்சல்)



கமலாவின் குரல் கேட்டது.

''இரண்டு பேரும் தூங்காமல் என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? ஆனந்த் நீ இப்படி வா. மணிமாறனைத் தூங்க விடு. பாவம் பகலெல்லாம் உழைத்துக் களைத்துப் போயிருப்பான். காலையில் பேசிக் கொள்'' என்று அம்மா ஆனந்தை அழைத்தாள்.

வேறு வழியில்லாமல் ஆனந்த் எழுந்து போனான். படுத்துக் கொண் டான்.

ஆனந்த் படுத்துக் கொண்டானே தவிர உறக்கம் வரவில்லை. பகலெல்லாம் தூங்கி விட்டு இரவா னதும் மலைக்கோட்டைப் பகுதிக்குப் போய் அவ்வளவு ஜனங்களும் பங் கேற்கும் அந்தச் சட்டவிரோதமான மர்மத் தொழில் என்னவாக இருக்கும் என்று யோசிப்பதிலேயே அவன் மனம் ஈடுபட்டிருந்தது. அது சிலைத் திருட் டாக இருக்க முடியாது. ஏனெனில் இவ்வளவு பேர் தொடர்ந்து ஈடு படக்கூடிய தொழில் அல்ல அது. ஆனால், ஒன்றை மட்டும் அவனால் உறுதி செய்து கொள்ள முடிந்தது. அந்த மர்மத் தொழிலுக்குத் தலைமை வகிப்பவன் பாஞ்சா. ஆனந்துக்குத் தூக்கம் வர வெகுநேரம் பிடித்தது.

ஆனந்த் சென்ற சிறிது நேரத்திற் கெல்லாம், மணிமாறன் படுத்திருந்த அரை ஜன்னலில், தோட்டத்தில் ஓர் உருவம் தோன்றியது. அது நமக்கு ஏற்கனவே அறிமுகமானதுதான். பட கில் இருந்து ஆனந்தையும், அஸ்வினி யையும் காப்பாற்றிய அதே தாடி மீசை கொண்ட நல்லவர்தான்! ஜன்னல் கம்பி யைப் பிடித்துக் கொண்டு, உள்ளே உறங்கிக் கொண்டிருந்த மணிமாற னைப் பார்த்துக் கண்ணீர் சொரிந்து விட்டு இருளில் மறைந்தது அந்த தாடி மீசை உருவம்!

உருவம் மறைந்த சில நிமி டங்களுக்குப் பின், தோட்டத்திலிருந்த பருத்த மரத்தின் பின்னாலிருந்து வெளியே வந்தான் நாகராஜன். அந்த தாடி மீசை உருவத்தைப் பின் தொடர்ந்தான்!

(வளரும்)



எழுத்தை ஆண்டவர்!

கல்கி என்றொரு நாயகர் பிறந்தார்.
கனித் தமிழ் நாட்டினிலே - அவர்
காலத்தை வெல்லும் சாதனை படைத்தார்
காவியத் தமிழினிலே!

எழுத்தினை வடிக்கும் சிற்பியென் றேஅவர்
இசைபட வாழ்ந்திருந்தார் - சுவைப்
பழத்தின் இனிப்பாய் பற்பல இலக்கியம்
படைத்தே அவர் உயர்ந்தார்!

சிறுகதை நாவல் சிந்தனைக் கட்டுரை
சிரிக்கும் நகைச் சுவையை
உருவாக்கியவர் உயர்தமிழ் இலக்கியம்
ஒளி பெற உதவியவர்!

தேச பக்தியை வளர்த்திடவே - ஒரு
தியாக பூமியை ஆக்கியவர்!
மாசில் பாரதி மகத்துவம் அறிந்திட
மாகவி என்றே உணர்த்தியவர்!

சரித்திர நாவலை அவர்போல் எழுதிடத்
தரணியில் எவருண்டு! - நம்மை
வரிவரியாகப் படித்திடத் தூண்டும்
மயக்கம் அதில் உண்டு!

பொன்னியின் செல்வன் புகழ்மிகு கல்கியின்
புதுமைப் படைப்பாகும் - பண்டை
மன்னவர் சிறப்பின் மாண்பினை விளக்கும்
மாபெரும் சான்றாகும்!

எத்தனை கதைகள் எத்தனை நாவல்கள்
எண்ணில் அடங்காவே - அவை
அத்தனை யும்தமிழ் மக்கள் உணர்விளில்
ஆழப் பதிந்தனவே!


இனியொரு மனிதர் இவர்போல் பிறந்து
எழுத்தினை ஆள்வாரோ - அவர்
தனிவழி தொடர்ந்து சாகா இலக்கியம்
சமைத்திட முயல்வாரோ!

பொன்னியின் புதல்வரை எண்ணிடில் நெஞ்சம்
பொங்கிச் சிலிர்த்திடுமே - நம்
கன்னித் தமிழின் பெருமையை உயர்த்திய
கருணையை வாழ்த்திடுமே!

வெற்றியூர். சுப. திருஞானம்







சுகன்யா
கதை: ஆனந்தி
படம்:
அரசன் சரியாதிக்கு இரு குழந்தைகள் அண்ணன் ஆனர்த்தா...
யானை ஏற்றம் கற்றுக் கொள்கிறாயா?
யானை ஏற்றம் ரொம்பப் பிடிக்குமே!
தங்கை சுகன்யா...
என்ன அழகு! முகம் வட்ட வடிவமாக சந்திரனைப் போல...
சோதிடர்...
அரசே! சுகன்யா உங்கள் வம்சத்துக்கே பெரும் புகழ் சேர்ப்பாள்!
சுகன்யா செல்லக் குழந்தையாக வளர்ந்தாள்...
அடேயப்பா! என்ன துறுதுறுப்பு! என்ன ஓட்டம்!
சுப வேளையில் பிறந்ததால் நீ சுகன்யா என்று பெயர் பெற்றாய். நன்கு படித்துக் கலைகளிலும் சிறக்க வேண்டும்!


சுகன்யா தந்தையின் அறிவுரையை ஏற்றாள்...
பாடம் ஆரம்பிக்கிறேன். கலைமகளைப் பிரார்த்தித்துக் கொள்!
கல்வியில் மட்டுமின்றி கலைகளிலும் சிறந்தாள்...
சுகன்யா பாடுவதைக் கேட்டால் பசியே தெரியாது!
எத்தனை அழகாகக் கோலாட்டம் போடுகிறாள்!
சுகன்யா, தந்தை வேட்டைக்குப் போகும்போது உடன் செல்வாள்...
அப்பா நீங்கள் வேட்டையாடித் திரும்புங்கள். நாங்கள் இங்கேயே விளையாடிக் கொண்டிருக்கிறோம்!
சில காவலர்களை விட்டுச் செல்வார் அரசர்...
அதோ மான் கூட்டம்!


எவ்வளவு அழகிய ஏரி!
எத்தனை விதமான பறவைகள்!
கானகத்தின் அழகுகளைப் பார்த்துத் திரும்புவாள் சுகன்யா...
சுகன்யாவுக்கு அரண்மனையை விடக் காடுதான் பிடிக்கிறதாம்!
அவளுக்குத் திருமண வயது வந்துவிட்டது -
நம்மைப் பிரிந்து போய் விடுவாளே என்று இருக்கிறது...
ஒரு நாள்...
அப்பா வன போஜனத்துக்கு எல்லாம் தயார், புறப்படலாமா?
ஓ!
மன்னர், வேட்டையாட அடர்ந்த வனப்பகுதிக்குச் செல்ல...
நீங்கள் ஒளிந்து கொள்ளுங்கள், நான் கண்டு பிடிக்கிறேன்!



ஒளிந்து கொண்ட தோழிகளைத் தேடினாள் சுகன்யா...
எங்கே போய்விட்டீர்கள்! கண்டுபிடிக்காமல் விடமாட்டேன்!
தோழிகளைத் தேடிக் கொண்டே...
ரொம்ப தூரம் வந்து விட்டேன் போலிருக்கே... காவலர்களையும் காணோமே!
அடேயப்பா! எவ்வளவு பெரிய புற்று! உள்ளே என்ன இருக்கும்?
உள்ளே ஏதோ மின்னுவது போலிருக்கே...
சுகன்யா மரக் கிளையிலிருந்து இரு குச்சிகளை உடைத்தாள்...


கூரா உடைஞ்சிருக்கு, உள்ளே பளபளப்பதைக் கிளறி எடுக்கப் பார்க்கலாம்...
ஆ! ஐயோ! என் கண்களைக் குத்திய பாவி யார்?
புற்றுக்குள் குரல் ஒலி கேட்டுப் பயந்து —
மனிதக் குரல்! ஓடிப்போய் விடலாம்!
தேடி வந்த காவலர், இளவரசியைக் கண்டு—
இளவரசி எங்கு போனீர்கள்? அரசருக்கு என்ன பதில் சொல்வது என்று கவலைப் பட்டுப் போனோம்!
தோழியர் —
ஏன் முக வாட்டம்?
ஒன்றுமில்லை
நல்லவேளை, விளையாட்டு வினையாகி விடவில்லை!


மன்னர் வேட்டை முடிந்து திரும்ப —
சுகன்யா! வன போஜனம் எப்படி? ருசிதானா? சந்தோஷமாய் விளையாடினாயா?
ம்... அரண்மனை திரும்பலாமே!
அரண்மனையில் அனைவருக்கும் வயிற்றுவலி ஏற்பட்டது —
ஐயோ! தாங்க முடியலையே!
எல்லோருக்குமா வலிக்கும்? இது ஏதோ சாபம்தான்!
அரசரிடம் அமைச்சர் —
அரசே! அத்தனை பேரும் வயிற்று வலியால் துடிக்கிறோம்!
நான் கூடத்தான்... சுகன்யா எங்கே?
அந்தப்புரத்தில் —
சுகன்யா! உடம்பு ஒன்றும் இல்லையே உனக்கு?
அப்பா! நான் பெரிய தவறு செய்து விட்டேன்!
சுகன்யா நடந்ததைக் கூறி—
என்னை மன்னியுங்கள்!
புற்றிலே முனிவர்தான் இருந்திருக்க வேண்டும்! கடும் தவம் புரிந்தவரைச் சுற்றிப் புற்று உருவாகி இருக்கும்!




முனிவர் சாபம்தான் இந்த வயிற்றுவலி. அவர் காலில் விழுவது தவிர வேறு வழியில்லை.
கானகத்தில் சுகன்யா வழிகாட்டிச் செல்ல —
கிட்டத்தட்ட அந்த இடத்தை அடைந்து விட்டோம்...
தவம் கலைக்கப்பட்ட முனிவர், புற்றிலிருந்து வெளிப்பட்டிருந்தார் —
தவ முனிவரே! வணங்குகிறேன். என் மகள் அறியாமல் செய்த பிழை...
சுவாமி! மன்னித்து அருளுங்கள். சாபத்தைப் போக்குங்கள்!
சர்யாதி! நான் சபிக்கவில்லை! தேவனைய நோக்கி நான் செய்த தவத்தைக் கலைத்ததால் உங்களுக்கெல்லாம் இந்தக் கஷ்டம் வந்தது...
மகரிஷியே!
ச்யவனன் என்பது என் பெயர்!



சியவனரே! கண்களை இழந்த உங்களைக் கவனித்துக் கொள்ள ஆட்களை நியமிக்கிறேன், அனுமதியுங்கள்!
சரியாதி! நான் பார்வை இழக்கக் காரணம் உன் மகள். எனவே என் உடனிருந்து வழி காட்ட சுகன்யாவைக் கொடு.
ஆ! சுவாமி, இதென்ன சோதனை?
சரியாதி! சுகன்யா என்னை மணந்து கொண்டால் உங்கள் எல்லோருக்கும் வலி நீங்கும். சுகன்யாவுக்கும் பழி நீங்கும். யோசித்துச் சொல்!
அரண்மனை திரும்பி ஆலோசித்தான் அரசன் —
கிழவனும் குருடனுமான ரிஷிக்கு என் மகளைக் கொடுப்பதா? அவள் காட்டில் வாழ்வதா?




மந்திரி பிரதானிகள் மௌனமாக இருக்க, சுகன்யா —
அப்பா! முனிவரை மணந்து கொள்வது எனக்குச் சம்மதமே!
கண்ணே! பார்வையற்றவரை மணந்து கொண்டு காட்டில் எப்படி வாழ்வாய்? வேண்டாம்!
அப்பா! நான் காட்டில் வாழ்வதை விரும்புகிறேன். தபஸ்வியான முனிவருக்குப் பணிவிடை செய்வதை பாக்கியமாகக் கருதுகிறேன்!
அரசர், மனைவியோடும் மகளோடும், பரிவாரங்களோடும் கானகத்துக்குச் சென்று —
சீதனமாகப் பல்லக்கும், ஆடை ஆபரணங்களும், ஏவல் புரிய வீரர்களும் பணிப் பெண்களும் தருகிறேன்...


அவையெல்லாம் காட்டின் அமைதியைக் குலைக்கும். வேண்டாம். மகளை மட்டும் விட்டுச் செல்லுங்கள்!
முறைப்படி சுகன்யாவை ச்யவன மகரிஷிக்குத் திருமணம் செய்து வைத்த சர்யாதி...
வருகிறேன் முனிவரே!
போய் வரட்டுமா அம்மா...!
சுகன்யா, பார்வை இழந்த கணவருக்குப் பணிவிடைகள் செய்தாள் —
நதிக்கரை. இங்கே ஆழம் அதிகம். ஜாக்கிரதை...!
மாலை நேரம். சந்தியா வந்தனம் செய்யும் சமயம் —
பழங்கள் உரித்து வைத்திருக்கிறேன். சாப்பிடுங்கள்...!



அசுவினி தேவர்கள் தேவலோகத்து வைத்தியர்கள்
சில மூலிகைகள் தேவை...
இருவரும் பூவுலகம் வந்து–
ஆகா! இந்தக் காடு எத்தனை அழகு!
நாம் தேடும் மூலிகைகள் இங்கே கிடைக்குமா?
அசுவினி தேவர்கள் சுகன்யாவைப் பார்க்க–
என்ன அதிசயம்! இந்த அழகி எதற்குக் காட்டில் இருக்கிறாள்...?
கேட்டு விடுவோம்!
பேரழகியே, நீ யார்? காட்டில் தனியே என்ன செய்கிறாய்?
நான் மன்னர் சர்யாதியின் மகள். சியவன முனிவரின் பத்தினி...


ஆசிரமத்துக்கு வந்து போகலாமே.... முனிவர் மகிழ்ச்சி அடைவார்!
அசுவினி தேவர்கள் சுகன்யாவின் அழகில் மயங்கி —
உன்னைப் போன்ற பேரழகி காட்டிலா வசிப்பது....? அதுவும் கிழ முனிவருக்கு வேலைக்காரி போல....
எங்களில் ஒருவரை மணந்தால் தேவ லோகத்தில் வாழலாம்! விரும்பியதை யெல்லாம் பெறலாம்....
தேவர்களாக இருந்தும் பேசத் தகாததையெல்லாம் பேசுகிறீர்கள்... எச்சரிக்கிறேன்! சபித்து விடுவேன்...
தவறு உணர்ந்த அசுவினி தேவர்கள், ரிஷி பத்தினியின் சாபத்துக்குப் பயந்து —
சுகன்யா! எங்களை மன்னித்துவிடு!
ஆகட்டும். என் கணவருக்குப் பார்வை கொடுங்கள்!


அவ்வாறே செய்கிறோம்! ஆனால் ஒரு நிபந்தனை!
உன் கணவரோடு சேர்ந்து நிற்போம். நீ உன் கணவரை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்!
சுகன்யா நிபந்தனைக்கு உட்பட்டாள் —
முதலில் எங்கள் அதிதி பூஜையை ஏற்றுக் கொள்ளுங்கள்!
அச்வினி தேவர்கள் சியவனரின் ஆச்ரமத்தை அடைந்து—
தவ முனிவரே! வணங்குகிறோம்!
தேவ வைத்தியர்களே வருக!
நாங்கள் உபசரிப்பை ஏற்கு முன், தடாகத்தில் ஸ்நானம் முடிக்க விருப்பம்...
இதோ, நானும் வருகிறேன்!
சுகன்யா, நாங்கள் மூழ்கி எழுந்ததும் உன் கணவருக்கு மாலையிட்டுக் கரம் பற்றிக் கரை ஏற்று...
அப்படியே ஆகட்டும் சுவாமி--


திரிபுர சுந்தரியான தேவியைப் பிரார்த்தனை செய்து மூழ்கி எழுவோம்!
தேவி, இந்தச் சோதனையில் என்னைக் காத்தருள்!
மூவரும் மூழ்கி எழ...
மூவரும் ஒரே மாதிரி இருக்கிறார்களே! பராசக்தி, என் கணவரைக் காட்டுவாய்...!
சுகன்யாவின் தூய வலிமைக்கு பராசக்தி இரங்கி—
ஆ! என் மனதுக்கு சியவனர் யார் என்பது தெளிவாகத் தெரிகிறது!
சுகன்யா மலர் மாலையைக் கணவர் கழுத்தில் இட—
தேவ வைத்தியர்கள் கருணையால் பார்வையைத் திரும்பப் பெற்றேன்...!
எங்கள் அருள் மட்டுமல்ல, உங்கள் மனைவியின் பக்தியும் சேர்ந்து தான் அதை சாதித்தது!


உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்ய?
முனிவரே! யாகங்களில் வைத்தியர்களுக்குப் பாங்கு கிடையாது என்று இந்திரன் எங்களை மட்டம் தட்டி வருகிறான்... அதை மாற்ற முடியுமானால்...
அச்வினி தேவர்களின் கோரிக்கையை ஏற்றார் சியவனர். சில காலம் சென்று சர்யாதி வந்த போது —
அப்பா! அச்வினி தேவர்கள் இவருக்குப் பார்வையைத் திரும்ப அளித்து விட்டார்கள்!
மன்னவா! ஸோமயாகம் செய்ய வேண்டும். தாங்கள் தான் நடத்தித் தர வேண்டும்!
நிச்சயம்! பிரமாதமாக நடத்தி விடலாம்!
யாகத்துக்கான ஏற்பாடுகள் மிகப் பெரிய அளவில் நடந்தன.
சியவனருக்குப் பார்வை கிடைத்ததற்கு தேவர்களுக்கு உரிய முறையில் நன்றி செலுத்துவோம்!
வசிஷ்டர் முதலான எல்லா ரிஷிகளும் வந்தனர் —
சியவனரே! உங்களை மருமகனாக அடைய என்ன தவம் செய்தேனோ! எப்படிப்பட்ட சத் சங்கம்!



இதோ இந்திராதி தேவர்களும் வந்துவிட்டனர். வரவேணும் வரவேணும்!
இந்திரன் கோபத்தோடு —
அதுசரி, அச்வினி தேவர்களுக்கு இங்கு என்ன வேலை? வெளியேறட்டும்!
இந்திரா! சூரியனுடைய பிள்ளைகளான இவர்கள், எல்லா தேவர்களுக்கும் சமமானவர்கள்!
இந்திரன் ஒப்புக்கொள்ள மறுக்க, ரிஷிகள் ஹோமம் செய்து ஒரு பயங்கர பூதத்தை எழச் செய்தார்கள் —
ஐயோ, விருத்திராசுரனைப் போல பயங்கரமாயிருக்கிறதே!
இந்திரன் சியவனரின் சக்தி உணர்ந்து சரண் அடைந்தான் —
தேவர்களுக்குள் ஏற்றத் தாழ்வு எதற்கு? ஒற்றுமையாய் இருங்கள்!
யாகங்களில் அச்வினி தேவர்களுக்கு இனி சம அந்தஸ்து!
சுகன்யாவும் சியவனரும் பராசக்தியை பூஜித்து நீண்ட காலம் சந்தோஷமாக வாழ்ந்தார்கள்.

மொகலாயப் பேரரசர் அக்பர் தமக்கு எந்த விஷயத்தைப் பற்றி ஐயம் ஏற்படினும், தமது அவையில் இருந்த அறிஞர் பீர்ப லிடம் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்வது வழக்கம்.

ஒரு சமயம் அக்பருக்கு இந்து மதத்தில் 'கடவுளே அவதரிக்கிறார் என்று சொல்கிறார்களே! மக்களை உய்விக்க அவரே ஏன் அவதாரமெடுத்து வர வேண்டும்? அவரிடம் உள்ள எவ்வ ளவோ தெய்வ தூதர்களில் ஒருவரை அனுப்பியிருக்கக் கூடாதா?' என்ற ஐயம் ஏற்பட்டது. வழக்கம் போல பீர்பலிடம் வினவினார். பீர்பல் தமக்கு



அவதாரம் எதற்காக?

இதற்கு விடையளிக்கப் பத்து நாட்கள் அவகாசம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பௌர்ணமி தோறும் அரசரும், அமைச்சர்களும் ஆற்றில் படகிலேறி உல்லாசமாகச் செல்வது வழக்கம். அதே போல் அன்றும் எல்லோரும் படகில் செல்லத் தயாராக இருந் தார்கள். அக்பர் கூட வந்து விட்டார். ஆனால், பீர்பல் மட்டும் வரவில்லை. அக்பர் மெதுவாகப் பொறுமை யிழந்து கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் பீர்பல் அவசர அவ சரமாக ஓடி வந்தார். அவர் கையில் அக்பரின் இரண்டு வயதுப் பாலகன்.

''மன்னியுங்கள் அரசே! நான் கிளம் பும் போது இளவரசர் நானும் வரு வேன் என ஒரேயடியாகப் பிடிவாதம் பிடித்து அழுததால் அவரையும் இருந்து அழைத்து வரத் தாமதமாகி விட்டது'' என்றார் பீர்பல். படகுகள் ஒரு வழி யாகப் புறப்பட்டன.

பௌர்ணமி நிலவில் படகுகள் நடு ஆற்றில் சென்று கொண்டிருந்தன. திடீ ரென பீர்பல் ''ஐயோ, இளவரசர் நீரில் விழுந்து விட்டார், காப்பாற்றுங்கள்! காப்பாற்றுங்கள்!'' என அலறினார். அடுத்த கணம் அப் பெரிய படகின் முன்புறம் அமர்ந்திருந்த அக்பர் மின்ன லென நீரில் பாய்ந்தார்!

சில வினாடிகள் கழித்து இளவர சருடன் அக்பர் படகில் ஏறினார். அதற்குப் பிறகுதான் தெரிந்தது அவர் காப்பாற்றி எடுத்து வந்தது இள வரசரைப் போன்ற மெழுகு பொம்மை என்று! அக்பருக்குக் கோபம் வர வில்லை. பீர்பலைக் கேள்விக் குறி யுடன் நோக்கினார்.

''அரசே, இவ்வளவு ஏவலர்கள் தாங்கள் இடும் ஆணையை நிறை வேற்றத் தயாராகக் காத்திருக்கும் போது, நீங்கள் ஏன் நீரில் குதித்தீர் கள்?'' என்று கேட்டார் பீர்பல்.

''என் மகன் நீரில் மூழ்கி உயிருக்கு மன்றாடும் போது, மற்றவர்கள் உத விக்கு வரட்டும் என்று ஒரு தந்தையால் காத்திருக்க முடியுமா?'' என்று பட படப்பாகக் கேட்டார் அக்பர்.

''அரசே, தன் மக்களைக் காக்க ஆண்டவன் ஏன் தானே அவதரிக்கிறார் என்பது இப்பொழுது தங்களுக்கும் புரிந்திருக்கும். மாபெரும் சக்ரவர்த்தி யானவர், தனது மகனைக் காப்பாற்றத் தானே மூழ்கியது போல், சர்வ வல் லமை பெற்ற ஆண்டவன் தமது மக்களைக் காக்கத் தானே அவதார மாகி விடுகிறார்,'' என்றார் பீர்பல்.

- கே. எஸ். சரவணன்,
கம்புகாலப்பட்டி.



பேரனின் பில்!

ராமுவுக்கு ஏகப்பட்ட பசி. என்ன செய்வது என்று அவனுக்குப் புரியவில்லை. கையிலோ கொஞ்சமும் காசு இல்லை. காசு இருந்தாலாவது ஹோட்டலில் சென்று சாப்பிடலாம்.

ஏதும் புரியாமல் சாலையில் நடந்த சென்று கொண்டிருந்த போது ஒரு ஹோட்டலில் தொங்க விடப் பட்டிருந்த விளம்பர போர்டில் இருந்த வாசகங்கள் அவனை ஈர்த்தன. 'அந்த விளம்பர போர்டில் ''நீங்கள் இங்கு எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். அதற்கு உங்கள் பேரன் பணம் கட்டினால் போதும்'' என்று அந்தப் போர்டில் எழுதப்பட்டிருந் தது. இதைக் கண்டதும் ராமுவிற்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி!

ஹோட்டலில் தடபுடலாக நுழைந்து கடை முதலாளியிடம் விசாரித்தான். அந்த போர்டில் எழுதப் பட்டிருந்த வாசகங்கள் உண்மையான வைதான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான்.

வசதியான ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டான். சர்வர் வந்து பணிவாக, ''என்ன வேண்டும்?'' என்று கேட் டார்.

தனக்குப் பிடித்தமான அயிட்டங்களாகப் பார்த்துக் கொண்டு வரச் சொன்ன ராமு, தன் இஷ் டத்திற்கு ஒரு வெட்டு வெட்டினான்.

ராமு சாப்பிட்டு முடித்ததும் அவனிடம் ஒரு பில்லைக் கொண்டு வந்து நீட்டினார் சர்வர்!

ராமுவுக்கு வந்ததே கோபம்! ''பில் பணத்தை என் பேரன் கட்டினால் போதும் என்றுதானே விளம்பரம் செய்திருக்கிறீர்கள்! என்னிடம் பில்லுக்குப் பணம் கேட் கிறீர்களே..?'' என்று கேட்டான்.

''இது அநியாயமே இல்லே. நீங்க சாப்பிடதற்கான பில் அல்ல இது. அதை உங்க பேரன் கட்டுவான். இது உங்க தாத்தா சாப்பிடதற்கான பில்லுப்பா!'' என்றார் சர்வர்.

கூறியவர் : குஷ்வந்த் சிங்

ஆதாரம் : சண்டே மிட்டே

தந்தவர் : தா. ஷேக்உசேன், செஞ்சி - 2.



தங்கக் காசு வேண்டாம்!

மூன்று சகோதரர்களில் இளைய வன் ஐவான். எப்படியாவது இவர் களைப் பாழ்படுத்த வேண்டும் என்று ஒரு குட்டிச்சாத்தான் சபதம் பூண்டது. முதல் இரண்டு பேரையும் என்ன வெல்லாமோ பண்ணி வென்று விட் டது. கடைசித் தம்பி ஐவானை மயக்க அவன் ஊருக்கு வந்து சேர்ந்தது.

ஐவான் மற்றும் அவன் கூட இருந்தவர்கள் எல்லோரும் கடுமை யான உழைப்பாளிகள். போதும் என்ற மனம் படைத்தவர்கள். சண்டைக்குப் போகாதவர்கள். பகட்டுக்கு ஆசைப் படாதவர்கள். அதனால், இவர்களை வெல்வது குட்டிச் சாத்தானுக்குப் பெரிய சவாலாக இருந்தது. ஆனாலும் குட்டிச்சாத் தான் விடவில்லை. இவர் களை எப்படியாவது ஜயித்தே தீரு வது என்று கங்கணம் கட்டிக் கொண்டு யோசித் தது.

பை நிறையத் தங்கக்காசுகளை எடுத்துக் கொண்டு அயலூரான் போல வந்தது. ஐவானும் அவனது நண்பர் களும் வேலை செய்து கொண்டிருந்த இடத்தை அடைந்தது. நாற்சந்தியில்

ரஷ்யக் கதை — தமிழில்: தம்பி சீனிவாசன்

நின்று கொண்டு, ''என்ன இப்படிப் பன்றி போல உழல்கிறீர்களே! வசதியாக வாழ வேண்டாமா? நான் உங்களுக்குச் சும்மாவே கொடுக்கிறேன்,'' என்று கை நிறையத் தங்கக் காசுகளை எடுத்துக் காட்டியது அயலூரானாக இருந்த குட்டிச்சாத்தான்.

தங்கக்காசு என்பது அந்த ஊருக்குப் புதுசு. அவர்கள் அதைப் பார்த்ததே கிடையாது. அதற்கு அங்கே அவசியமும் இல்லை. எல்லாமே பண்டமாற்றுதான். உழைத்து, கூலியைப் பண்டங்களாகத்தான் பெற்று வந்தார்கள். அதனால், குட்டிச்சாத்தான் காட்டிய தங்கக் காசுகளை அவர்கள் வியப்போடு பார்த்தார்கள். அப்பொழுதும் கூட அந்தக் கபடமறியாத மக்கள் அவற்றை ஓர் விளையாட்டுப் பொருள் என்றே நினைத்தார்கள். அதனால் எல்லோரும் அவரவர் வீட்டிலிருந்து அரிசி, கோதுமை, பழம், மளிகை சாமான் என்று எடுத்து வந்து கொடுத்து ஆளுக்குக் கொஞ்சம் தங்கக் காசுகளைப் பெற்றுப் போனார்கள்.

'தங்கக்காசு ஆசை காட்டி இவர்களை எல்லாம் ஜயித்து விடலாம்' என்று நினைத்தது குட்டிச்சாத்தான்.

வாங்கிக் கொண்ட தங்கக்காசுகளை அவர்கள் தங்கள் வீட்டுப் பெண்களுக்குக் கொடுத்தார்கள். அவர்கள் அதைக் கட்டிக் கழுத்திலே போட்டுக் கொண்டார்கள். குழந்தைகளுக்கு விளையாடக் கொடுத்தார்கள். எல்லாருக்கும் ஒரே சந்தோஷம். அதற்கு மேல் அதற்கு எவ்விதப் பயனும் இல்லை என்றே நம்பினர் அந்த அப்பாவிகள்!

அயலூரான் அவர்களை அழைத்து, இன்னும் நிறையக் காசு தருவதாக அவர்களுக்கு ஆசை காட்டினான். பதிலுக்கு உணவுப் பண்டங்கள் கேட்டான். எல்லோரும் ''போதும், எங்களுக்கு இதற்கு மேல் தங்கக்காசு வேண்டாம்'' என்று மறுத்து விட்டார்கள்.

அயலூரானுக்கு ஒரே ஏமாற்றம். அது தவித்துப் போனது. இப்பொழுது அதன் வீட்டில் மணி அரிசி கூட இல்லை. சாப்பிட ஒன்றும் இல்லை. தங்கக்காசுக்கு ஆசைப்படாததால் ஊரிலே யாரும் தங்கள் பொருள்களைத் தங்கக்காசுக்கு விற்கத் தயாராக இல்லை.

ஒரு வீட்டிலே போய்ப் பணிவாக நின்று தங்கக் காசு கொடுத்து, சாப்பிட ரொட்டி வேண்டும் என்று கேட்டது அயலூரான்.

''எனக்குத் தங்கக்காசு வேண்டாம். அதை வைத்துக் கொண்டு என்ன செய்வது? என் வீட்டில் விளையாடக் குழந்தைகள் இல்லை. இருந்தாலும் சாப்பிட ரொட்டி வேண்டும் என்று கேட்டதால் வெறுங்கையோடு அனுப்ப விரும்பவில்லை. சற்றுப் பொறு. ரொட்டி தருகிறேன். ஆண்டவன் பெயரைச் சொல்லிக் கொண்டே பசியாற ரொட்டி சாப்பிடலாம்" என்றான் அந்த விவசாயி.


இதைக் கேட்டதும் அயலூரான் பயந்து போய் ஓடிவிட்டது. அதுவோ குட்டிச்சாத்தான். அதுவா ஆண்டவன் பெயரைச் சொல்லும்?

ஆண்டவன் என்ற பெயரை அந்த விவசாயி சொன்னதே அதற்குத் தன்னை யாரோ ஈட்டியால் குத்துவது போல இருந்தது.

மனித உருவில் இருந்த அதற்கு உண்ண உணவு கிடைக்கவில்லை. அதனிடம் தங்கக்காசு ஏராளமாக இருந்தது. என்ன பயன்? அந்த ஊரிலே யாரும் அதை மதிக்கவில்லை! சீண்டக் கூடவில்லை! ஆண்டவன் பெயரைச் சொல்லி ரொட்டியைச் சாப்பிட அது விரும்பவில்லை.

''என்ன அசட்டுத்தனம்? தங்கக்காசு இருந்தால் எல்லாம் கிடைக்குமே? எதை வேண்டுமானாலும் வாங்கலாமே. இதை வேண்டாம் என்கிறீர்களே?'' என்று பலரிடம் வாதாடிப் பார்த்தது.

''எங்களுக்கு எதற்குத் தங்கக்காசு? அதை வைத்துக் கொண்டு என்ன பண்ணுவது? எங்களுக்குத் தேவையான எல்லாம் இங்கே கிடைக்கிறது. எல்லாரும் உழைக்கிறோம். இந்த





ஊரில் வரி கூடக் கிடையாது'' என்று முகத்திலடித்தது போல் பதிலளித்தனர் ஊரார்.

குட்டிச்சாத்தான், பாவம் பசியோடு தூக்கமின்றி ஒரு நாளைக் கழித்தது.

ஊர்த் தலைவனான ஐவான் காதுக்கு அயலூரான் ஒருவன் பட்டினி கிடக்கும் செய்தி எட்டியது. ''பாவம், நம்ம ஊருக்கு வந்துள்ள யாரும் பசியோடு இருக்கக் கூடாது. முறை வைத்துத் தினம் ஒருவர் வீட்டிலே அயலூரான் சாப்பாடு வைத்துக் கொள்ளட்டும்'' என்று உத்தரவிட்டான் ஐவான்.

சில நாட்டின் ஆயின. அயலூரான் ஐவான் வீட்டிலே சாப்பிடும் முறை வந்தது. ஐவான் வீட்டில் ஒரு வழக்கம். ஐவானின் சகோதரி, பார்த்துப் பார்த்துத்தான் ஆட்களைச் சாப்பிட அனுப்புவாள். சோம்பேறிகளுக்குச் சோறு இல்லை. உழைத்தால்தான் உணவு, என்ற கொள்கை உடையவள் அவள். அதனால் சாப்பிட வருவோரின் உள்ளங் கையைப் பிடித்துப் பார்த்துத்தான் உள்ளே அனுப்புவாள் அவள்.

அயலூரான் வந்தான். சகோதரி அவன் கையைப் பிடித்துப் பார்த்தாள். வழவழவென்று மெத்து மெத்தென்று இருந்தது அதன் உள்ளங்கை. விரல் நுனியில் நகக் கண்களில் கூட துளி அழுக்கு இல்லை. ''போ போ! நீ உடல் வணங்காத சொகுசுக்காரன். உழைக்காத உனக்குச் சோறு போடுவதே பாவம்!'' என்று அவள் அயலூரானை வெளியே இழுத்துத் தள்ளி விட்டாள்.

ஐவானின் மனைவி ஓடி வந்தாள். ''ஐயா, தவறாக நினைக்காதீர்கள். என் நாத்தனாருக்கு உழைப்பாளிகளின் கைகளே பிடிக்கும். அதனால், நீங்கள் முதலில் சாப்பிட முடியாது. காத்திருங்கள். எல்லோரும் சாப்பிட்ட பின் மிச்சம் இருக்கும். அதைத் தருகிறேன்'' என்றாள் அன்போடு.

அயலூரானுக்கு அவமானமாகப் போய் விட்டது. ஊரிலேயே முக்கியமான வீட்டிலேயே அவனுக்கு அவமானம்.

''கடைந்தெடுத்த முட்டாள்கள். உழைத்தால்தான் உணவாமே! இது என்ன அதிசய வழக்கம். கையால் வேலை செய்தால்தான் உயர்வு, அப்போதுதான் சாப்பாடு என்பது எப்படிப்பட்ட முட்டாள்தனம்! கையால் மட்டும்தானா தொழில் செய்ய முடியும்? அதைவிடப் பெரிய செயலையெல்லாம் தலையாலும் செய்யலாமே! சொல்லப் போனால் தலையைக் கொண்டு வேலை செய்வது, மண்டை வெடித்துவிடும் அளவுக்கு இன்னும் கடினமானது. ஆனால், அதிக இலாபம் தருவது?'' என்று அதட்டலாகப் பேசியது அயலூரான்.

''அப்படியா? நாங்கள் எதைக் கண்டிருக்கிறோம்? முட்டாள்கள் நாங்கள். எங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றான் அசட்டு ஐவான்.

சற்றுப் பொறுத்து, ''ஆமாம். மண்டையே வெடித்துவிடும் அளவுக்குத் தலையால் செய்யும் வேலை கடினம் என்றால், தலையால் எதற்கு வேலை செய்ய வேண்டும்? எல்லாரையும் போல் சாதாரணமாகக் கைகளாலேயே செய்தால் போதுமே'' என்றான் ஐவான் அப்பாவித்தனமாக.

அயலூரான் தலையில் அடித்துக் கொண்டான்.

''ஐயோ, ஐயோ! இப்படி வடி கட்டின முட்டாள்களாக இருக்கிறீர்களே. உங்களைப் பார்த்தால் எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. இத்தனை நாள் தலையாலே வேலை செய்து, அதன் சுகத்தை அனுபவித்த பிறகு இப்போது திடீரென்று எப்படி என்னால் கைகளால் வேலை செய்ய முடியும்? தலையைக் கொண்டு எப்படி வேலை செய்வது என்பதை உங்களுக்கெல்லாம் விளக்குகிறேன். எல்லோரும் வாருங்கள்'' என்றது அயலூரான்.

ஐவான் ஊராரை எல்லாம் கூட்டினான். ''இந்த அயலூரான் நமக்குப் புதிதாக ஒன்று கற்றுத் தரப் போகிறார். கைகளால் உழைத்து வேலை செய்வதை விட, தலையால் செய்வது எளிதானது. அதிக இலாபம் தருவது என்பதை எல்லோரும் தெரிந்து கொள்ளுங்கள்,'' என்றான்.



ஒரு நாள் எல்லோரும் ஒன்று கூடினர். பார்ப்பதற்கு வசதியாக, மைய விளக்குக் கம்பம் ஒன்றின் உச்சிக்கு அயலூரானை ஏற்றி விட்டார்கள். மைய விளக்குக் கம்பம் என்பது மிக உயரமான கம்பத்தின் மீது அமைக்கப்பட்ட மிகப் பெரிய விளக்கு அமைந்த கம்பம். அதன் படிக்கட்டுகளில் ஏறி மேலே நின்று அயலூரான் பேசத் தொடங்கியது. கையால் வேலை செய்வது கடினம் என்றும் மூளை வேலையே எளிது; அதிகப் பலன் தர வல்லது என்றும் பேசியது. கீழே கூடியிருந்த மக்கள் அதன் நீண்ட பேச்சைக் கேட்பதில் ஆர்வம் காட்டவில்லை. அவர்கள்தான் உழைப்பாளிகளாயிற்றே! அவர்கள் பொறுமை எல்லை கடந்தது. ''சும்மா பேசாதே! தலையால் வேலை செய்யத் தொடங்கு! அதைப் பார்த்துவிட்டுப் போகிறோம். எங்களுக்கு வேலை கிடக்கிறது'' என்று கத்தினர்.

ஐயோ பாவம். குட்டிச்சாத்தான் அசந்து போனது. ஏண்டாப்பா இங்கு வந்து சிக்கிக் கொண்டோம் என்று வருந்தியது. மக்கள் அதைப் போக விடவில்லை. ''தலையால் வேலை செய்து காட்டு சீக்கிரம்'' என்று கத்தினர். சரியான சாப்பாடு இல்லாத காரணத்தாலும், ஏமாற்றத்தாலும் அது சோர்ந்து போனது. கண்கள் இருண்டன. அப்படியே மயங்கிக் கீழே சாய்ந்தது. படிகளில் தலை பட்டது.

''அயலூரான் தலையால் வேலை செய்ய ஆரம்பித்து விட்டான்!'' என்று கீழே இருந்த கூட்டம் கூவியது. எல்லோரும் பரபரப்போடு பார்த்தார்கள். ஐவானும் பார்த்தான்.

ஒவ்வொரு படிக்கட்டிலும் தலை மோதி மோதி நினைவிழந்த நிலையில் குட்டிச்சாத்தான் கீழே வந்து விழுந்தது.

''தலையால் வேலை செய்வது எவ்வளவு சிரமம்! எவ்வளவு ஆபத்து! இதைப் போய் எளிது, இலாபமானது என்று இந்த மடையன் சொன்னானே! நமக்கு இது வேண்டவே வேண்டாம். நாம் கைகளாலேயே உழைப்போம்'' என்றான் ஐவான். மக்கள் ஆமோதித்தனர். நேரத்தை வீணாக்க விரும்பாத மக்கள், உழைக்கப் பிரிந்து போனார்கள். ஐவானும் போனான்.

சிறிது நேரமானதும் கண் விழித்துப் பார்த்த குட்டிச்சாத்தான், 'இவர்கள் அடிமுட்டாள்கள். தங்கள் கைகளையும் உழைப்பையுமே நம்புகிறவர்கள். நம்மால் இவர்களைத் திருத்த முடியாது. இவர்களை வெல்லவும் முடியாது' என்ற முடிவுக்கு வந்தது. தரையைப் பிளந்து கொண்டு பாதாளத்துக்குப் போய் விட்டது!

சிறிது நேரம் பொறுத்து அங்கு வந்து பார்த்த ஐவான், 'அது குட்டிச்சாத்தான் வேலை' என்பதைப் புரிந்து கொண்டான். ''இதற்கு முன்பு வந்த குட்டிச்சாத்தான்களை விடப் பெரிய சாத்தான் இது!'' என்று கூறிக் கொண்டான். உழைப்பை மறந்து அந்தக் குட்டிச்சாத்தான்களின் வலையில் சிக்கிக் கொண்ட தன் இரண்டு அண்ணன்மார்களையும் அழைத்து வந்து தன்னுடன் வைத்துக் கொண்டான்.

அந்த ஊரில் எல்லோருக்கும் உணவு கிடைத்தது.

எல்லோரும் உழைத்தே உண்டனர். சோம்பேறிகளுக்கு மட்டும் சோறு கிடைக்கவில்லை.

குட்டிச்சாத்தான் கொடுத்திருந்த தங்கக்காசுகள் சீண்டுவார் இன்றிக் கிடந்தன! குழந்தைகள் அவற்றை வீசி எறிந்து விளையாடினர்.

மலேரியா வந்த விதம்



★ மலேரியா என்ற பெயர் இத்தாலியச் சொல்லிலிருந்து பிறந்தது. மலா என்றால் சதுப்பு நிலம் என்றும், ஏரியா என்றால் கெட்ட காற்று என்றும் பொருள். இந்தக் காற்றினால்தான் மலேரியா காய்ச்சல் வருவதாக இத்தாலியர்கள் நம்பியதால் மலேரியா என்றே அக் காய்ச்சலுக்குப் பெயர் நிலைத்தது.

- சிவரஞ்சன், ஆற்காடு.

விமலி தோற்க வேண்டும்!



டாக்டர் லட்சுமி ராஜரத்னம்

விமலியைப் பார்க்கப் பார்க்க ஜெய்யூவிற்குப் பற்றிக் கொண்டு வந்தது. வயிற்றெரிச்சல் தாங்காமல் தண்ணீர் பாட்டிலில் உள்ள தண் ணீரைக் குடித்தாள். எல்லாவற்றிலும் முதலாக இப்படி வசதியற்ற வீட்டுப் பெண் வருவதென்றால்? ஜெய்யூ வைப் பொறுத்த வரையில் அது அநியாயம் அல்லவா.

படிப்பில் முதல் ராங்க், பாட்டில் முதல் ராங்க். கவிதை வேறு எழுதித் தொலைக்கிறாள்! ஓவியம் வரைதல்னு ரெண்டு கோட்டை இழுத்து அதில் வேறு தனிப் பரிசு! டான்ஸ் கத்துக்க வசதி இல்லேன்னு வருத்தம் வேறு.

''விமலி வரைஞ்ச ஓவியத்தைப் பாருங்க. ஒரு பெரிய மான் தன் குட்டிக்கு உணவை எப்படித் திங்கற துன்னு பழக்குகிறது. ரொம்பத் தத்துரூபமா இருக்கு. மிருகங்கள் கூடத் தங்கள் குட்டிகளிடம் தாயன் பைக் காட்டுகிறது என்பதை விமலியின் படம் விளக்குகிறது. இதுதான் முதல் பரிசு பெறத் தக்கதுன்னு நடுவர்கள் தேர்ந்தெடுத் திருக்கிறார்கள். பிராணிகள் சரணால யத்திலிருந்தும் விமலிக்குத் தனியாகச் சிறப்புப் பரிசு கிடைக்கும்.'' என்று தலைமையாசிரியை கூறியது முதல் ஜெய்யூவிற்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

கையில் உள்ள பேப்பரைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து எறிந்தாள். அப்படி யும் ஆத்திரம் தணியவில்லை!

ஃபைனல் ஸ்போர்ட்ஸ் செலக் ஷனுக்கு என்று ஒரு நாளைக் குறித் திருந்தார்கள். ஏகப்பட்ட கேம்ஸ். ஓட்டப் பந்தயத்திற்கு விமலியும் பேர் கொடுத்தது ஜெய்யூவிற்கு ஆத்திரத்தை மூட்டியது.

''எங்கே போனாலும் இந்தச் சனியனும் வந்து தொலைக்குதே!'' என்று முணு முணுத்தாள் ஜெய்யூ...

மாலை வீட்டிற்கு வந்த ஜெய்யூ வின் அண்ணா வைத்தி தன் தங்கை யின் முகவாட்டத்தைக் கவனித்தான்.

''என்ன ஜெய்! டிபன் கூடச் சாப்பிடல்லே. முகம் கழுவல்லே. ஹோம் ஒர்க் அதிகமா?'' என்று விசா ரித்தான்.

''ஒண்ணுமில்லேண்ணா, இந்த விமலிச் சனியன் எதுல பார்த்தாலும் வந்து மூக்கை நுழைச்சுக்கறா! எல் லாத்திலேயும் ஃபர்ஸ்ட்டா வேற வந்துடறாள்!'' என்றாள் வேதனை யுடன் ஜெய்.

தங்கையின் பொல்லாத் தனத்திற்குச் சிறிதும் குறைந்தவன் இல்லை அண்ணன் வைத்தி. ''இப்ப என்ன செய்யணும்? விஷயத்தைச் சொல்லு. நான் பார்த்துக்கறேன்''

என்றான்.

''இன்னும் ரெண்டு நாள்ல ரன்னிங் ரேஸுக்கு ஃபைனல் செலக்ஷன் பண்ணப் போறாங்க. பல பள்ளிகள் கலந்துக்கற பெரிய ஸ்போர்ட்ஸ். இ து ல விமலி செலக்ஷன் ஆயிட்டா ஸ்பெஷல் பிராக்டிஸ் எல்லாம் தருவாங்களாம்... பி.டி உஷா ஓடறாங்களே... அது மாதிரி ஸ்போர்ட்ஸ் அயிட்டங்களில் எல்லாம் கலந்துக்க.. வைப்பாங்களாம் விமலியை எப்படியும் தடுத்துடணும்.''

''அந்த அளவுக்கு நல்லா ஓடுவாளா?''

''பிரமாதமா, ஓ டு வ ா ண் ணா பழைய சோத்துக்கு நல்ல பலம்.''

பெரிய மனிதனைப் போல சிந்தனையில் ஆழ்ந்தான் அவன். ''கவலைப் படாதே ஜெய். நான் கவனிச்சுக்கறேன்.''

''எப்படிண்ணா?''

''இங்கே தான் வைத்தியோட சாமர்த்தியமே இருக்கு.''

''அண்ணா... அண்ணா... சொல்லண்ணா... ப்ளீஸ்.''

தங்கையைக் கெஞ்ச வைத்த பிறகு வைத்தி தன் திட்டத்தை விவரித்தான்.

''உண்டு வில் அடிக்கற ரப்பர்ல சின்னக் கல்லுக்கு பதிலா இரும்பு குண்டு ரெண்டு வச்சு இழுத்து விட்டாப் போதும். அவ கால்ல போய் டொய்.... டொய்... அவ்வளவுதான்.... ஓ ட் ட மா வ து பந்தயமாவது'' என்று வில்லன் சிரிப்புச் சிரித்தான் வைத்தி.

''அண்ணா'' பயந்து கூவினாள் ஜெய்யூ.

''பயப்படாதே. மறைவா நின்னு ரெண்டு இழுப்பு இழுத்துட்டு ஓடிடறேன். ஓட்டப் பந்தயத்துல நீ முதல்ல வரணும்னா வேற வழி ஒண்ணும் கிடையாது.''

கடைசியில் ஜெய்யூ சம்மதித்தாள்.

அன்று ஃபைனல் செலக்ஷன் தினம். இது முடிந்தால் ஸ்போர்ட்ஸ் டேதான். காலை எட்டு மணிக்கே மாணவிகள் வண்ணப் பூஞ்சிட்டுகளாக மைதானத்தில் கூடி விட்டனர். விமலி கலகலவென்று பேசி சிரித்துக் கொண்டு மைதானத்தைச் சுற்றி வந்தாள். பி.டி ஆசிரியை ''விமலி சும்மா சுத்தாதே. கால் ஓஞ்சு போகும். அப்புறம் ஓட முடியாது. நிழல்ல போய் உட்கார்'' என்று எச்சரித்தாள்.

இது வேறு ஜெய்யுவிற்கு எரிச்சலைக் கொடுத்தது. அண்ணா சரியாக அடிப்பானா? விமலி ஓட முடியாமல் காலில் அடிபட்டுக் கொள்வாளா? அடிக்கொரு தடவை வைத்தி மறைந்து நின்ற மரத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

வைத்தியும் 'நான் இருக்கிறேன். கவலைப் படாதே' என்பது போல் சைகை காட்டினான். அது ஜெய்யுவிற்குத் தைரியத்தை அளித்தது.

மைதானத்தை வெள்ளை மாவினால் மாணவியர்கள் நிற்க வேண்டிய இடத்தையும், அடைய வேண்டிய இடத்தையும் கோடு இட்டு அடையாளம் காட்டினார்கள். கலந்து கொள்ளாத மாணவிகள் வேலி போட்டது போல் அடர்ந்து நின்றனர். மரத்தின் கிளையில் ம றை ந் து



கொண்டான். ஜெய்யூ விமலியை அடையாளம் காட்டி இருக்கத்தினால் அவன் பார்வை விமலியின் பக்க மாகவே இருந்தது.

மாணவிகள் வரிசையாக நின்றனர். விசில் கொடுத்ததும் சிட்டுக் குருவிக ளாகப் பறந்து ஓடினார்கள். விமலி முன்னால் ஓட, ஜெய்யூ பதட்டத்தில் மூன்றாவதாக ஓடினாள். இருவருக் கும் இடையில் பிரபா என்ற மாணவி ஓடினாள்.

சர்.....ர்....

வைத்தி எய்த கனமான சின்ன இரும்பு குண்டு 'டொய்'யென்று காலில் வந்து அடிக்க....

''ஐயோ அம்மா.''

காலைப் பிடித்தபடி உட்கார்ந்து விட்டாள் பிரபா. வைத்தியின் குறி தவறி பிரபாவின் காலில் வந்து அடித்துவிட்டது. 'ஐயோ' என்ற ஓலம் கேட்டதும் விமலி நின்று திரும்பிப் பார்த்தாள். க த் தி ய வ ள் பிரபா என்றறிந்ததும் பந்தயத்தை மறந்து திரும்பி வந்து பிரபாவைத் தழுவிக் கொண்டாள்.

மூன்றாவதாக ஓடி வந்த ஜெய் மூச்சிறைக்க இதுதான் சாக்கு என்று ஓடி வந்தாள். தான்தான் முதல் என்று கோட்டை அடைந்து, ஃபைனலில் தன்னைத் தான் தேர்ந்தெடுப்பார்கள் என்று மனக் கோட்டை கட்டினாள்.



ஆசிரியர்கள் பிரபாவுக்கு முதல் உதவி செய்து வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆட்டம் நடுவில் தடைப்பட்டது என்று காரணம் கூறி மீண்டும் ஓட வைத்தார்கள். இதில் விமலிதான் முதலில் வந்து தேர்ந் தெடுக்கப்பட்டாள்.

இரண்டு தினங்கள் கழித்து ஸ்போர்ட்ஸ் டே. விமலி தோற்க வேண்டும் என்று ஜெய்யூ வினாயகப் பெருமானை வேண்டிக் கொண்டாள். தவறாக வேண்டிக் கொள்பவர்களைக் காப்பாற்றினால் கடவுளின் பெருமை நிலைத்து நிற்குமா? ஓட்டப் பந்தயத்தில் விமலிதான் முதலாவதாக வந்தாள்.

மாலையில் பரிசளிப்பு நடை பெற்றது. பல பரிசுகளை விமலி பெற்றாள். ஓட்டப் பந்தயத்திற்கான பெரிய கோப்பையை அளிக்கும் பொழுது ஆசிரியை மைக்கில் கூறி னார்.


''விமலி நிறையப் பரிசுகள் வாங்கினாலும் தனியான சிறப்புப் பரிசு ஒன்றை இப்பொழுது அவளுக்குத் தரப் போகிறோம். இரண்டு தினங்களுக்கு முன்பு நடந்த ஸ்போர்ட்ஸ் டேயில் யாரோ எறிந்த இரும்பு குண்டு இரண்டாவதாக ஓடி வந்த பிரபாவின் காலில் பட்டது. பிரபாவின் கத்தல் சப்தம் கேட்டதும் போட்டி என்பதைக் கூட மறந்து பிரபாவைத் தாங்கிக் கொண்டாள் விமலி. ஆனால் ஜெய்யூ தனக்கு முன்னால் ஓடிய பிரபா அடி பட்டது தெரிந்தும் ஓடிப் போய் முதல் இடம் பெறத் துடித்து நின்றாள். மனித நேயம், சகோதர உணர்வு இரண்டும் இல்லாவிட்டால் உலகமே இருண்டு விடும். திறமைகளுக்கு அடுத்த இடம்தான். இப்படிப்பட்ட மனித நேய உணர்வு கொண்ட விமலிக்கு சிறப்புப் பரிசை அளிக்கப் போகி றோம். பி.டி. உஷாவைப் போல் பெருமை தரும் அளவுக்குத் திறமை உள்ளவள் விமலி. அன்னை தெரஸா வைப் போல் கனிவான இதயமும் தனக்கு இருப்பதை இப்பொழுது காட்டி விட்டாள். இந்த அளவுக்கு உயர்ந்த உள்ளம் கொண்ட விமலி யைப் பாராட்டா விட்டால் நாம் குற்றவாளிகளாவோம். என்று தலை மையாசிரியர் உரையை முடிக்க, விமலி சிறப்புப் பரிசையும் பெற்றுக் கொண்டாள்.

ஜெய்யூவும் தன் தவறுகளை உணர்ந்து திருந்தியவளாக கூட்டத்தை விலக்கிக் கொண்டு விமலியை பாராட்ட ஓடினாள்.

''எதுக்குஉன் பெரியபையன் கோபமா இருக்கான்!''

''ரேடியா வாட்ச் வேணுமாம். விடியற் காலைல 'டைம்' பார்த்துட்டு கூவப் போறானாம்.''

— ''நந்தி''






''யாரோ மூனு பசங்க ப்ரேயர்ல என்னை கிள்ளிட்டாங்கன்னு சொல் றேன்! நீ பாட்டுக்கு யோசிக் கிறியே...?''

''யார் அந்த இரண்டு பேருன்னுதான்!''

- மொரப்பூர். அ. நவ்சாத்.


வண்ணந் தீட்டுங்கள்!



பட்டபாடு

காட்சி - 1

(கடைவீதி! முனியாண்டி மீன் கூடையுடன் அமர்ந்திருக்கிறான். அவனுக்குப் பழக்கமான பெரியவர் கேசவன் வருகிறார்.)

கேசவன் : என்ன தம்பி, முனியாண்டி, மீன் கூடையை வைச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கே? விலைக்கா?

முனியாண்டி : ஆமாங்க.

கேசவன் : பின்னே, இங்கே ஒரு போர்டு எழுதி வைக்கக் கூடாதா?

முனியாண்டி : போர்டா? வைச்சாப் போகுது. என்னன்னு எழுதி வைக்க? சொல்லுங்க.

கேசவன் : ''இங்கே நல்ல மீன்கள் விற்கப்படும்'' - அப்படின்னு ஒரு போர்டு எழுதி வை.

முனியாண்டி : சரி, நாளைக்கே எழுதி வைச்சிடுதேங்க.

(கேசவன் செல்கிறார்.)

காட்சி - 2

(மறுநாள்! அதே கடைவீதி! மீன் கூடையுடன் உட்கார்ந்திருக்கும் முனியாண்டிக்குப் பக்கத்தில் இரண்டு சிறிய கம்புகளுக்கு நடுவே சிறிய போர்டு தொங்குகிறது. சாக்பீஸால் ''இங்கே நல்ல மீன்கள் விற்கப்படும்'' - என்று எழுதப்பட்டிருக்கிறது. முத்தையா வருகிறார்.)

முனியாண்டி : வாங்க முத்தையா அண்ணே, வாங்க. நல்ல மீனு இருக்குங்க. வாளை, வரால், விலாங்கு, கெண்டை எல்லாம் இருக்கு.. வாங்கிட்டுப் போங்க.

முத்தையா : அது சரி, முனியாண்டி. இதென்ன புதுசா போர்டு எல்லாம் அமர்க்களப்படுது? (போர்டைப் படிக்கிறார்.) ''இங்கே நல்ல மீன்கள் விற்கப் படும்.'' (சிரிக்கிறார்.)

முனியாண்டி : ஏங்க, சிரிக்கறீங்க?

முத்தையா : இல்லே, தெரியாமத் தான் கேக்கறேன். மீனு வாங்க வர்றவங்க மீனு நல்லா இருந்தாத் தானே வாங்குவாங்க? கெட்டுப் போன மீனை எவனாவது வாங்குவானா? இது எதுக்கு 'நல்ல' மீன்கள்னு எழுதி வைக்கணும். 'நல்ல'ங்கிற வார்த்தையை அழிச்சுப் போடு.

முனியாண்டி : சரிதாங்க. அழிச்சிட்டாப் போவுது. (எழுந்து துணியில் 'நல்ல' என்ற வார்த்தையை அழிக்கிறான் இப்போ சரிதானே?

முத்தையா : ஆங்க... ''இங்கே மீன்கள் விற்கப்படும்'' - இவ்வளவு போதும். சரி, வழக்கம் போல மீனை நிறுத்துப் போடு.

(மீனை வாங்கிக் கொண்டு காசைக்



போதும்!...

கொடுத்து விட்டு நகர்கிறார்.)

காட்சி - 3

(காத்தாயி, மூக்கைப் பிடித்துக் கொண்டு முனகியவாறு வருகிறாள்.)

காத்தாயி : சே... சே என்ன இளவு மீன் நாத்தம் குடலைப் புரட்டுது... (முனியாண்டியைப் பார்த்து விட்டு) அட, நம்ம முனியாண்டி! என்ன, மீன் வியாபாரமா? எவ்வளவு நாளா? அட, இதென்ன போர்டு?

முனியாண்டி : (சற்று எரிச்சலுடன்) ஆமாம், போர்டுதான். பார்த்தாத் தெரியல்லையா?

காத்தாயி : தெரியுது... தெரியுது... என்னமோ எளுதி வைச்சிருக்கியே...?

முனியாண்டி : "இ ங் கே... மீன்கள்... விற்கப்படும்..." கண்ணு தெரியல்லியா?

காத்தாயி : அட, நீ ஒரு விவரங் கெட்ட ஆளு. உன் மீனு வீசுற நாத்தம்தான் எட்டுக் கல்லுக்கு அப்பாலே அடிக்குதே! இந்த நாத்தமே எல்லாரையும் இந்த இடத்துக்குத் தானா இளுத்துக்கிட்டு வந்திடுமே, இதுலே என்னாத்துக்கு ஐயா, "இங்கே"ன்னு ஒரு வார்த்தை எளுதி வைச்சிருக்கே?

முனியாண்டி : (யோசிக்கிறான்.) உம்.... ஏன் காத்தாயி, 'இங்கே'-ங்கற வார்த்தை வேண்டாங்கிறியா? அதை அழிச்சுப் போடவா?

காத்தாயி : ஆமாம்... ஆமாம்... அது என்னாத்துக்கு அநாவசியமா? "மீன்கள் விற்கப்படும்"ன்னு இருந்தாப் போதுமே!

முனியாண்டி : சரிம்மா! (எழுந்து 'இங்கே' என்ற வார்த்தையை அழித்துக் கொண்டே) இந்தா, நீ சொன்ன மாதிரி அழிச்சாச்சு. சரி.. மீன் வாங்கலையா?

காத்தாயி : இப்போ சில்லறை இல்லே, நாளைக்கு வாரேன்.

(செல்கிறாள்)

முனியாண்டி : (முனகல்) காலங் கார்த்தாலே வந்த கிராக்கியைப் பாரேன்.

காட்சி - 4

(அதே கடைவீதி! முனியாண்டி மீன் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறான். ஊர்ப் பெரிய மனிதர் பரமசிவம் வருகிறார். முனியாண்டி எழுந்து வணங்குகிறான்.)

பரமசிவம் : அ ட டே ட, முனியாண்டியா...? சௌக்கியமா அப்பா?

முனியாண்டி : ஏதோ உங்க புண்ணி

தி.ப.சிராஜன்



''ஒரு நாளைக்கு 24 மணி நேரம்னா, இரண்டு நாளைக்கு எத்தனை மணி?''

''இரண்டு 24 மணிசார்!''

- சீர்காழி. வி. ரேவதி.

யத்திலே நல்லா இருக்கேங்க...

பரமசிவம் : (போர்டைக் கவனித்தவராய்) இது என்னய்யா போர்டு..? ''மீன்கள் விற்கப்படும்...''

முனியாண்டி : ஒரு போர்டு வைடான்னு ஏதோ நாலு பேரு சொன்னாங்க. அதுதான்... (இழுக்கிறான்)

பரமசிவம் : அது சரி... ''விற்கப்படும்''னு எழுதி வைச்சிருக்கியே,. அது எதுக்குன்னு புரியல்லை?

முனியாண்டி : ஏங்க தப்பா?

பரமசிவம் : ஏம்ப்பா, கடை வீதியிலே மீன் கூடையை வைச்சுக்கிட்டு உட்கார்ந்தா மீனெல்லாம் விக்கிறதுக்குத்தானே? ஓசிக்குக் கொடுக்கவா இங்கே வைச்சிருப்பாங்க? இல்லே, நீ சும்மாவா கொடுக்கறே? காசு வாங்கிட்டு விக்கத்தானே செய்யறே?

முனியாண்டி : (ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு) உண்மைதாங்க... நீங்க சொல்லுறதிலேயும் அர்த்தம் இருக்குதுங்க... (எழுந்து போர்டில் உள்ள 'விற்கப்படும்' என்ற வார்த்தையை அழித்துவிட்டு) 'விற்கப்படும்'ங்கற வார்த்தை அநாவசியந் தாங்க.

பரமசிவம் : அதான் சொன்னேன். வரட்டுமா, முனியாண்டி.

(செல்கிறார்.)

(தொடர் காட்சி. முனியாண்டியின் தெருவில் வசிக்கும் மீனாட்சி வருகிறாள்.)

மீனாட்சி : (முனியாண்டிக்குப் பக்கத்தில் தொங்கும் போர்டில் 'மீன்கள்' என்று இருப்பதைப் பார்த்து விட்டு விழுந்து விழுந்து சிரிக்கிறாள்.) ஏ, முனியாண்டி ஏன் இப்படி எழுதி வைச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கே?

முனியாண்டி : ''இங்கே நல்ல மீன்கள் விற்கப்படும்''னுதான் முதல்ல எழுதி வைச்சிருந்தேன். ஒவ்வொருத்தனா வந்து என்னவோ சொல்லி ஒவ்வொரு வார்த்தையா அழிக்க வைச்சிட்டானுவ. .... இப்போ இந்த வார்த்தை ஒண்ணுதான் மிச்சம்.... அதுக்கும் நீ வந்திருக்கே.

மீனாட்சி : கோவிச்சுக்காதே அண்ணே, இந்த வார்த்தையும் எதுக்குன்னேன்? இந்தக் கூடை.... இதுக்குள்ளே விரைச்சுக்கிடக்குற மீனுங்க..... இங்கே அடிக்கற நாத்தம்.... இவ்வளவையும் பார்த்தா இங்கே மீன்தான் விக்குதுன்னு எட்டூருக்குத் தெரியுமே! அதுக்கு மேலே 'மீன்கள்'னு ஒத்தை வார்த்தையை எழுதி வைச்சா யாரும் சிரிக்காமல் என்ன செய்வாங்க? நீயே சொல்லு, அண்ணே?

முனியாண்டி : மீனாட்சி, நீ சொல்லுறதிலேயும் அர்த்தம் இருக்கு. தானாத் தெரியாத விசயத்துக்குப் போர்டு எதுக்கு? இந்தப் போர்டே வேண்டாம்.

(போர்டைக் கழற்றி எறிகிறான். கூடையை எடுத்துக் கொண்டு மீனாட்சியுடன் செல்கிறான்.)

காட்சி - 5

(மறுநாள் காலை! முனியாண்டி வழக்கம் போல் மீன் கூடையுடன் இருக்கிறான். முதல் காட்சியில் கண்ட கேசவன் வருகிறார்.)

கேசவன் : என்னப்பா, முனியாண்டி? இங்கனே ஒரு போர்டு எழுதி வைன்னு சொன்னேனே.... ''இங்கே நல்ல மீன்கள் விற்கப்படும்'' எழுதி வைச்சாத்தானே சனங்க வருவாங்க...? விளம்பரம் இல்லாட்டா வியாபாரம் ஆகுமா?

முனியாண்டி : (ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு) ஐயா, ஆளை விடுங்க... போர்டாவது.... நீங்க போயிட்டு வாங்க....

கேசவன் : ஏன், முனியாண்டி இவ்வளவு சடைவு.....?

முனியாண்டி : ஐயா, போர்டு எழுதி வைச்சிட்டுப் பட்டபாடு போதுமுங்க.... நீங்க போயிட்டு வாங்க... நான் வியாபாரத்தைக் கவனிக்கணும்.

(கேசவன் எதுவும் புரியாமல் குழப்பத்துடன் செல்கிறார். முனியாண்டி மீன் வாங்க வந்தவர்க்கு நிறுத்துக் கொடுக்கிறான்.)

பிள்ளையாரே கை கொடு!

"அம்மா! இன்று காலையில் மட்டும்தான் தேர்வு. ஒரு மணிக்கு முடிந்து விடும்,'' என்றான் சுந்தரம்.

''அப்போ, முருகன் வண்டியுடன் அங்கேயே தங்கி உன்னை அழைத்து வந்து விடட்டும்,'' என்றாள் அம்மா.

வாயிலில் வில் வண்டி வந்து தயாராக நின்றது. சுந்தரம் கூடத்தி லிருந்த சுவாமி படங்களை வணங்கி னான். பின்னர் தாயாரையும் வணங்கி விட்டு, ''வருகிறேன், அம்மா!'' என் றான்.


''தேர்வில் கேள்விகளைக் கவ னித்து, நன்றாக விடையெழுது,'' என்று கூறி விடைகொடுத்தாள் அம்மா.

சுந்தரம் வாயிற்புறம் வந்து வண்டியில் ஏறிக் கொண்டான். ''ஜல், ஜல்'' சலங்கையொலியுடன் மயிலைக் காளை வேகமாகப் புறப்பட்டது.

சுந்தரம் மாஞ்சோலைக் கிராமத்தி லேயே அதிகப் பணக்காரரான கந்தசாமி உடையாரின் ஒரே மகன். பத்து கிலோ மீட்டர் தூரத்திலிருந்த கும்பகோணத்



கமலா நாகராஜன்



இனி யாரையும் டா, டி போட்டு
கூப்பிடாதே! என்ன?
சரி டாடி!

- எம். ஐ. ரைஸ்.

தில் பத்தாம் வகுப்பில் படித்து வந்தான். தினமும் காலையில் வில் வண்டியில் பள்ளிக்குச் செல்வான். மாலையில் வில் வண்டி மீண்டும் சென்று அவனை அழைத்து வரும்.

அன்று பள்ளியிறுதித் தேர்வின் முதல் நாள். சுந்தரம் தமிழ் முதல் தாள் தேர்விற்கு நன்றாகப் படித்திருந்தான்.

வில் வண்டி ஓடிக் கொண்டிருந்தது. சுந்தரத்தின் நினைவில் படித்த பாடங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

''சுந்தரம்! சுந்தரம்!'' என்று வண்டியின் பின்னாலிருந்து கூப்பிடும் குரலைக் கேட்டுச் சிந்தனை கலைந்து திரும்பிப் பார்த்தான் சுந்தரம். அவனுடன் உள்ளூர்ப் பள்ளியில் முன்பு படித்த கணேசன் ஓடி வந்து கொண்டிருந்தான்.

''வண்டியை நிறுத்து முருகா!'' என்றான் சுந்தரம். வண்டி நின்றது. மூச்சிரைக்க ஓடி வந்த கணேசனிடம் ''என்ன, கணேசா? எதற்கு இப்படி ஓடி வருகிறாய்?'' என்றான் சுந்தரம்.

''எங்கம்மாவிறகுக் கடுமையான காய்ச்சல். உடனே கும்பகோணம் மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்று நம்மூர் மருத்துவர் கூறி விட்டார். கும்பகோணம் கொண்டு போக வண்டி எதுவும் கிடைக்கவில்லை. நீதான் உதவ வேண்டும், சுந்தரம்'' என்று அழுது கொண்டே கூறினான் கணேசன்.

''அழாதே, கணேசா! கண்டிப்பாக அழைத்துச் செல்கிறேன். கடவுளை வேண்டிக் கொள். உங்கம்மாவுக்குக் குணமாகும்'' என்றான் சுந்தரம்.

கணேசனின் வீட்டிற்குச் சென்று, அவனது தாயாரையும் கணேசனையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு புறப்பட்ட போது கை கடிகாரத்தைப் பார்த்தான் சுந்தரம். மணி ஒன்பதாகி விட்டது.

''வேகமாகப் போ, முருகா! பத்து மணிக்குத் தேர்வு'' என்று முருகனை விரைந்து ஓட்டச் சொன்னான். மயிலைக்காளையின் சலங்கைகள் வேகமாக ஒலிக்க ஆரம்பித்தன.

வண்டி கும்பகோணத்தையடைந்த போது மணி ஒன்பதே முக்கால் ஆகி விட்டது. இருந்தபோதிலும் நேரே மருத்துவமனைக்கு ஓட்டச் சொன்னான் சுந்தரம்.

''நீ தேர்விற்குப் போ, சுந்தரம்! இனிமேல் நான் பார்த்துக் கொள்கிறேன். உன் உதவிக்கு மிக்க நன்றி!'' என்றான் கணேசன்.

''இல்லை, கணேசா! உன் அம்மாவை மருத்துவமனையில் சேர்த்து விட்டுத்தான் நான் செல்வேன்,'' என்றான் சுந்தரம்.

மருத்துவமனையை விட்டு சுந்தரம் புறப்பட்ட போது,மணி பத்தே காலாகி விட்டது. பத்து மணிக்குத் தேர்வு தொடங்கியிருக்கும். பத்தரைக்குள் தேர்வுக் கூடத்துள் நுழையா விட்டால் தேர்வு எழுத முடியாது. நகர நெருக்கடியில் வில் வண்டி வேகமாகச் செல்ல முடியவில்லை. சுந்தரத்தின் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. தேர்வு எழுத முடியாமல் போய் விடுமோ? ''கடவுளே! கணேசன் இருந்த நிலையில் நான் எப்படி அவனுக்கு உதவாமல் வந்திருக்க முடியும்? எனக்கு நீதான் உதவ வேண்டும். கைவிட்டு விடாதே பிள்ளையாரே!' என்று மனமுருக வேண்டிக் கொண்டான்.

பத்து நாற்பதுக்குத்தான் வண்டி தேர்வு மையத்தையடைந்தது. சோர்ந்த உள்ளத்துடன் வண்டியினின்று குதித்துத் தேர்வுக் கூடத்திற்கு ஓடிய சுந்தரத்திற்கு ஒரு ஆச்சர்யம் காத்திருந்தது.

முந்திய தினத்தன்று ஏற்பட்ட ஒரு போராட்டம்–மறியல் காரணமாக, முந்திய தினத்தன்று மாலையே வந்து சேர வேண்டிய வினாத்தாள் கட்டுகள் மிகவும் தாமதமாக அப்பொழுதுதான் வந்திருந்தன. சுந்தரம் சென்ற பிறகுதான் வினாத்தாளைக் கொடுத்தார்கள். சுயநலத்தோடு நடந்து கொள்ளாது நண்பனுக்குக் கைகொடுத்த அவனைப் பிள்ளையார் கைவிட்டு விடவில்லை!



புதிர்

ரங்கநாதனுக்கும் லட்சுமிக்கும் ராமு ஒரே பையன். ரங்கநாதன் தனியார் கம்பெனியொன்றில் 'ப்யூன்' ஆக இருந்தார். குறைவான சம்பளமே வந்தது. இருந்தபோதிலும் ஒரே மகனான இராமுவை அவர் நன்றாக வளர்த்தார். நல்ல பள்ளியில் சேர்த்தார். அவன் வேண்டியதை யெல்லாம் வாங்கிக் கொடுத்தார். ராமுவும் நல்ல பையன்தான். நன்றாகத்தான் படித்தான். ஆனால் அவன் மனம் எளிதில் மனநிறைவு அடையாதது. அதனால் ரங்கநாதன் ராமுவைத் திருப்தி செய்வதற்காக நிறையச் செலவு செய்தார். இதன் காரணமாக ரங்கநாதன் தம்பதியினர் பல நாட்கள் பட்டினி கிடக்கக் கூட நேர்ந்தது.

கேட்டதெல்லாம் கிடைத்ததால் ராமுவிற்குப் பெற்ற அப்பா அம்மாவை விட ஆடம்பரமே முக்கியமாகப் போயிற்று. பள்ளிக்கூடம் அருகில் இருந்தும், நண்பர்கள் கேலி பண்ணுவார்கள் என்பதற்காகப் பிடிவாதம் பிடித்து சைக்கிள் வாங்கிக் கொண்டான். பலாச்சுளையை ஈக்கள் மொய்ப்பது போன்று, பணமிருந்ததால் அவனிடம் தீய நண்பர்கள் சேரலாயினர். ராமுவின் மனம் படிப்பில் செல்ல மறுத்தது. பள்ளிக்குச் செல்லாமல் 'கட்' அடித்து விட்டு நண்பர்களுடன் திரியலானான்.

பல நாட்களாக ராமு பள்ளிக்கூடம் வராததைக் கண்ட தலைமை ஆசிரியர், அவன் அப்பாவிடம் நடந்ததைக் கூறி ராமுவைக் கட்டாயம் மறுநாள் பள்ளிக்கு அனுப்புமாறு கூறி விட்டுச் சென்றார். மகனைப் பற்றி எண்ணற்ற கனவுகள் கண்டு கொண்டிருந்த ரங்கநாதனுக்கு இச் செய்தி பெரும் இடியைத் தந்தது. அவரால் நம்பவே முடியவில்லை. மனம் நொந்து போனார்.

பள்ளிக்குச் செல்வதாகக் கூறி விட்டு வெளியே சுற்றி விட்டுத் திரும்பிய ராமுவிடம் ரங்கநாதன், "ராமு! உன் எதிர்காலத்தைப் பற்றி என்ன

வெல்லாமோ கனவு கண்டு கொண்டிருக்கிறேன் அவற்றைப் பாழாக்கி விடாதே. உனக்கு வேண்டியதையெல்லாம் கேள். நான் வாங்கித் தருகிறேன். பள்ளியைப் புறக்கணித்து இப்படி உன்னையே சீரழித்துக் கொள்ளாதே'' என்று அறிவுரை கூறினார்.


ராமு அதைக் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. ''இதோ, பாருங்கள், என்போக்கில் என்னை விட்டு விடுங்கள். எனக்கு எல்லாம் தெரியும்'' என்று கூறி விட்டுத் தன் நண்பன் சோமு வீட்டிற்குச் சென்று விட்டான். ரங்கநாதனுக்குப் பைத்தியம் பிடித்தது போல் ஆகி விட்டது. லட்சுமிதான் அவருக்கு ஆறுதல் கூறித் தேற்றினாள்.

சோமு வீட்டிற்கு ராமு சென்ற போது அங்கு ஒரே ரகளை. சோமுவின் அப்பா ஒரு பெரிய குடிகாரர். தினமும் குடித்து விட்டு சோமுவின் அம்மாவை அடிப்பார். அன்றும் ராமு போன போது அவர் அதைத்தான் செய்து கொண்டிருந்தார். ராமு பயந்து போய் விட்டான். சோமு அவனை வேறொரு இடத்திற்கு அழைத்துச் சென்றான். ராமு சோமுவைப் பார்த்து, ''எப்படிடா இந்த நரகத்தில் இருக்கிறாய்? எப்போது பார்த்தாலும் இங்கு சண்டையும் அடிதடியுமாகத்தான் இருக்கும் போலிருக்கிறதே! இதையெல்லாம் சகித்துக் கொண்டு எப்படி இருக்கிறாய்?'' எனக் கேட்டான். அதற்கு சோமு, ''இதை விட்டால் எனக்கு வேறு எந்த இடத்தில் அடைக்கலம் கிடைக்கும்? என் அப்பா என்றாவது ஒருநாள் மனம் திருந்தி நல்லவராகி விடுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அப்படியே திருந்தாவிட்டாலும் நான் அவரை விட்டு ஓடி விட மாட்டேன். அப்படி ஓடினால் அது பெரிய பாவமாகும். அம்மாவின் நம்பிக்கை நட்சத்திரம் நான்தான். ஏதோ நான் செய்த புண்ணியம், எனக்கு அப்பா அம்மா இருவருமே இருக்கிறார்கள். அப்பா அம்மாவைப் பற்றியே அறியாத அனாதைகளைப் பார்! அவர்களோடு இருந்தால் தான் நமக்கு அந்தக் கஷ்டம் புரியும்'' என்றான்.

ராமுவிற்குத் தன் தந்தையிடம் தான் நடந்து கொண்டது நினைவுக்கு வந்தது. ஆண்டவன் சோமுவுக்கு எவ்வளவு மோசமான தந்தையைக் கொடுத்திருக்கிறார்! இருந்தாலும் அப்படிப்பட்ட தந்தையிடம் கூட சோமு எவ்வளவு மரியாதையாக; உண்மையாக நடந்து கொள்கிறான்! சோமுவின் அப்பாவைப் போல் அல்லாது அவனுக்கு ஆண்டவன் எவ்வளவு நல்ல உயர்வான தந்தையைக் கொடுத்திருக்கிறார்! அவரது மனம் கோணாமல் நடந்து அவரை மகிழ்விப்பதுதானே அவனது முதல் கடமை. எண்ண எண்ண ராமு புதிய உண்மைகளை உணரலானான்!

ராமு தவறாமல் பள்ளிக்கு வந்து அக்கறையாகப் பாடம் கற்கத் தொடங்கியது அவனது ஆசிரியருக்குப் புதிராக இருந்தது.

– சா. பவித்ரா, சென்னை – 23.



★ அமெரிக்காவிலே ஒரு சாக்லேட் தயாரிப்பு நிறுவனம் 1900 ராத்தல் எடையுள்ள ஒரு ராட்சத சாக்லேட்டைத் தயாரித்தது அந்த சாக்லேட்டைத் துண்டு போடுவதற்கு ஒரு ரம்பமே தேவைப்பட்டது. சாக்லேட்டை வைத்து விட்டு இரு புறமும் இரண்டு பேர் நின்று கொண்டு ஒரு மரத்தைத் துண்டு போடுவது போல் போட்டார்களாம்! அறுவை சாக்லேட்?

- க. இரா. விஜயகுமார், செஞ்சி- 2.

இனாமா வெச்சுக்க!



ஆர். வி. பதி


பாபு பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். பணக்கார மாணவன். ஆகையால் அவனைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். இதனால் அவன் மனத்தில் தான் ஒரு ஹீரோ என்ற நினைப்பு வளர்ந்திருந்தது. அவன் எது சொன்னாலும் உடன் இருக்கும் கூட்டம் ஆமாம் போடும்.

அதே வகுப்பில்தான் விஜய் படித்துக் கொண்டிருந்தான். நன்றாகப் படிப்பான். ஆனால், பாவம் அவன் ஏழை. வசதியில்லாத காரணத்தால் புத்தகம் வாங்கவே சிரமப்பட்டான். அவனுடைய அப்பா ஒரு விபத்தில் இறந்து போனார். அவனுடைய அம்மாவை அவன் காப்பாற்றியாக வேண்டும். ஆகையால், அவன் மாலை நேரங்களில் தன் அம்மா செய்து தரும் சுண்டலைக் கடற்கரைக்குச் சென்று ஒரு மணி நேரம் விற்று அதில் கிடைக்கும் இலாபத்தில் தன் அம்மாவைக் காப்பாற்றித் தானும் படித்து வந்தான்.

பல சமயங்களில் பாபு விஜய்யைக் கேலி செய்வான். அப்போது பாபுவுடன் இருக்கும் கூட்டம், கை தட்டி சிரிக்கும். இதனால் எல் லாம் விஜய் சோர்வடைய வில்லை. மாறாக வாழ்க்கையில் எப்படியாவது ஒரு உயர்ந்த இடத்தைப் பிடிக்க வேண்டும் என்று கடுமையாக உழைத்தான்.

மாலை நேரங்களில் பாபு தன் நண்பர்களுடன் கடற்கரைக்கு வருவான். அப்போது விஜய்யிடம் சுண்டல் வாங்கித் தன் நண்பர்கள் அனைவருக்கும் தருவான். பத்து ரூபாய் நோட்டை அலட்சியமாக நீட்டுவான். விஜய் மீதி சில்லறை தர முற்படும் போது மிக அலட்சியமாக, ''மீதியை என்னுடைய இனாமா நீயே வெச்சுக்கடா. பாவம்!'' என்று கிண்டலாகப் பதில் சொல்வான்.

அடுத்த சில மாதங்களில் நிலைமை தலைகீழாக மாறியது. கள்ளக் கடத்தல் செய்த குற்றத்திற்



பெண் பார்க்கப் போனியே... என்னாச்சு?

அது ஒரு பொய்க்கால் குதிரைப் பெண்ணாம்! திரும்பி வந்திட்டேன்!

- ச. காளிக்கை ராஜ்.



நான் தூங்கறப்போ யாரோ என் கால் விரல்களில் சொடக்குப் போட்ட மாதிரி சொப்பனம்...

நான்தான் உங்க நகத்தையெல்லாம் வெட்டினேன்!

- ச. காளிக்கைராஜ்

பாட்டி, உங்க பேரனுக்கு லாட்டரியில் ஒரு கோடி ரூபாய் விழுந்திருக்கு!

அப்ப எம்பேரன் குபேரனாயிட்டானா?

- ஸ்வீட். ரவி



காக பாபுவின் அப்பாவைப் போலீசார் கைது செய்து அவருடைய சொத்துகள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்தார்கள். அவனுடைய அப்பா பணக்காரராக மாறியதற்குக் காரணம் அவர் செய்த கள்ளக்கடத்தலே. இப்போது பாபு மிகவும் ஏழ்மையான நிலைக்கு வந்து விட்டான். அவனுடன் இருந்த நண்பர்கள் எல்லாம் அவனிடம் பணமில்லை என்று தெரிந்ததும் பாபுவை விட்டு விலகினர்.

ஆண்டுத் தேர்வு நெருங்கியது.

இன்னும் ஒரு வார காலத்தில் தேர்வுக் கட்டணம் இருபத்தைந்து ரூபாய் செலுத்த வேண்டும் என்று பள்ளி நிர்வாகம் சுற்றறிக்கை வெளியிட்டது.

இரண்டு நாட்கள் ஓடின.

பாபு ஒரு மரத்தடியில் மிகுந்த கவலையுடன் உட்காரந்திருந்தான். விஜய் வந்தான்.

''என்ன பாபு ரொம்பக் கவலையோட உட்கார்ந்திருக்கே?''

''ஒண்ணுமில்லே விஜய்.''

''என்ன பிரச்னை பாபு? எது வானாலும் என்கிட்டே சொல்லு. உனக்கு நான் என்னாலே முடிஞ்ச உதவியைச் செய்யறேன்.''

''இன்னும் அஞ்சு நாள்லே தேர்வுக் கட்டணம் கட்டியாகணும். இப்போ என்னோட நிலைமை உனக்கே தெரியும். எப்படித் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தறதுன்னு தெரியலை. அன்றைக்கு என்னிடம் பணம் இருந்த போது, என்னைச் சுற்றி வந்த நண்பர்கள் யாரும் எனக்கு இப்ப உதவ முன் வரலே. வெட்கத்தை விட்டுக் கேட்கக் கூடக் கேட்டு விட்டேன்.''

''இவ்வளவுதானே? இந்தா இதுலே நாற்பத்தி மூணு ரூபாய் இருக்கு. இதுலே இருந்து தேர்வுக் கட்டணத்தை இப்பவே கட்டிட்டு வந்திடு'' என்று ஒரு காகிதப் பொட்டலத்தை அவனிடம் கொடுத்தான் விஜய்.

''இந்தப் பணம் ஏது உனக்கு?''



''இது உன்னோட பணம்தான் பாபு'' என்றான் விஜய்.

''என்னது! என்னோட பணமா?''

''ஆமாம் பாபு. முன்னே நீ உன் நண்பர்களோட கடற்கரைக்கு வந்து என்கிட்டே சுண்டல் வாங்கிச் சாப்பிட்டு அதுக்குக் காசு கொடுத்து மீதி சில்லறையை நீயே இனாமா வச்சுக்கடான்னு அலட்சியமா சில்லறையை வாங்காம போவே இல்லே, அந்தப் பணத்தை நான் எடுக்காம ஒரு பொட்டலத்துல போட்டுக் கட்டி வந்தேன். அப்படிச் சேர்ந்ததுதான் இந்தப் பணம். அப்போ உன்கிட்டே நிறையப் பணம் இருந்ததாலே நீ ரொம்ப அலட்சியமா இருந்துட்டே. இப்ப உன்னோட பழைய நண்பர்கள் யாராவது உதவ முன் வந்தாங்களான்னு பார்த்தியா? அவங்க எல்லாம் உன்னோட பணத்துக்காக உன் பின்னாலே சுத்தினவங்க. அதை இப்பவாவது நீ உணர்ந்திருப்பேன்னு நினைக்கிறேன்.''

''என்னை மன்னிச்சிடு விஜய். உன்னைப் பல சமயங்கள்லே கேலி செய்திருக்கேன். ஆனா, அதை மனசுலே வெச்சுக்காம இப்ப எனக்கு சமயத்திலே பெரிய உதவி செய்திருக்கே.''

மனப்பூர்வமாகப் பேசினான் பாபு.

அயரா உழைக்கும் சிறுமி!



மூன்றாம் ஜார்ஜ் மன்னர் ஒரு நாள் மாறு வேடம் பூண்டு தம் நாட்டைச் சுற்றிப் பார்க்கப் புறப் பட்டார். கோதுமை வயல் வெளிக்கு அவர் வந்த போது, அங்கே ஒரு சிறுமி கோதுமை வயலில் ஏதோ கடுமையாக வேலை செய்து கொண்டி ருந்தாள். அரசர் வியப்புற்று அவளை அழைத்தார். ''மற்றவர்கள் எல்லாம் எங்கே? நீ மட்டும் தனியாக வேலை செய்து கொண்டிருக்கிறாயே!'' என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சிறுமி, ''அரசர் பவனி வரப்போகிறாராம். அவரைப் பார்ப்பதற்காக எல்லோரும் சென்றிருக் கிறார்கள்'' என்றாள்.

''அப்படியா! நீ ஏன் அரசரைப் பார்க்கப் போகவில்லை'' என்று கேட் டார் மூன்றாம் ஜார்ஜ் மன்னர்.

''நான் என்ன அவர்களைப் போல் முட்டாளா? எனக்கு எனது வேலை தான் முக்கியம். வேடிக்கை முக்கிய மல்ல'' என்றாள் அந்த அதிசயச் சிறுமி.


மூன்றாம் ஜார்ஜ் மன்னர் அயர்ந்து போனார். அச்சிறுமியின் பொறுப் புணர்ச்சியைக் கண்டு மகிழ்ந்து போனார். அவளிடம், ''மற்றவர்கள் அரசரைப் பார்க்கப் போனார்கள். ஆனால், அரசரே உன்னைத் தேடி வந்து பார்த்துச் சென்றார் என்று என்னைக் காணச் சென்றவர்களிடம் சொல்'' என்று கூறிவிட்டு அச்சிறுமியிடம் விடை பெற்றுச் சென்றார்.

சிறுமியின் விழிகளில் பரவச நீர் முத்துக்கள் பனித்தன!

- தா. ஷேக் உசேன், செஞ்சி - 2.

அரணை கடித்தால் மரணமா?

ரேவதி



அரசமரத்தடிப் பிள்ளையாருக்கு அமர்க்களமாக அபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. தேனையும், பாலையும், தயிரையும் குடம் குடமாக ஊற்றிக் கொண்டிருந்தார்கள். அரசமரத்தடி சிமெண்ட் மேடையில் நின்றபடி பக்த கோடிகள் அபிஷேகத்தைப் பக்தி பரவசத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அபிஷேகம் செய்த பாலும், தேனும், தயிரும், இளநீர் வகைகளும் பிள்ளையார் மேல் வழிந்து பிள்ளையாரைச் சுற்றியிருந்த மண் தரையில்; அரச மர வேர் அடர்ந்து பூமிக்குள் ஓடியிருந்த பகுதியில் இறங்கிக் கொண்டிருந்தது.

வேர் ஓடி மண்டியிருந்த பகுதியில், பிள்ளையாருக்குக் கீழே எவ்வளவோ பூச்சி இனங்களும், ஊர்வன வகைகளும் வசித்தன.

பொன்னழகனும் சிவப்பியும் கூட அதில்தான் வசித்தன. பொன்னழகன் அழகான ஆண் அரணை. பளபள வென்று பொன் நிறத்தில் கரும் பழுப்புப் புள்ளிகள் கொண்ட அதன் வெல்வெட் உடலை இன்று முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அதன் மனைவி சிவப்பி மட்டும் சாதாரணமானதா? 'பளபள'வென்று பழுப்பும் சிவப்பும் கூடிய அதன் வரிப் பட்டை உடலை ஒருமுறை பார்த்தவர்கள், அது கண்பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டே இருப்பார்கள். அவ்வளவு கொள்ளை அழகு!

சிவப்பி அரசமர வேரின் வளைந்து சுருண்ட அடுக்கின் உயரத்தில் முட்டையிட்டுக் கொண்டிருந்தது. அதற்கு சற்றுக் கீழே வேரின் இன்னொரு மடிப்பில் பொன்னழகன் சாய்ந்து கொண்டு கவலையோடு சிவப்பியை அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தது. பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்த பால், தயிர், தேன், இளநீர், பன்னீர், பழவகைகள் வழிந்து அரசமர வேரில் இறங்கி வந்து வேகமாக நிரம்பிக் கொண்டிருந்தது. சிறிது சிறிதாக நீர் மட்டம் உயர்ந்து கொண்டே இருந்தது. பொன்னழகனின் கவலைக்கு அதுதான் காரணம்.

''நான் அப்பவே சொன்னேன் இந்த இடம் முட்டையிட ஏற்றது இல்லை. வேறு ஏதாவது நல்ல இடமாகப் பார் என்று. நீதான் ஒரே பிடிவாதமா இந்த இடம் தான் பொருத்தமானதுன்னு வீம்பு புடிச்சே. இப்ப என்ன ஆச்சு பார்'' என்று வருத்தத்தோடு கூறியது சிவப்பி.

''இது நமக்கு மிகவும் பழக்கமான இடம். பூச்சி, புழு, வண்டு போன்ற இரைகளுக்கு இங்கு பஞ்சம் இல்லை. அதோடு என் அம்மா, பாட்டி எல்லோரும் இங்குதான் முட்டையிட்டு நல்லபடியாக வாழ்ந்தார்கள். மேலும் புது இடத்தில் என்ன ஆபத்துகள் இருக்குமோ. இதையெல்லாம் நினைத்துத்தான் இந்த இடத்திலேயே முட்டையிடுன்னேன்'' என்று மனைவியை அமைதிப்படுத்தியது பொன்னழகன்.

''அதென்னமோ, நான் முட்டையிடற நாளாப் பார்த்துத்தான் இந்த அரசமரத்தடிப் பிள்ளையாருக்கு இப்படி அபிஷேகம் நடக்கணுமா? இன்னும் கொஞ்ச நேரம் போனால் நீ இருக்கும் இடமும் மூழ்கி, நான் இருக்கும் இடமும் மூழ்கி, முட்டையெல்லாம் மிதந்து வெளியே போயிடும் போல இருக்கே'' என்று கவலையால் விசும்பியது சிவப்பி.

''அப்படியெல்லாம் ஆகாது சிவப்பி. கொட்டு கொட்டுன்னு மழை விடாம பெய்தப்ப கூட இந்த இடம் மூழ்கலே. மண் தரை நாம இருக்கிற இடத்துக்குக் கீழேதான் இருக்கு.

இலை,. சருகு ஏதாவது அடைபட்டு, தண்ணியைக் கீழ இறங்க விடாம தடுத்துக் கொண்டிருக்கும். அதோட, எவ்வளவு நேரம்தான் அபிஷேகம் பண்ணிக்கிட்டிருப்பாங்க? இ தே ா இப்ப நிறுத்திடுவாங்க பாரேன்'' என்று மனைவியைத் தேற்றி, பயத்தைப் போக்க முயன்றது பொன்னழகன்.

பொன்னழகனின் நம்பிக்கை வீண் போகவில்லை. அபிஷேகம் முடிந்து நீர் வருவது நின்றது. சிறிது நேரத்தில் மணியடிக்கும் ஓசை கே ட் ட து. தொடர்ந்து சாம்பிராணி வாசனையும் வந்தது.

''அபிஷேகம் முடிஞ்சு பூஜை கூட முடிஞ்சு போச்சு. இனிமே எந்த ஆபத்தும் இல்லை. நீ பாட்டுக்கு எந்த விதமான கவலையும் இ ல் ல ா ம முட்டையிடு,'' என்று மனைவியை உற்சாகப்படுத்தியது பொன்னழகன்.

நேரம் ஓடியது.

''எத்தனை முட்டை போட்டிருக்கே?''

''இது பதினெட்டாவது. இதுதான் கடைசி'' என்று பெருமையோடு பதிலளித்த சிவப்பி, ''எனக்கு பயங்கரமா பசிக்குது. ஏதாவது இரை கொண்டா'' என்றது.

வேரின் வ ழி ய ா க இரண்டு கொழுத்த மரவட்டைகள் கீழே இறங்கிக் கொண்டிருந்தன.

''இரை தேட நீ இனிமே வெளியே போகவே வேண்டாம். கட்டெறும்பும், வண்டுகளும் இந்தத் தேனுக்கும் பாலுக்கும்தானே இங்கே வரும். இதுக்கெல்லாம அட்வான்சா அதோ ரெண்டு கொழுத்த மரவட்டைங்க உன் பக்கமாவே இறங்கி வருது பார். ஒரு புடி பிடி'' என்று மனைவியை உற்சாகப் படுத்தியது பொன்னழகன்.

மரவட்டைகள் இரண்டும் சிவப்பிக்கி இரையாயின.

''எனக்கு இன்னும் பசி அடங்கலே.''

''ஓகோ! பதினெட்டு முட்டையிட்டிருக்கியே... சும்மாத்தானா? பசிக்கத்தான் பசிக்கும். நான் வெளியே போய் ஏதாவது இரை கொண்டு வரேன். முட்டைங்க பத்திரம். நீயும் கவனமா இரு'' - பொன்னழகன் வெளியே வந்தது.

பக்தகோடிகள் கலைந்து போயிருந்தார்கள். பிள்ளையார் மட்டும் தனியாக இருந்தார். நைவேத்தியமாக விட்டு வைத்திருந்த இரண்டொரு கொழுக்கட்டைகளைக் காக்கைகள் கொத்திக் கொண்டிருந்தன.

காக்கைகளைக் கண்டதும் பொன்னழகன் பின்வாங்கி விட்டது. காக்கைகள் கண்ணில் பட்டால் அவ்வளவு தான். கொத்தியே உயிரை வாங்கி, விழுங்கி விடும்!

பின்வாங்கிக் கீழே இறங்கி வந்த பொன்னழகன் தடித்த மரவேரைத்



தாண்டும் போது நின்றது. மர வேருக்குக் கீழே ஏதோ மெல்லிய சப்தம்! வேருக்குக் கீழே இருந்த தீக்குச்சி அளவு இடைவெளியில், அது மின்னலென நுழைந்தது. அங்கே இருந்த சிறு இடைவெளியில் ஒரு தேள் கூட்டம்! ஓர் அம்மாத்தேள், தனது எட்டுக் குட்டிகளோடு மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தது!

வந்த சுவடு தெரியாது திரும்பிய பொன்னழகன், மனைவியோடு திரும்பி வந்தது! தேள் கூட்டம் அவை இரண்டுக்கும் நல்ல விருந்தாயிற்று!

இரண்டும் தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பின. அன்று இரவு இருட்டும் நேரத்தில் அந்த இடம் ஒரே யடியாக அமர்க்களப்பட்டது. எலிகள் இங்குமங்கும் ஓடின.

''என்ன ஆச்சு? ஏன் இப்படி ஓடறீங்க?'' என்று கேட்டது பொன்னழகன்.

''வளையின் இன்னொரு பக்கத்து வழியா ஒரு நல்ல பாம்பு பூந்து விட்டது! எங்க ஆளுங்களில் இரண்டு பேர் காலி! அது எப்ப வேணுமானாலும் இங்கே வந்துடும்'' என்று பதிலளித்த ஓர் எலி, பீதியோடு ஓடிச் சென்றது.

பொன்னழகன் சிவப்பியைக் கவலையோடு நோக்கியது.




''என்னங்க! பாம்புக்குப் பறி கொடுக்கவா பதினெட்டு முட்டையிட்டேன்? பிடிவாதமா இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தீங்களே!'' என்று அழுதது சிவப்பி.

''இப்படியாகும்னு நான் கண்டேனா?'' என்று குழம்பிய நிலையில் மனைவியைத் தேற்றியது பொன்னழகன்.

'புஸ்'ஸென்று பாம்பின் சீறல் கேட்டது. இரண்டும் நடுங்கி, ஒரு வேரின் பட்டைக்குள் ஒடுங்கிக் கொண்டன. மின்னல் வேகத்தில் அங்கே வந்த நல்ல பாம்பு, அரணை முட்டைகள் இருந்த இடத்தைக் கண்டு பிடித்து மகிழ்ந்தது. தன் கண்ணெதிரிலேயே தான் இட்ட முட்டைகளைப் பாம்பு விழுங்குவதைக் கண்டு குமுறியது சிவப்பி.


முட்டைகளை விழுங்கி முடித்த பாம்பு, அசைந்த சிவப்பியின் வால்



முட்டையிலிருந்து வெளியே வந்ததும் என்ன விவாதம் பண்றீங்க?

கோழியிலிருந்து முட்டையா, முட்டையிலிருந்து கோழி வந்ததான்னுதான்.

- ச. காளிக்கைராஜ்



தாத்தா, உங்க பழைய கதையையெல்லாம் கேட்டது தப்பா போச்சு. நாளைக்கு ஓட்டப் பந்தயம். அந்த ஆமைப் பயலும் கலந்துக்கறானாம். எனக்கு இப்பவே பயமா இருக்கு!

- ச. காளிக்கைராஜ்



''சந்திரன் பூமியைச் சுற்றுகிறது, பூமி சூரியனைச் சுற்றுகிறது, என்ன புரிகிறதா?''

''கொஞ்சம் இருங்க சார். எனக்குத் தலையைச் சுற்றுகிறது!''

- எம். கீதா, புதுடில்லி.

நுனியைப் பார்த்து விட்டது. அவ்வளவுதான்! இரண்டு அரணைகளுக்கும், பாம்புக்கும் அங்கே அந்த வேர்ப் புதரில் ஓர் ஓட்டப்பந்தயமே நடைபெற்றது!

பொன்னழகனும் சிவப்பியும் உயிரைப் பிடித்துக் கொண்டு ஓடின! வளைந்தும், நெளிந்தும், எகிறியும் சளைக்காது அவை ஓடின! பாம்பும் விடாமல் துரத்தியது முழு வேகத்துடன். இத்தனையும் அந்த வளைக்குள்தான் நடந்தன!

''சோர்ந்து போகாதே சிவப்பி! வளைக்கு வெளியே போய் விட்டால் உயிர் தப்பி விடலாம்'' என்று மனைவிக்கு நம்பிக்கை ஊட்டியபடி பாம்புக்குப் போக்குக் காட்டியது பொன்னழகன்.

இரண்டும் வெளியே வந்தன. கல்லிடுக்குக் கீழே இருந்த இடைவெளிக்குள் இரண்டும் நுழைந்து தப்பித்துக் கொண்டன. பாம்பினால் அதற்குள் நுழையக் கூட முடியவில்லை! அன்று முழுவதும் அரணைகள் இரண்டும் அந்தக் கல்லிடுக்கிற்குள்ளேயே உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கிடந்தன. அடுத்த நாள் பாம்பு அபாயம் முற்றிலுமாக நீங்கியது என்பதை உறுதி செய்து கொண்ட பிறகுதான், இரண்டும் வெளியே வந்தன.

அவைகள் ஒளிந்திருந்தது அரச மரத்தடி மேடையின் கருங்கல்படி இடுக்கில். அவைகள் வெளியே தலை காட்டிய போது கருங்கல்படியில் ஒரு கடுக்கன் போட்ட மனிதர் நின்று கொண்டிருந்தார். அவருடைய காலில் ஒரு கொழுத்த கட்டெறும்பு ஏறிக் கொண்டிருந்தது.

''எனக்குக் கொலைப் பசி! இந்த ஆளின் காலில் ஏறிக் கொண்டிருக்கும் கட்டெறும்பை நீங்க சாப்பிடறீங்களா? இல்லை நான் சாப்பிடலாமா?'' என்று கேட்டது சிவப்பி.

''நீயே சாப்பிட்டுக் கொள்'' என்று மனைவிக்கு விட்டுக் கொடுத்தது பொன்னழகன்.

இதற்குள் கட்டெறும்பு கடுக்கனின் புறங்காலில் ஏறி விட்டது. சிவப்பி, நெளிந்து பாய்ந்து கட்டெறும்பைக் கௌவியது. மறுபடி இடுக்கிற்குள் வந்து விட்டது.

காலில் 'சுரீர்' என்ற உணர்வோடு கடுக்கன் குனிந்து பார்த்தது. இடுக்கி னுள் அரணை புகுந்து கொள்வது கண்ணில் பட்டது. அவ்வளவுதான்!

''ஐயோ! என்னை அரணை கடித்து விட்டது!'' என்று கத்தினார் அவர்.

''அரணையா! ஐயையோ அரணை கடித்தால் அரை மணியில் மரணம்னு சொல்லுவாங்களே! இப்ப என்ன செய்வேன்?'' என்று புலம்பினாள் கூடவே இருந்த கடுக்கனின் மனைவி.

கடுக்கனின் முகம் வெளுத்தது. முகத்தில் பீதி நிறைய அவர் அப்படியே சாய்ந்தார். எல்லோரும் ஓடி வந்து தூக்கிக் கொண்டு போனார்கள்.

''நீ அந்தக் கடுக்கன் ஆளைக் கடித்தாயா?'' என்று மனைவியிடம் கேட்டது பொன்னழகன்.

''இல்லீங்க. நான் கடிக்கவே இல்லை. நம்முடைய பற்களே மிகச் சிறியவை. நம்மால் ஒரு மனிதனைக் கடிக்க முடியுமா?'' என்று பரிதாப மாகக் கேட்டது சிவப்பி.

''அரணை கடிச்சிட்டுதுன்னு அவர் அலறினாரே?''

''ஒருவேளை கடிச்சது கட்டெ றும்பா இருக்கும். அந்த நேரத்தில் நான் பாயவே நான்தான் கடிச்சிட்டேன்னு அவர் முடிவு கட்டிட்டார்.''

''அந்த ஆளுக்குப் பயமே பாதி. நம்மால ஒரு மனிதனைக் கடிக்கவே முடியாது. நாம கடிக்கறதும் இல்லே. இப்படி இங்கே நடந்த மாதிரி ஏதாவது நடந்திருந்தால், நாமதான் கடிச்சோம்னு பயப்படறாங்க. பாம்பு மாதிரி நாமும் உருவத்தில் இருப்பதால் நாம்ப கடிச்சாலும் விஷம்னு முடிவு பண்ணிடறாங்க. நாம்ப பாம்பு இனம் இல்லை. பல்லி இனம் கறதை இவங்க மறந்துடறாங்க. நம்ம பல்லி இனங்களில் விஷம் உள்ளவை 'ஹீலோ டெர்மா சஸ்பெக்டம்' என்ற இனம் தான். இவை கூட இந்தியாவில் இல்லை. வட அமெரிக்காவில்தான் இருக்கு. இவை கடிச்சால்தான் மரணம். அதனால், நம்மையும் சேர்த்து மற்ற இனப் பல்லிகள், கடித்தால் விஷமே இல்லை. யார்தான் நமக்கு இப்படி ஒரு பட்டத்தைக் கட்டி விட்டார்களோ?'' என்று வருந்தியது பொன்னழகன்.

உண்மையை அறியாமல் பயத்தா லேயே உயிருக்குப் போராடிக் கொண் டிருந்தார் கடுக்கன்!

அறிவியல் உண்மைகள்!

★ பாம்பரணை எனப்படும் அரணை மபூபா கேரினேட்டா என்ற பல்லி இனப் பிரிவாகும். இதற்கும் பாம்புக்கும் தொடர்பே இல்லை. இதுவும் நெளிந்து ஓடுவதால் பாம்பு என்று பெயரைச் சேர்த்து விட்டார்கள்.

★ அரணை கடித்தால் மரணம் என்பது சரியல்ல. இதற்கு ஆதாரமே இல்லை. பாம்பு என்பதையும் இதன் பேரோடு சேர்த்துக் கொண்டதால் வந்த வினையே இது.

★ பல்லி இனங்களில் 'ஹீலோ டெர்மா சஸ்பெக்டம்' என்ற வகை மட்டுமே கடித்தால் விஷம். இது கூட வட அமெரிக்காவில் மட்டுமே உள்ளது. மற்ற வகைப் பல்லிகள் எதுவும் கடித்தால் விஷமே அல்ல.

★ அரணை கடித்து மரணம் என்பது பயத்தால் ஏற்படும் மரணமே.


★ புழு, பூச்சி, மரவட்டை, தேள்களை அரணைகள் இரையாக்கிக் கொள்வது இயற்கை. அரணைகளையும் அரணை முட்டைகளையும் பாம்புகள் இரையாக்கிக் கொள்வதும் கூட இயற்கையின் விதியே.

★ அரணை அல்லது பல்லிகள் உணவில் விழுந்து, வெந்து உணவோடு கலந்து விட்டால் மட்டுமே விஷம். இது கூட உயிரை வாங்கும் அளவுக்கு விஷத்தன்மை கொண்டதாக இருக்காது. வாந்தி, பேதி போன்ற சாதாரண நச்சு விளைவுகளைத் தோற்றுவிக்கும். இதற்கு உடனடியாக சிகிச்சை அளித்தால் சரியாகி விடும். விஷங்களால் இறப்பவர்களை விட பயத்தால், இறப்பவர்களே அதிகம்!

''அவர் போலி டாக்டர்னு எப்படி கண்டுபிடிச்சே?''

''காலராவுக்கு கால்லதான் ஊசி போடுவேன்னு அடம் பிடிக்கிறாரே.''

- சி. வி. கிஷோர்குமார்.



பழமொழி என்ன கண்டுபிடி - போட்டி முடிவு

போட்டி வைப்பது என்றாலே நடுங்கும்படி செய்து விட்டார்கள் தம்பி தங்கைகள்! இதிலும் 2219 பேர் கலந்து கொண்டிருக்கிறார்கள்! இரண்டாயிரம் பேருக்கு மேல் சரியாக எழுதியிருக் கிறார்கள்! பரிசுக்குரியவர்களை முடிவு செய்யக் குலுக்கல் முறைதான் கை கொடுத்தது!

ரூ. 10 பரிசு பெறுவோர் ;

1. பி. ராஜேஷ்,
64 ஏ, ஆறுமுக பிள்ளையார் கோவில் தெரு,
குகை, சேலம் 636 006.

2. பா. ரோசாரி,
த/பெ. திரு. ஜி. பாரத மணி,
6, சைனிக் குவார்ட்டர்ஸ், மந்தாரக்குப்பம்,
நெய்வேலி - 2.

3. எஸ். ஆனந்த்,
த/பெ. திரு. எஸ். சுப்ரமண்யன்,
மேநிலை ஆசிரியர்,
முல்லை வீதி,
புதுநகர்,
மதகடிப்பட்டு,
புதுவை மாநிலம் 605 107.

4. இரா. கிருஷ்ணன்,
69/15 மாதா கோவில் வீதி,
புதுச் சேரி - 1

5. ரெ. புனிதா,
த/பெ. திரு. ரெங்கராஜன்,
மேலத் தெரு,
அல்லூர் போஸ்ட்,
திருச்சி மாவட்டம் - 620 101.

6. வி. அபிதா,
மனை எண் 32 க,
இரண்டாவது தெரு,
ஆசாத் நகர்,
திருச்சி - 620 021

7. எஸ். கவிதா,
5, வேம்புலி அம்மன் கோவில் தெரு,
சென்னை - 600 092.

8. ரா. ராஜவித்யா,
த/பெ. திரு. பி. ராஜாமணி,
68, பழைய கோட்டை ரோடு,
காங்கேயம்,
638 701.

9. ஆர். ரெத்தின குமார்,
பிளாட் எண் 61,
சித்திர கலா காலனி,
திருநகர்,
மதுரை - 6.
625 006.

10. ஆர். கிரிதாரிப் பிரசாத்,
த/பெ. திரு. எம். வி. இராமச்சந்திரன்,
7/235, த.மி.வா. குவார்ட்டர்ஸ்,
கல்தான் பேட்டை போஸ்ட்,
பல்லடம் வட்டம்,
638 669.


பழமொழிகள்

1. குரைக்கின்ற நாய் கடிக்காது
2. நாய் வாலை நிமிர்த்த முடியுமா?
3. நாய் விற்ற பணம் குரைக்காது?
4. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?

"பதினெட்டாம் நூற்றாண்டு விடுதலைப் போராட்ட வீரர் யாரையாவது பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?"

"ஓ...! எல்லாருமே இறந்து போயிட்டாங்க சார்!"

- சீர்காழி. வி. ரேவதி.



நன்றி மறவா நல்லவர்!

ஜானகி மணாளன்



''என்னங்க முடிவு செய்தீங்க...?'' என்றாள் மனைவி.

''எதைப் பற்றி...?'' என்றார் சிதம்பரம்.

''என்னங்க நீங்க...? மறந்துட்டீங்களா..? இது நம்முடைய இரண்டாவது மகன்... இவனுக்குப் பெயர் வைக்கணுமே... என்ன பெயர் வைக்கப் போறீங்க...?''

''அது பற்றி நான் இன்னும் ஒரு முடிவுக்கு வரல்ல... யோசித்துக்கிட்டுத்தான் இருக்கிறேன்...'' என்றார் சிதம்பரம்.

''இதில் யோசிக்க என்ன இருக்குது...? நம் குடும்ப முன்னோர்களில் ஒருவர் பெயரை வைத்துட வேண்டியதுதானே...?'' என்று கேட்டாள் மனைவி.

சிதம்பரத்துக்கு அதில் உடன்பாடு இல்லை. அதை அவர் முகம் எடுத்துக் காட்டியது. அவர் ஒரு முற்போக்குச் சிந்தனையாளர். புரட்சிகரமான எண்ணங்கள் கொண்டவர். பழமையைப் போற்றுபவர்தான் என்றாலும், மூட நம்பிக்கையில் திளைப்பவர் அல்ல. சீர்திருத்தங்களைத் துணிந்து செயல்படுத்த விழைபவர். தன் மகனுக்குப் பெயர் சூட்டுவதிலும் புதுமை புரிய விரும்பினார்.

இந்தச் சிதம்பரம் யார் என்று குழம்ப வேண்டாம். நமது செந்தமிழ் நாட்டின் தவப் புதல்வர்களில் ஒருவரான வ. உ. சிதம்பரம் பிள்ளைதான் அவர்.

வ. உ. சி. ஒரு தன்னலமற்ற தியாகி. நாட்டுக்காகத் தனது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்த உத்தமர். அஞ்சா நெஞ்சர். தேசத் தொண்டு தான் அவரது மூச்சு! தமது அரும் பணிகள் மூலம், இந் நாட்டு மக்களின் தியாக உணர்வைத் தட்டி எழுப்பிய உயர்ந்த தலைவர். அன்பும் பண்பும் மிக்கவர். செய்நன்றி மறவாச் சீரிய பண்பாளர். கடும் உழைப்பாளர். கல்வி கேள்விகளில் வல்லவர். தமிழ்க் கடல். தலைசிறந்த எழுத்தாளர். பெரும் புலவர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பாஞ்சாலம் குறிச்சி அருகில் ஒரு சிற்றூர். ஒட்டப்பிடாரம் என்று பெயர். அங்கு உலகநாதன் பிள்ளை என்று ஒரு வழக்கறிஞர். அவர் மனைவி பரமாயி அம்மாள். இந்த இருவருக்கும் 1872 செப்டெம்பர் 5 ஆம் தேதி பிறந்தவர்தான் நமது வ. உ. சிதம்பரம் பிள்ளை.

வ. உ. சி. முதலில் திண்ணைப் பள்ளியில் படித்தார். பிறகு செயின்ட் சேவியர் பள்ளியில் பயின்று மெட்ரிகுலேஷன் தேர்ச்சி பெற்றார். அதையடுத்து வழக்கறிஞர் தேர்விலும் வெற்றி பெற்றுத் தமது தந்தையைப் போல் வக்கீல் தொழிலில் ஈடுபட்டார்.

வழக்கறிஞர் தொழிலில் அவர் வருமானத்தைப் பெரிதாகக் கருதவில்லை. ஏழைகளின் வழக்குகளில்

அவர் காசு வாங்காமலே வாதாடினார். ஏழையோ பணக்காரரோ, யாராக இருந்தாலும் சரி, உண்மை இருக்கும் வழக்குகளை மட்டுமே அவர் ஏற்றுக் கொண்டார். அந்த உண்மையை நிலை நாட்ட மட்டுமே அவர் தமது வாதத் திறமையைப் பயன்படுத்தினார். பொய்யை மெய்யாக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டதே இல்லை. எனவே, நாளடைவில் அவரது பெயரும் புகழும் பெருகின. மக்களிடம் செல்வாக்குப் பெற்றவர் ஆனார். அத்துடன் ஓரளவு வருவாயும் கிடைத்தது.

முதலில் ஒட்டப்பிடாரத்தில் வக்கீல் தொழில் செய்த அவர், பிறகு தூத்துக்குடியில் தம் தொழிலைத் தொடர்ந்தார். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், தமிழ் நூல்களைக் கற்பதில் ஈடுபட்டார். தமது தமிழ் அறிவை வளர்த்துக் கொண்டார். தன்னைச் சுற்றி இருந்தவர்களின் அறிவு வளரவும் தொண்டாற்றினார். 'தமிழ் நாடு' என்ற ஏட்டில் கட்டுரைகள் எழுதினார். பின்னர், தாமே 'விவேக பானு' என்ற ஒரு மாதப் பத்திரிகையைத் தொடங்கினார். அதில் தமது சீரிய கருத்துக்களை வெளியிட்டதுடன், மெல்ல மெல்ல சுதேசி இயக்கத்திலும் ஈடுபடலானார்.

அப்போது தூத்துக்குடியில் ஒரு கப்பல் கம்பெனி இயங்கி வந்தது. 'பிரிட்டிஷ் - இந்திய ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி' என்று பெயர். அவர்கள் தூத்துக்குடிக்கும் இலங்கைத் தீவுக்கும் இடையே கப்பல் போக்குவரத்தை நடத்தி வந்தனர். போட்டிக் கம்பெனி எதுவும் அவர்களுக்கு இருக்கவில்லை. எனவே, அவர்கள் வைத்தது தான் சட்டமாக இருந்தது. தங்கள் விருப்பம் போல் கட்டணம் வசூலித்தனர். இந்திய வணிகர்கள் மிகுந்த நஷ்டத்துக்கு ஆளானார்கள். அதைக் கண்ட வ. உ. சி. இந்திய மூலதனத்தைக் கொண்டே, இந்தியர்களால் நடத்தப்படும் ஒரு கப்பல் கம்பெனியைத் துவக்க விரும்பினார். அப்போது, போட்டி ஏற்படும். அதனால், கட்டணங்கள் நியாயமான அளவுக்குக் குறையும் என்பது அவரது நம்பிக்கை. எனவே, அவர் பல வணிகர்களிடம் பேசினார். செல்வந்தர்கள் பலரின் பொருள் உதவியை நாடினார். அவற்றைக் கொண்டு ஒரு கப்பல் கம்பெனியை நிறுவினார். அதற்கு 'சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி' என்று பெயர். அதன் மூலம் ஒரு கப்பலை வாங்கி நடத்தினார். இதன் காரணமாகவே அவருக்குக் 'கப்பலோட்டிய தமிழர்' என்று பெயர் ஏற்பட்டது.

ஆங்கில அரசு சூழ்ச்சி செய்து அவரைச் சிறைக்கு அனுப்பியது. கப்பல் கம்பெனியையும் மூடியது.

''என்னங்க...? நான் கேட்டதற்குப் பதிலே இல்லையே...'' நம் மகனுக்கு என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள்...?'' என்றாள் மனைவி.

சிதம்பரத்திற்குச் சட்டென்று ஒரு நினைவு வந்தது. ''ஆ...ங்...! நல்ல பெயர். நினைவுக்கு வந்து விட்டது...'' என்றார் உற்சாகத்துடன்.

''என்ன பெயர்...?'' என்றாள் மனைவி.

''ஆறுமுகம் என்ற பெயரைச் சூட்டலாம்...''

''ஆறுமுகமா? அப்படி யாரும் நம் குடும்பத்தில் இருந்ததில்லையே...''

''குடும்பத்தில் இல்லாவிட்டால் என்ன? நம் குடும்பத்தில் ஒருவராகப் பழகி விட்ட நண்பர் ஒருவரின் பெயரை வைக்கலாமே...''


''நீங்கள் யாரைச் சொல்கிறீர்கள்...?''

''நமது கப்பல் கம்பெனி நன்றாக நடக்கப் பலவிதங்களில் உதவி செய்த நண்பர் ஆறுமுகத்தைத்தான் சொல்கிறேன்... அவர் செய்த உதவிகளுக்குப் பிரதியாக நாம் அவர் பெயரையே நம் மகனுக்குச் சூட்டுவோம்...'' என்றார் செய்நன்றி மறவாத அந்தச் செம்மல்.

''என்ன டிரைவர்! கார் வேறு எங்கேயோ வேகமாகப் போகுதே! எனக்குப் பயமா இருக்குது.''

''எனக்கும் பயமாத்தான் இருக்கு. பேசாம என்ன மாதிரி கண்ணை கெட்டியா மூடிக்குங்க.''

- ந. நவமணி, நல்லாலம்.



இரண்டாவது மகனுக்கு மட்டு மல்ல. இரண்டாவது மகளுக்கும் கூட அவர் பெயர் சூட்டிய விதம் புதுமை யானதுதான்.

சிதம்பரம் ஏற்படுத்திய கப்பல் கம்பெனி இரண்டு ஆண்டுகள் சிறப் பாக நடந்தது. அதுவும் மிகுந்த சிரமத் துடன்தான். ஆங்கிலேயரை எதிர்த்து அவரால் தாக்குப் பிடிக்க முடிய வில்லை. அரசு அவரைத் தண்டிக்க உரிய வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. விரைவிலேயே அந்த வாய்ப்பும் கிட்டியது.

விபின் சந்திர பாலர் என்று ஒரு தலைவர். ஒரு சமயம் அவர் சிறை யிலிருந்து விடுதலை பெற்றார். அந்த நாளைத் தமிழ் நாட்டினர் கொண்டாடி னர். அரசு அதற்குத் தடைவிதித்தது. சிதம்பரம் அந்தத் தடையை மீறிக் கூட்டம் போட்டுப் பேசினார். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட அரசு அவரைச் சிறையில் அடைத்தது. வழக்கு விசாரணை நடைபெற்றது. சிதம்பரத்துக்கு முதலில் ஆயுள் தண்டனை. பிறகு அது ஆறு ஆண்டு களாகக் குறைக்கப்பட்டது.

அவர் சிறையில் இருந்த போது, அவரது குடும்பம் மிகவும் சிரமப் பட்டது. அப்போதும் சரி, அவர் விடு தலையாகி வெளிவந்த பிறகும் சரி. அவருடைய குடும்பத்துக்கு நண்பர் ஒருவர் பொருள் உதவி செய்தார். அவர் பெயர் வேதிப்பிள்ளை என்பது. அவர் செய்த உதவிகளை சிதம்பரத்தால் மறந்து விட முடியவில்லை. தன் நன்றி யைச் செலுத்த விரும்பிய அவர், வேதிப்பிள்ளை என்பதை வேதவல்லி என்று மாற்றி, அதையே தனது இரண் டாவது மகளுக்குச் சூட்டி விட்டார்!

அதே போல் சுப்பிரமணியப் பிள்ளை என்று ஒருவர். அவரும் சிதம் பரத்திற்குப் பலவிதங்களில் உதவி செய்தவர். அவரது பெயரையே சிதம்பரம் தமது மூன்றாவது மகனுக்குச் சூட்டினார்.

சிறையில் இருக்கும் போது வ. உ. சி. பல அரிய நூல்களை எழுதினார். விடுதலை அடைந்ததும் அவற்றை அச்சிட்டு வெளியிட்டார். அத்துடன் அவர் மீண்டும் வக்கீல் தொழிலில் ஈடுபட விரும்பினார். ஆனால், அரசு அவருடைய சன்னத்தைப் பறிமுதல் செய்து வைத்திருந்தது. வழக்கறிஞர்



படிப்பை முடித்தவர்களுக்கு அவர்கள் வக்கீல் தொழிலில் ஈடுபட அரசு அளிக் கும் அனுமதிச் சான்றுக்குச் சன்னத்து என்று பெயர். அதை வ. உ. சி. திரும்பப் பெற முயன்றார். ஆனால் அரசு பிடிவாதமாகத் திருப்பித் தர மறுத்து விட்டது. அப்போது வாலஸ் என்ற ஆங்கிலேயர் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்தார். அவருக்கு வ. உ. சி. யிடம் அன்பு அதிகம். அவர் தான் மிகுந்த முயற்சி செய்து வ. உ. சி. யின் சன்னத்தைத் திரும்பப் பெற்றுத் தந்து, அவர் மறுபடியும் வக்கீல் தொழிலில் ஈடுபட உதவினர்.

வாலஸ் செய்தது சாதாரண உதவி அல்ல. மிகவும் மகத்தானது அல் லவா? அந்த உதவிக்கு வ. உ. சி. எப்படி நன்றி செலுத்தியிருப்பார் என்று உங்க ளுக்குத் தோன்றுகிறது? நீங்கள் நினைப்பது சரிதான். வ. உ. சி. க்கு நான்காவதாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த மகனுக்கு வாலஸின் பெயரை 'வாலீஸ்வரன்' என்று மாற்றிச் சூட்டி மகிழ்ந்தார். இவ்வாறு வ. உ. சி. தன் இறுதி மூச்சு உள்ள வரையில் செய் நன்றி மறவாத செம்மலாக வாழ்ந்தார்.

பாலத்தை எப்படிக் கடந்தார்? - போட்டி முடிவு

இந்தப் போட்டியில் 2148 பேர் கலந்து கொண்டு, எல்லோருமே சரியான விடையையும் எழுதி ஆசிரியரைத் திணற அடித்து விட்டார்கள்! பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க வழக்கப்படி குலுக்கல் முறைதான் உதவியது!

ரூ. 20 பரிசு பெறுவோர்:

1. கே. பெலிக்ஸ்,
த/பெ. திரு. எஸ். குழந்தை சாமி,
53, நம்பிக்கை நகர்,
திண்டிவனம் - 604 002.

2. பி. பூமா,
த/பெ. திரு. பாலசுப்ரமணியன்,
4, போஸ்ட் அண்டு டெலிகிராப் குவார்ட்டர்ஸ்,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

3. எம். என். ராஜா முகமத்,
10, கதீப் லப்பை சந்து,
நாகை, 611 001,
தஞ்சை மாவட்டம்.

4. ஜி. சாய்பாபா,
மே/பா. வி. கஸ்தூரி பாய்,
4-00 கீதா நகர்,
மல்காஜ் கிரி,
ஹைதராபாத் - 500 047

5. எஸ். கார்த்திகேயன்,
35, எப்ஃ, மாரியம்மன் கோவில் சன்னதி தெரு,
கீழப்பாலம்,
மன்னார்குடி - 614 001

சரியான விடை

மதிவாணன், சங்கரும் சுந்தரும் தூங்கும் நேரத்தில் பாலத்தைக் கடக்க நடக்கிறார். 15 ஆவது நிமிடம், தான் வந்த திசையிலேயே திரும்பி நிற்கிறார். அவர் நிற்கும் முனைக்கு அருகில் உள்ள காவல்காரர், அவர் தன்னுடைய முனையிலிருந்துதான் கட்டணம் செலுத்தாது கடக்க முயல்கிறார் என்று எண்ணி, அவரை இழுத்து வெளியே விட்டு விடுகிறார்!

இயற்பெயர் என்ன? - போட்டி முடிவு

இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை, மற்ற போட்டிகளில் க ல ந் து கொண்டவர் களோடு பார்க்கும் போது குறைவுதான். (1412). இருந்தும் ஒருவர் கூட சரியான விடையைத் தரவில்லை! ஐந்து தவறுகள் செய்துள்ள இருவர் மட்டுமே பரிசு பெறு கிறார்கள்! அதுவும் ஆறுதல் பரிசு! மற்றவர்கள் ஒன்பது தவறுகளுக்கு மேல்!

ரூ. 25/- பரிசு பெறுவோர் :

1. ப. நாகராஜன்,
த/பெ. திரு. சே. பரமசிவன்,
88/5, சுப்பையா தெரு,
ஜீவா காம்பவுண்டு,
விருதுநகர் - 626 002.

2. கி. சரவணன்,
த/பெ. திரு. கிருபாகரன்,
பிளாட் எண் 16.
விருந்தாவன், பாதாயம்,
வேலூர் - 2
632 002.

சரியான விடை :

1. ராம்மோகன் - ராஜாராம் மோகன்ராய்
2. ஹெலன் ஆடம்ஸ் - ஹெலன் கெல்லர்
3. பிரான் காய்ஸ் மாரியா அரோயெட் - வால்டேர் (சிந்தனையாளர்)
4. சித்தார்த்தன் - கௌதம புத்தர்
5. அக்னஸ் கான்ஷா பெஜாட் சூ - அன்னை தெரசா
6. கான்ஸ்டென்டைன் ஜோசப் பெஸ்கி - வீரமாமுனிவர்
7. நரேந்திரன் - சுவாமி விவேகானந்தர்
8. பீமராவ் - பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கார்
9. முகமத் குர்ரம் - ஔரங்கசீப்
10. ஜலாலுத்தீன் முகமது - அக்பர்
11. கதாதர் - இராமகிருஷ்ண பரமஹம்சர்
12. விளாடிமீர் இலி இச் உலியனால் லெனின்
13. விநாயக் நரஹரிபாவே - வினோபா பாவே.
14. மயில்வாகனன் (இலங்கை) - விபுலானந்த அடிகள்
15. வி. கோ. சூர்ய நாராயண சாஸ்திரியார் - பரிதிமாற் கலைஞன்.



நேர்மையான தண்டனை!

மங்கைபுரம் என்ற நாட்டை ராணியார் குஞ்சிகாதேவி சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தாள். அரசியார் தினமும் மாலை வேளைகளில் மந்திரிகள் சிலருடனும், வீரர்கள் சிலருடனும் நகர்வலம் செல்வது வழக்கம்.

ஒருநாள் நகர்வலம் சென்ற போது நகருக்கு வெளியே சற்றுத் தொலைவில் திடீரென்று அரசியாரின் நெற்றியில் கல் ஒன்று வந்து தாக்கியது. கல்பட்ட இடத்திலிருந்து இரத்தம் கசிந்தது. ராணியார் வலியாலும், எரிச்சலாலும் துடிதுடித்து விட்டார். அரசியுடன் வந்த வீரர்கள் ஓடோடிச் சென்று ஓர் பெண்மணியையும், ஒரு சிறுவனையும் பிடித்துக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

அந்தப் பெண்மணி பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தாள். சிறுவனோ ''அம்மா பசிக்கிறது, பசிக்கிறது'' என்று ஈனஸ்வரத்தில் முனகிக் கொண்டிருந்தான். பெண்மணி அரசியாரை வணங்கி ''அரசியாரே! நான்கு நாடகளாக எனது பையனும், நானும் கடும் பட்டினி. கணவனை இழந்த நான் உறவினர்கள் யாரும் உதவாத நிலைமையில் எனது சொந்த ஊரை விட்டுக் கால்நடையாக என் பையனோடு நடந்து வருகிறேன். அதோ பாருங்கள்! அங்குள்ள மாமரத்தில் மாம்பழங்கள் ஏராளமாகப் பழுத்துத் தொங்குகின்றதல்லவா? அதில் ஒரு பழத்தை அடித்து என் பையனின் பசியைப் போக்க முயற்சித்தேன். ஆனால், கல்லெறியும் போது நடுவில் நீங்கள் வந்து விட்டதால் உங்கள் மீது கல் பட்டு விட்டது. ராணியாரே, நான் வேண்டுமென்று இந்தக் குற்றத்தைச் செய்யவில்லை. கருணை செய்து என்னை

மன்னித்து விடுங்கள். திக்கற்ற நான் இந்த நாட்டுக்கு வந்து ஏதாவது வேலை செய்து பிழைத்து வாழலாம் என்று நம்பிக்கையோடு வந்தேன். என் தலைவிதி! நாட்டில் நுழைவதற்கு முன்பே அபசகுனம் மாதிரி இப்படி நேர்ந்து விட்டது. நாங்கள் எங்கள் சொந்த ஊருக்கே திரும்பிச் செல்கிறோம். கருணை கூர்ந்து எங்களைத் தண்டிக்காது விட்டு விடுங்கள். நாங்கள் இப்படியே திரும்பி விடுகிறோம்' என்று கெஞ்சினாள்.'

அந்தப் பெண்மணியின் கதை அதோடு முடியப் போகிறது. அரசியார் ஏதாவது கடுந்தண்டனை தரப் போகிறார் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால், நடந்தது என்ன?

அரசியார் தனது மந்திரியிடம் 'இப் பெண்ணிற்கு ஆயிரம் பொற்காசுகளும், உணவுப் பொருட்களும் கொடுத்து, நமது நாட்டில் தங்கி ஏதாவது தொழில் செய்ய ஏற்பாடு செய்து கொடுங்கள்' என்று உத்தரவிட்டார்.

அரசியாருடன் இருந்த அமைச்சர்களும், வீரர்களும் ''அரசியாரே! இப் பெண் உங்களைக் கல்லால் அடித்திருக்கிறாள். உங்களுக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டு ரத்தம் வடிகிறது. அதனால், இவளுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.


அரசியார் மிகுந்த அமைதியுடன், ''அமைச்சர்களே! அறிவற்ற மரம் கூட, கல்லால் அடித்துத் தன்னைத் துன்புறுத்துவோருக்குத் துன்பம் தராமல் சுவைமிகுந்த பழவகைகளைக் கொடுக்கிறது. தன்னை வெட்ட வருபவனுக்குக் கூட நிழல் தர மரம் மறந்ததில்லை. அப்படியிருக்க, பகுத்தறிவு பெற்ற ஆறறிவுள்ள நாம், அறியாமல் இவள் செய்த குற்றத்திற்கு இவளைத் தண்டிக்கலாமா? அது மனித தர்மமாகுமா?'' என்று கேட்டார். அனைவரும் தலைகுனிந்தனர்.

பெண்மணிக்கும் அவளது மகனுக்கும் புது வாழ்வு கிடைத்தது என்பதைச் சொல்லவா வேண்டும்?

- உஷா கிருஷ்ணமூர்த்தி,
சென்னை - 28.

முட்டாள் தூதுவன்!

ஓங்கு மலை நாட்டு அரசர் ஒரு முறை பக்கத்து நாட்டிற்கு அறிவாளியானவனும் முகம் அலங்கோலமானவனுமான என்சிங் என்பவனைத் தனது தூதுவராக அனுப்பினார். பக்கத்து நாட்டு அரசன் மிகுந்த கர்வம் கொண்டவன் என என்சிங்குக்குத் தெரியும். இருந்தும் மறுக்கவில்லை. பக்கத்து நாட்டிற்கு விரைந்தான்.



என்சிங்கைப் பார்த்து அயல்நாட்டு அரசன் ''என் நாட்டிற்குத் தூதுவர, போயும் போய் உன்னையா உங்கள் அரசர் அனுப்பி வைத்தார்!'' எனக் கர்வத்தோடு இகழ்ச்சியாகக் கேட்டான்.

இதைக் கேட்ட என்சிங், ''அரசே, எங்கள் நாட்டில் ஒரு வழக்கம் உள்ளது. எந்த நாட்டிற்குத் தூது போக வேண்டுமோ அந் நாட்டு அரசர் அறிவாளியாக இருந்தால் அறிவாளியையே தூது அனுப்புவோம். முட்டாளாக இருந்தால் முட்டாளையே தூது அனுப்புவோம். தற்போது உங்கள் நாட்டிற்குத் தூது வர எங்கள் நாட்டில் என்னை விடப் பெரிய முட்டாள் எவரும் இல்லை. எனவேதான் என்னைத் தூது அனுப்பினார்கள்,'' என்று பணிவுடன் என்சிங் கூறினான். அரசனின் ஆணவம் அழிந்தது.

- ஜ. சலீம், வந்தவாசி.

கேளுங்கள் சொல்லப்படும்

— சேரநம்பி

✱ பு. கோலமணி, சிக்கல்

சமையல் கலையைப் பற்றி எழுதப் பட்ட முதல் நூல் எது?

கையில் கிடைத்துள்ள விவரங் களில் இருந்து இந்திய சமையல் கலை பற்றிப் பெரிய அளவில் எழுதப்பட்ட முதல் நூல் என்ற பெருமைக்குரியது ''நிமத்நாமா'' என்ற பெயருடையது. இது 16 ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டதாகும். நாதிர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் பாரசீகர்களுக்கு இந்திய சமையற்கலையை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் எழுதப் பட்டது இது. மாளவத்தைச் சேர்ந்த கைதேர்ந்த சமையற்கலைக் கலைஞு ரால் இது பாரசீக மொழியில் எழுதப் பட்டு, விளக்கமான சித்திரங்களும் சேர்க்கப்பட்டிருந்தன. இதன்படி சமை யல் செய்து சாப்பிட்டவர்கள் என்ன ஆனார்கள் என்பது நமக்குத் தெரியாது!

✱ கி. பிரபாகரன், பெங்களூர் - 4

a. சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தொலைவு எந்த மாதத்தில் குறையும்? b. ஜூன் மாதத்தில் இந்திய நகரங்களில் பகல் நேரம் எங்கு அதிக மாக இருக்கும்?

a. ஜூன் மாதத்தில்தான் குறையும்.
b. உங்கள் ஊரில்தான்.

✱ து. மோகன் ராஜ், திண்டிவனம் & ஜி. சம்சுதீன், அதிராமபட்டினம்.

ஒளியாண்டு என்கிறார்களே, அது என்ன?

ஒரு வருட காலத்தில் ஒளியானது ஊடுருவிச் செல்லும் தூரம்தான் ஒளி யாண்டு. இது கோள்களின் தொலைவை அளக்கப் பயன்படும் அறிவியல் 'ஸ்கேல்'.

✱ சே. மாரிமுத்து, மு. பாதிரிராஜ், கடலூர்.

மற்ற வங்கிகளுக்கும், ரிசர்வ் வங் கிக்கும் பொது மக்களைப் பொறுத்த வரை என்ன வித்தியாசம்?

மற்ற வங்கிகளில் நீயும் நானும் உட்பட யார் வேண்டுமானாலும் கணக்கு வைக்கலாம். ரிசர்வ் வங்கியில் தனிப்பட்டவர்கள் கணக்கு வைக்க முடி யாது.

✱ வி. திருமேனி, திண்டுக்கல்

பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்ளாது இருந்தால் என்னவாகும்?

சூரியன் கிழக்கே உதித்து மேற்கே மறைய மாட்டான்! இது தே வ முதல் விளைவாக இருக்கும்.

✱ வூ. செந்தில்குமார், மயிலாடுதுறை.

குத்துச் சண்டை வீரர் முகமது அலி ஈரானைச் சேர்ந்தவர் என்கிறேன் நான். ஆப்கானிஸ்தானைச் சேர்ந்தவர் என்கி றான் என் நண்பன். பந்தயம் போட்டி ருக்கிறோம்.

சரியான பதில் அமெரிக்கர். பரிசை எனக்கு அனுப்பி விடுங்கள்!

✱ அ. தமிழரசி, திருப்பூந்துருத்தி

ராம் ரஹீம் என்ற இந்திய - முஸ்லீம் இணைப்புச் சொல்லை முதலில் பயன் படுத்தியது காந்தியடிகள் தானே?

அதுதான்இல்லை. அக்பர் காலத் தில் வாழ்ந்த கபீர்தாஸ்தான் இதைப் பயன்படுத்தினார்.

✱ பூ. செல்லதுரை, வ. மாணிக்கம், மதுரை.

ஏ.வி.எம். தங்கப் பதக்கம், செல்லப்பன் பரிசு, எல்லப்பா - ரங்கம்மா அறக்கட்டளைப் பரிசு என்றெல்லாம் கூறுகிறார்களே... இவற்றை யார் நடத் துகிறார்கள்?

சரியான நேரத்தில் கேட்டிருக் கிறீர்கள். இவற்றைக் குழந்தை எழுத் தாளர் சங்கம் நடத்துகிறது. திரு. நெ. சி. தெய்வசிகாமணி, தலைவர் குழந்தை எழுத்தாளர் சங்கம், 309, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை - 1 என்ற முக

வரிக்கு எழுதிக் கேட்கவும்.

✱ க. கண்ணபிரான், புதுக்கோட்டை - 1

குழந்தைக் கவிஞருக்குப் பிறகு அவரது குடும்பத்தினரில் யாராவது குழந்தை இலக்கியப் பணி செய்து வருகிறார்களா?

கோகுலத்தை நீங்கள் தொடர்ந்து படிக்கவில்லை என்பது தெரிகிறது. கோகுலத்தில் எழுதி வரும் தேவி நாச்சியப்பன் குழந்தைக் கவிஞரின் கடைசி மகள்தானே? குழந்தைக் கவிஞர் இருக்கும்போதே அவர் இத் துறைக்கு வந்து விட்டார். நூல்களும் எழுதியுள்ளார்.

✱ லூ. கண்மணி மீனா, ஊத்துக்குளி.

எறும்புகள் தூங்குமா?

தரையில் குழிபறித்து, கால்களை மடித்துக் கொண்டு தூங்கும்! நம்மைப் போலவே சோம்பல் முறித்துக் கொட்டாவியும் விடும்!

✱ எ. ஆரோக்கியம் ஜார்ஜ், விக்கிர வாண்டி


நண்டுகளுக்கு மூக்கு உண்டா? அவை எப்படி சுவாசிக்கின்றன?

நண்டுகள் அவற்றின் கால்களில் உள்ள அதிசய அமைப்பால் சுவாசிக்கின்றன. நண்டு பிடிப்பவர்களில் திறமையானவர்கள், நண்டைப் பிடித்ததும் அவற்றின் கால்களை வெட்டி மண்ணைப் பூசி விடுவார்கள். அதன் ஆயுள் முடிந்து விடும்!

✱ பூ. வீரமணி, சொற்கை, க. செங்கை அழகன், திருத்தணி.

கோகுலத்தில் ஒரு வரலாற்றுத் தொடர்கதையை ஆரம்பிக்கலாகாதா? ஒரு மாற்றம் இருக்குமே. ஸ்போர்ட்ஸ் கட்டுரைகளை மீண்டும் தொடங்கலாகாதா?

யோசனைகள் கருத்தில் கொள்ளப் பட்டன. உரிய நேரம் வரும் போது செய்யப்படும்.




★ ஆஸ்திரேலியாவில் ஆண்டுதோறும் நடைபெறும் போட்டியில் "டாமி" என்னும் எலி பல சாதனைகளைச் செய்துள்ளது. சறுக்கிக் கொண்டிருக்கும்போதே பல்டி அடித்துத் திரும்பவும் சறுக்குகிறது. இந்தப் போட்டியைக் காண உலகெங்கிலிருந்தும் பல பேர் வருகிறார்கள். பூனைகள் வராமலிருந்தால் சரி!

- தக்கோலம். அ. முஸ்தபா.

★ அமெரிக்காவில் மிகப் பிரபலமான வங்கித் திருடன் ஜெஸ்ஸி ஜேம்ஸ். இவன் முதன் முதலில் கொள்ளையடித்தது மாண்டனாவில் உள்ள வங்கியைத்தான். இதனால் அவனது நினைவாக அந்த வங்கிக்கு அவனது பெயரையே சூட்டியுள்ளார்கள். அது மட்டும் அல்ல. "ஜெஸ்ஸி ஜேம்ஸ் பேங்க்" என்ற அந்த வங்கிப் பகுதியில், திருடனாக இருந்த போது ஜேம்ஸ் உபயோகித்த பொருட்கள் காட்சி பொருள்களாகவும் வைக்கப் பட்டுள்ளன.

- க. இரா. விஜயகுமார்.





யார் தலையில் விழும்?-போட்டி

பாபு, கோபு, நீலு மூவரும் நெருங்கிய நண்பர்கள். சென்னையை அடுத்த மகாபலிபுரத்திற்கு சுற்றுலா சென்றார்கள். திரும்பும் போது பஸ்ஸில் ஒரே கூட்டம்; நெரிசல் தாங்கவில்லை. எப்படியோ முண்டியடித்து மூவரும் இடம் பிடித்து விட்டனர். ஆனால் பிடித்த இடம், அடுத்தடுத்து இல்லாமல் முதல் வரிசையின் நடுவில் பாபுவுக்கும், அதற்கு சரியாக அடுத்த பின் வரிசையில் கோபு, நீலுவுக்கும் இடம் கிடைத்தன.

அந்த வரிசைகள் எல்லாமே மூன்று பேர் உட்காரும் வரிசை. பாபுவுக்கு வலது பக்கம் ஒரு புஸ்தி மீசைக்காரர் இருந்தார். இடது பக்கம் ஒரு கடுக்கன்காரர்.

அடுத்த வரிசையில் முதலில் ஒரு மொட்டைத் தலைக்காரர். அடுத்து கோபு. அவனை அடுத்து ஜன்னலோரமாக நீலு.

பாபு மொட்டைத் தலைக்காரரிடம் தன்னுடைய இடத்தில் அவர் உட்கார்ந்து கொண்டால் தனது நண்பர்களோடு பேசிக் கொண்டு வர வசதியாக இருக்கும் என்று கேட்டுப் பார்த்தான். ''அதெல்லாம் முடியாது'', என்று அவர் பதில் கூறிவிட்டார். நண்பர்கள் பேசாமல் இருந்து விட்டனர். பஸ் கிளம்பியது.

சரியாக பாபுவின் தலைக்குமேல் பஸ்ஸில் ஒரு விளக்கு இருந்தது. சிமிழ் வடிவத்தில் இருந்த அதன் கண்ணாடி மூடி, சரியாகப் பொருத்தப் படாத காரணத்தால் 'லொட் லொட்' என்று ஆடிக் கொண்டே இருந்தது. திருக்கழுக்குன்றத்தைத் தாண்டும் போது, கண்ணாடி மூடி சுத்தமாகக் கழன்று விழுந்தது!

அந்தச் சமயத்தில் பஸ் வேகமாக இடது புறம் வளைந்து திரும்பியது.

மேலே உள்ளதை மீண்டும் மீண்டும் கவனமாகப் படியுங்கள். இதில் உள்ள ஒவ்வொரு விளக்கமும் மிக மிக அவசியமானவை.

இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் கழன்று விழுந்த விளக்கின் கண்ணாடி மூடி யார் தலையில் விழுந்திருக்கக் கூடும் என்பதை ஊகித்து எழுத வேண்டியதுதான். உங்கள் முடிவுக்கான காரணத்தையும் நீங்கள் எழுத வேண்டும். கூப்பனை இணைக்க வேண்டும். பரிசு கண்டிப்பாக உண்டு.

யார் தலையில் விழும்?
- போட்டி

பெயர் :

வயது :

முகவரி :

பின்கோடு ....

முடிவு தேதி 15.9.91

வாசகர் தபால்

ஏமாற்றம்!

★ கிராமத்து வாசகர்களை "உங்க ஊரில் இருக்கா?" சிறுகதை மகிழச் செய்தது. மேலும் மரம் வளர்க்க தூண்டு கோலாகிவிட்டது. பாராட்டுக்கள்.
மகிழஞ்சேரி, கே. ரவிச்சந்திரன்.

★ "பாம்புகள் உலகம்" அப்பப்பா படிக்கும்போதே உடம்பு சிலிர்க்கிறது!
தக்கோலம், பி.அ. முஸ்தபாகமால்.

★ அமரர் 'பெ. தூரன்" அவர்களின் "அற்புதச்செடிகள்" சிறுகதை மிக அற்புதமான படைப்பு....!
பரங்கிப்பேட்டை, பி.எஸ். மணிமாறன்.

★ 'பாடத்தை மட்டும் படிடா!' நாடகத்தை படித்த போது, "புத்தக அறிவுமட்டும் போதாது. பொது அறிவும் வேணும்னு" எங்க ஆசிரியர் அடிக்கடி சொல்லுவாரு. என்ற வரிகள் பசுமரத் தாணியாக நெஞ்சில் பதிந்தது.
ஸ்ரீமுஷ்ணம், சா. கிருஷ்ணசாமி.

★ சுதந்திரம் பற்றி 6 பேரிடம் பேட்டி வித்தியாசமாக இருந்தது.
குத்தாலம் - 1, ஜி. வெங்கடேசன்.

★ மலைக் கோட்டை மர்மம். வாசகர்களின் கவனத்தை ஈர்ப்பதோடு மிகவும் விறுவிறுப்பாகச் செல்கிறது. படமும் வெகு சூப்பர்.
தடுத்தாள்கொண்டபுரம், பி. ஆத்மநாதன்.

★ 'பேய் குப்பைத் தொட்டி' கதை, மாணவர்களின் நட்பு எப்படி இருக்க வேண்டுமென்பதைத் தெளிவாகவே உணர்த்தியது.
குடந்தை, எஸ்.கே. மூர்த்தி.

★ இறந்து மீண்ட சுதந்திர போராட்ட வீரர், அரவிந்தரின் சுருக்கமான வரலாறு, சுதந்திர தின மாத இதழில் பொருத்தமாக பிரசுரித்துள்ளது... சூப்பர்.
குடந்தை, பால. கிருஷ்ணமூர்த்தி.

★ ஒருவருக்கு பேரும், புகழும் அளிப்பது அவர்களிடம் உள்ள அறிவுதான்' என்ற கருத்தை மிக அழகாக, 'அற்புத மேதை! அதிசயக்கழுதை!' படக்கதை விளக்கியது.
செஞ்சி - 2, தா. ஷேக் உசேன்.

★ மயிலாசனம் தோன்றிய விதத்தை கட்டுரை வடிவில் தந்த கோகுலத்திற்கு என் பாராட்டுகள் பல.
செஞ்சி - 2, தா. ஷகிலா.

★ சின்னஞ்சிறு தியாகிகள் பற்றிய தொடரை இப்போதே ஆவலுடன் வரவேற்கத் தயாராகிவிட்டேன். தொடர் எப்போது வெளிவரும் எனத் தெரியப் படுத்தவும்.
சென்னை - 21, சா.இரா. ரகுமான்தாசன்.

★ ஆகஸ்ட் இதழில் சிறுவர் சங்கச் செய்திகள் மட்டுமா இடம்பெறவில்லை? எங்களின் மனங்கவர்ந்து அறிவைக் கூர்மைப்படுத்தும் 'அறிவியல் உண்மைக் கதை'யும்தான் இடம் பெறவில்லை.

இப்படி ஒரே நேரத்தில் எங்களுக்கு இரண்டு ஏமாற்றங்களைத் தந்துவிட்டீரே!
சென்னை - 21, சா.இரா. மணி.

★ "நான் திருடலே" கதை மிகவும் என்னைக் கவர்ந்து அதைப் படிக்கும் போது நானே கண்ணீர் விட்டு அழுதுவிட்டேன்.
ஆண்டிப்பட்டி, எம். குமரவேல்.

★ எட்டு வயதில்பிளாக் பெல்ட் வாங்கி கின்னஸ் சாதனை படைத்த ராகவனைப் பற்றி படித்ததும், முயற்சிக்கும், திறமைக்கும் வயது ஒரு தடையல்ல என்றே எண்ண தோன்றியது.
சிதம்பரம், என்.ஆர். பாஸ்கரன்.

★ ஆகஸ்ட் மாத கோகுலத்தின் அட்டையைப் பார்த்ததும் ஏதோ வெளிநாட்டு பத்திரிகையை பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. இம்மாத அட்டை ரியலி ஃபென்டாஸ்டிக் சார்!
திருவட்டார் (குமரி), தா. சிந்துகுமார்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145: சர்க்குலேஷன் மானேஜர்: 2344190: விளம்பரம் — சந்தா: 2344157: டைரக்டர்: 2341543.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-: வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 60/-: விமானத் தபால்: ரூ. 135/-.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/-: வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 120/-: விமானத் தபால் ரூ. 270/-.



REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

